THAYAGAM

75¢

20.5.94

உண்மை:5
ஏடு:46

# தாயகம்

# காமினி மீண்டும் பாராளுமன்றத்துள்!

## இலங்கை இந்திய ஒப்பந்த ஆதரவாளர் பாதுகாப்பு அமைச்சரானல் இந்திய தலையீடு சாத்தியமா?

**இராணுவத் தாக்குதலை எதிர்கொள்ள தயாராகும் புலிகள் பங்கர் அமைக்கும்படி மக்களுக்கு கோரிக்கை**

**வடக்கு கிழக்கு இணைப்புக்கு தொண்டமான் புதிய திட்டம்**

**சொத்தி உபாலியின் தொடர்பால் அவலப்படும் சிறிசேன கூரே**

**பிரேமதாசாவின் கொலையில் மகளுக்கு சந்தேகம்**

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CD விற்பனையாளர்

SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru Niru

# தரத்தின் சின்னம்
# நிரு பிராண்ட்®
# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை
வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன்
தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள்
எப்பொழுதும் கிடைக்கக் கூடிய
வர்த்தக நிலையங்களை அறியலாம்

Second class mail Registration No:8435




# தாக்குதலை எதிர்கொள்ள புலிகள் தயார் நிலையில்!

இலங்கை இராணுவம் தாக்குதல் ஒன்றை பாரிய அளவில் நடத்தக் கூடும் என்றும் அதற்கு மக்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் புலிகள் மக்களை எச்சரித்துள்ளதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளிலும் பல்வேறு இடங்களில் புலிகள் தங்கள் நிலைகளைப் பலப்படுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். முன்பு முகாம்களைச் சுற்றியே அவர்களின் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. இராணுவம் எங்கே தாக்கும் என்பது தெரியாததாலேயே பல இடங்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று வவுனியா வந்த ஒருவர் வெளிநாட்டு நிருபர்களுக்கு தெரிவித்தார். யாழ்.பகுதியில் விமான நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

ஆனையிறவு, பலாலி முகாம்களைச் சூழ புலிகள் பெருமளவில் பாதுகாப்பு அரண்களை அமைப்பதாக பிரிகேடிய கெமுனு குலதுங்க தெரிவித்திருக்கிறார்.

பங்கர்கள், குழிகளை வெட்டியும் மற்றும் முற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டும் தாக்குதலுக்குள் தங்களை பாதுகாத்துக் கொள்ள மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புலிகள் மக்களுக்கு தெரிவித்துள்ளனர்.

# பாராளுமன்றத்தில் காமினி

நீண்ட எதிர்பார்ப்புகளின் பின்னர் காமினி திசநாயக்க தற்போது மீண்டும் பாராளுமன்றத்தினுள் நுழைந்துள்ளார். கடந்த வியாழக்கிழமை இவர் பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அடுத்த ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களுக்கு முன்னதாக தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்ள காமினிக்கு இது சந்தர்ப்பமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய பட்டியலில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது பதவியை விட்டு விலக சம்மதித்ததை அடுத்தே இவருக்கு இந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. பிளவுகளுக்குள் சிக்கித் தவிக்கும் ஐ.தே. கட்சிக்குள் தனது செல்வாக்கை நிலைநிறுத்தவும் கட்சியை ஒருமைப்படுத்தவுமே ஜனாதிபதி இவரை பாராளுமன்றத்திற்குள் கொண்டு வந்ததாகவே கருதப்படுகிறது.

பதவி ஏற்ற பின்னர் நிருபர்களிடம் பேசிய காமினி 'ஐ.தே.கட்சி 77 முதல் ஆட்சியில் உள்ளது. இதனால் ஓரளவு களைத்துப் போயுள்ளது. நாங்கள் கட்சிக்கு இளமையூட்ட வேண்டும்' என்று கூறினார். நாடு அடைந்த பாரிய பொருளாதார முன்னேற்றத்திற்கு ஐ.தே.கட்சியே பொறுப்பு என்றும் ஓரளவு புனரமைப்புடன் கட்சி மீண்டும் வெல்லும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். அவ்வாறு தோல்வியுற்றாலும் தோல்வியை ஏற்றுக் கொள்வதாகவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னணியில் இருந்த காமினி ஜே.ஆர் ஆட்சிக்காலத்தில் செல்வாக்குள்ளவராக இருந்தார். இவருக்கு விரைவில் மந்திரிப்பதவிகள் எதுவும் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக பாதுகாப்பு அமைச்சு இவரிடம் கையளிக்கப்படலாம் என்றும் அவ்வாறு அளிக்கப்படும் பட்சத்தில் இந்தியாவுடனான உறவுகளை மீளமைத்து புலிகளுடனான யுத்தத்தில் இந்தியாவை தலையிட வைக்கலாம் என்றும் கொழும்பு வட்டாரங்கள் ஹேஸ்யம் தெரிவித்துள்ளன.

# பிரேமாவின் கொலையில் மகளுக்கு சந்தேகம்

தனது தந்தை புலிகளால் கொல்லப்பட்டார் என்பதில் தனக்கு சந்தேகங்கள் உள்ளதாக பிரேமதாசாவின் மகள் தெரிவித்திருக்கிறார். புலிகளின் மீது குற்றம் சாட்டுவதற்கு முழுமையான ஆதாரங்கள் இல்லை என்று பிரேமதாசாவின் மகளான துலாஞ்சலி ஜெயக்கொடி தெரிவித்திருக்கிறார் என ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மே மாதம் பிரேமதாசா கொல்லப்பட்டதற்கு புலிகள் மீதே குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

மே 12ம் திகதி ஜனாதிபதி விஜேதுங்கவுக்கு எழுதிய கடிதத்தில் தனது தந்தையின் மரணம் குறித்த விசாரணைகள் உயர்தரத்திலானவையாக அமையவில்லை என்றும் ஆபத்தான விதத்தில் அமைந்ததாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். இந்தக் கடிதத்தின் பிரதிகள் பிரதமர், அமைச்சர்கள், பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

'எனது தந்தையின் மரணம் குறித்து முழு அளவிலான விசாரணைகள் நடத்தச் செய்வதில் நான் உறுதியாயுள்ளேன்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சியின் செயலாளர் டாக்டர் விஜேசேகர கருத்து தெரிவித்த போது ஜனாதிபதி விசேட விசாரணைக்குழு ஒன்றை அமைப்பதற்கு சாதகமாயுள்ளார் என்று கூறியுள்ளார். கண்டியில் முக்கிய பிக்கு ஒருவரைச் சந்தித்த போதே விஜேசேகர இந்தக் கருத்தை தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கு இணைப்புக்கு தொண்டா புதிய திட்டம்

தொண்டமான் தற்போது வடக்கு கிழக்கு இணைப்புக்கு புதிய வியூகம் ஒன்றை வகுத்துள்ளதாக கொழும்பு செய்திகள் கூறுகின்றன. இதன்படி கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளான அம்பாறை, சேருவில போன்ற பகுதிகள் பிரிக்கப்பட்டு மற்ற மாகாணங்களுடன் சேர்க்கப் படுவதுடன் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவாழும் கல்முனை, சம்மாந்துறை போன்ற பகுதிகள் தனி அமைப்பாக உருவாக்கப்பட்டு இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தின் கீழ் ஒரு பிரிவாக செயற்படும். இதன் மூலம் சிங்களவர்கள், முஸ்லிம்களை திருப்திப்படுத்த முயற்சி நடக்கிறது.

மாகாண சபை என்ற உயர் அமைப்பு மட்டுமே இதன் மூலம் வழங்கப்படக் கூடிய தீர்வாகும். இந்த திட்டத்தில் புதிதாக ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்ட காமினி திசநாயக்கவின் மைத்துனரான கலாநிதி விக்கிரம வீரசூரியவும் தொண்டமானும் சேர்ந்து திட்டமிட்டு வருகிறார். இவர்கள் இருவரும் தற்போது இது குறித்து தமிழ் அமைப்புகளுடன் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே சில தமிழ் அமைப்புகள் சிங்களப் பகுதிகளை விட்டுக் கொடுக்கும் எண்ணத்தில் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# பிரபாகரனின் மெய்காவலர் தற்கொலை

பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலரான றிச்சாட் மே முதல் தேதியன்று செம்மணி மயானத்தில் தற்கொலை செய்து கொண்டதாக தினமுரசு வாரமலர் தெரிவித்திருக்கிறது. அரியாலையைச் சேர்ந்த தர்மலிங்கம் தியாகலிங்கம் என்ற இவர் பிரபாகரனின் குடும்ப பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டதாகவும் இந்த நேரத்தில் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவின் மனைவியுடன் தொடர்பு ஏற்பட்ட போது அதை அறிந்த புலிகளின் உளவுத் துறை எச்சரித்ததாகவும் அதை மீறி கையும் மெய்யுமாக கைது செய்யப்பட்டு புலிகளின் உளவுத்துறையால் காவலில் வைக்கப்பட்ட போது அங்கிருந்து தப்பியோடியதாகவும் பின்னர் வீட்டுக்கு செல்ல முயன்ற போது அங்கு புலிகள் சுற்றி வளைத்ததால் நஞ்சருந்தித் தற்கொலை செய்ததாகவும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இவரது உடலை பெற்றோரிடம் கையளித்து உடனடியாக தகனம் செய்யும்படி புலிகள் தெரிவித்ததாகவும் எந்த வித வைபவமும் இன்றி இவரது உடல் தகனம் செய்யப்பட்டதாகவும் தினமுரசு தெரிவித்திருக்கிறது.

# லலித் மனைவி தலைமையில் கட்சி

தற்போது காமினி விலகிய நிலையில் லலித்தின் மனைவி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை நடத்திச்செல்ல முன்வந்திருக்கிறார். இந்தக் கட்சி சுதந்திரக் கட்சியைத் தலைமையாகக் கொண்ட பொதுமக்கள் முன்னணியுடன் தொடர்புகளைப் பேணும்.

# வாஷிங்டனில் ராவ்

வாஷிங்டனுக்கு விஜயம் செய்த நரசிம்மராவ் காங்கிரஸில் உரையாற்றியதுடன் ஜனாதிபதி கிளின்டனையும் சந்தித்துள்ளார். இரண்டு நாடுகளுக்கும் இடையில் வேறுபாடுகள் இருந்த போதிலும் நெருக்கமாக இணைந்து செயற்பட வேண்டும் என்று இரு தரப்பினரும் தெரிவித்திருக்கிறார்கள்.

நரசிம்மராவ் கிளின்டனை இந்தியாவுக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று விடுத்த அழைப்பை கிளின்டன் ஏற்றுக் கொண்டார்.

வெள்ளை மாளிகைக்கு வெளியே காஷ்மீர், பஞ்சாப்பைச் சேர்ந்த குழுக்கள் பதாகைகளைத் தாங்கிய வண்ணம் ஆர்ப்பாட்டம் நடத்தின. தமிழ் குழுக்களும் ஆர்ப்பாட்டம் நடத்த முயற்சித்ததாக கூறப்பட்டது.

# லலித் கொலை வழக்கு ஆரம்பம்

லலித் கொலை சம்பந்தமாக புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் கந்தையா லிங்கேஸ்வரன் மீது வழக்குத் தொடர சட்டமா அதிபர் முடிவு செய்திருப்பதாக கொழும்பு செய்திகள் கூறுகின்றன. லலித்தைக் கொல்ல சதி செய்ததாகவும் ரகுநாதன் என்ற கொலையாளிக்கு உதவியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பாலன், குஞ என்ற பெயர்கள் உள்ள இவர் இந்தக் கொலைக்காக புலிகளின் தலைமைப் பீடத்தின் ஆணையின் பேரில் கொழும்பு வந்ததாகவும் குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த போது அடையாள அட்டை இல்லாததால் கடற் படையினரால் புறக்கோட்டையில் வைத்து கைது செய்யப்பட்ட லிங்கேஸ்வரனை படையினர் சேட்டை கழற்றும்படி சொன்ன போது அவர் அவர்களை சுட முயன்றதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

# கைது செய்யப்பட்ட உபாலி

சொத்தி உபாலியின் கைது மூலம் ஐ. தே.க அரசு தனது பாவங்களைக் கழுவி அவனைப் பலிக்கடாவாக்க முயல்வதாக குற்றம் சாட்டப்படுகிறது. தியேட்டர்களில் டிக்கட் விற்பனையில் ஈடுபட்ட உபாலி பிரேமதாசாவுடனான தொடர்பு மூலம் ஐ.தே.கட்சியின் நிறைவேற்றுக் குழுவில் உறுப்பினரானான். ஜே.வி.பி காலத்தில் நாடு முழுவதும் சுவரொட்டி ஒட்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டது உபாலியே. தற்போது காமினி, விஜேதுங்கவினரின் கை ஓங்கியதை அடுத்து கூரேயின் கையாள் என்று கருதப்படும் உபாலியைப் பழிவாங்கும் படலம் ஆரம்பமாகியது. காமினி, ரெனி போன்றோருக்கு இடம் விடுவதற்காக தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களை ராஜினாமா செய்யும்படி கோரியபோது அவர்களை ராஜினாமா செய்ய வேண்டாம் என்று உபாலி மிரட்டியதாக கூறப்படுகிறது.

# பலாலியில் மோதல்

பலாலிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் இராணுவத்தினர் ஒருவர் கொல்லப்பட்டார். கடந்த புதன்கிழமை பலாலியின் கிழக்குப் பகுதியில் அதிகாலை பங்கர் பகுதியிலிருந்த இராணுவத்தினர் மீது புலிகள் தாக்கினர் என்று பிரிகேடியர் கெமுனு குலதுங்க தெரிவித்தார்.

# புலிகள் மீதான தடை நீடிப்பு

இந்தியா புலிகள் மீதான தடையை இந்தியா நீடித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமையுடன் புலிகள் மீதான இரண்டாண்டு தடை காலாவதியானது. புதிய தடை மீண்டும் இரண்டாண்டுகளுக்கு அமுலில் இருக்கும்.

உள்துறை அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் புலிகளின் தமிழீழக் கோரிக்கை இந்தியாவின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பயமுறுத்தலாக உள்ளதாகவும் சட்டவிரோத நடவடிக்கையாக கருதப்படும் அளவில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகள் தங்கள் உறுப்பினர்களைக் கொண்டு, ஆயுதங்களின் உதவியுடன் தமிழ் நாட்டில் நுழைய முயற்சிப்பதாக தங்கள் அமைச்சுக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

# யேமனில் உள்ள இலங்கையர் மீட்கப்பட்டனர்

யேமனின் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்திற்குள் அகப்பட்டுக் கொண்ட 52 இலங்கையரும் 800 இந்தியர்களும் இந்தியக் கப்பல் ஒன்றில் பாதுகாப்பாக வெளியேற்றப் பட்டனர். இவர்களுடன் நேபாளிகள், பங்களாதேஷிகளும் வெளியேறினர்.

யேமனின் செங்கடல் துறைமுகமான ஹோடெய்த்தில் வைத்து கப்பலில் ஏற்றப்பட்ட இவர்கள் பம்பாய்க்கு கொண்டு செல்லப்படுகிறார்கள்.

ஏற்கனவே மூன்று விமானங்களில் 587 இந்தியர்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர். மொத்தம் ஏழாயிரம் பேருக்கு மேல் இந்தியர்கள் யேமனில் உள்ளனர்.

# பொலிஸ் சேவைக்கு ஆட்திரட்டு

புலிகள் தங்கள் பொலிஸ் சேவைக்கு ஆட்திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என கொழும்புத் தமிழ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தங்கள் வானொலியில் பொலிஸ் சேவையில் சேர்ந்து கொள்வதற்காக 18 முதல் 30 வயதானவர்கள் வரை விண்ணப்பம் செய்யலாம் எனப் புலிகள் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

# தொழிலாளர்க்கு குறைந்த பட்ச சம்பளம்

சர்வதேச தொழில் நிறுவனத்தின் ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி விஜேதுங்க அடுத்த தை முதல் தேசிய குறைந்த பட்ச சம்பளம் பற்றிய ஒழுங்குமுறை அமுல்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர்களின் குறைந்த பட்சச் சம்பளம் மாதாந்தம் ஐம்பது டொலர் அளவிலாவது இருக்க வேண்டும் என்றும் இது குறித்து தனியார் நிறுவனங்கள், தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். பல்தேசிய நிறுவனங்களில் கோடிக்கணக்கான முதலீடுகளால் தொழிலாளர்களும் தொழிற் சங்கங்களும் பலமிழந்துள்ளதாகவும் தற்போதைய தொழிலாளர் தரம் குறைய வாய்ப்புள்ளதாகவும் இதனால் தொழில் விதிகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# இலங்கையில் தற்கொலைவீதம் அதிகரிப்பு

இலங்கையின் தற்கொலை விகிதம் உலகில் அதிகமான அளவில் உள்ளது. இது குறித்து முழு உலகும கவனம் செலுத்த வேண்டும் என்று சிறிலங்கா சுமித்ரயோ சங்கத் தலைவி தெரிவித்துள்ளார்.

உலகெங்கும் தற்கொலையை தடுக்க பாடுபடும் இங்கிலாந்தை தலைமையகமாகக் கொண்ட நிறுவனம் ஒன்றின் மாநாடு கொழும்பில் இம்மாதம் 27ம் திகதி வரை நடைபெறுகிறது. இந்த தற்கொலைகளுக்கு வறுமையும் காதல் தோல்வியுமே முக்கியமான காரணம் என்று கூறப்படுகிறது. ஒரு லட்சம் பேருக்கு 48 பேர் இலங்கையில் தற்கொலை செய்கிறார்கள். இது உலகில் ஹங்கேரிக்கு அடுத்ததாக இரண்டாம் இடத்தை வகிக்கும் நிலையாகும். ஆயினும் இந்த தற்கொலைகள் வடக்கில் நடைபெறும் தற்கொலைகளை அடக்குவதில்லை.

# எய்ட்ஸ் நோய்க்கு ஆயுர்வேத முறையில் சிகிச்சை

எய்ட்ஸ் நோய்க்கு ஆயுர்வேத மருந்துகளைப் பரீட்சிக்க இந்திய மருத்துவ ஆய்வு நிலையம் உத்தேசித்துள்ளது. இந்தியாவின் புராதன மூலிகை மருந்துகள் மூலம் எய்ட்ஸ் வைரஸ் பெருகுவது நிறுத்தப்படலாம் என்று சில ஆய்வுகள் தெரிவித்ததை அடுத்தே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட உள்ளது.

எய்ட்ஸ் நோயாளிகளில் சோதித்துப் பார்க்கவென இந்த நிறுவனம் ஆயுர்வேத மூலிகைகளில் பத்து மருந்துகளைத் தெரிவு செய்துள்ளது. உடலில் எய்ட்ஸ் வைரஸின் பரம்பலை இது தடுக்குமா என்பது பற்றி இந்த நிறுவனம் அவதானிக்கும்.

இந்த நிறுவனத்தின் புதிய இயக்குனரான கலாநிதி சத்தியவதி 'பரிசோதனையின் இறுதிக்கட்டத்தில் நிற்கிறோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவின் தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் ஏற்கனவே பம்பாய் வைத்தியசாலையில் ஆயுர்வேத மருந்து ஒன்றைப் பரீட்சித்து வருகிறது.

## அதிகரிக்கும் செலாவணி

இலங்கையின் வெளிநாட்டுச் செலவாணிக் கையிருப்பு அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது. 79 கோடி டொலர்களால் இந்த தொகை அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. வெளிநாடுகளில் வேலை செய்வோரினாலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தை மாதத்தில் மட்டும் 33 லட்சம் டொலர்கள் அனுப்பப்பட்டதாகவும் இந்த தொகை சென்ற வருடத்தினது இதே காலத்தில் அனுப்பப்பட்ட தொகையை விட 68 வீத அதிகரிப்பாகும். இந்த தொகை ஆறு மாத காலத்திற்கு இறக்குமதிகளுக்கு செலுத்த போதுமானது.

## லலித் கொலை பற்றி விசாரணை செய்ய மறுப்பு

லலித் அத்துலத் முதலியின் மரணம் குறித்து முழு அளவிலான விசாரணைகள் நடத்தப்பட விசேட விசாரணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையை அரசு நிராகரித்துள்ளது.

அரசு இது குறித்து தனி நபர் ஆணைக்குழு ஒன்றை நியமிக்கச் சம்மதித்துள்ளதாகவும் இது அரச நிதியை வீணாக்கும் செயல் என்பதால் தம்மால் நிராரிக்கப்படலாம் என்றும் அவரது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

## அடுத்த தேர்தலில் சிறிமா

அடுத்த தேர்தலில் தானே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக சிறிமாவோ அறிவித்துள்ளார். கடந்த தென் மாகாணத் தேர்தலில் பிரசாரங்களில் அவர் முன்னணி வகித்திருந்ததை மையமாக வைத்து அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா விஜயகுமாரணதுங்கவே நிறுத்தப்படுவார் என்று பரவலாக பேச்சுக்கள் அடிபட்டிருந்தன. தற்போது தானே விஜேதுங்கவுக்கு எதிராக களத்தில் குதிக்கப் போவதாக சிறிமாவோ அறிவித்திருக்கிறார்.

## இந்துஜா மானநட்ட வழக்கு

லண்டனில் வாழும் பெரும் பணக்காரரான இந்துஜா, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிறுவனம் மீது மானநட்ட வழக்கு தொடரப் போவதாக அறிவித்துள்ளார். போபர்ஸ் ஊழலில் இந்துஜாக்களுக்கு தொடர்புள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் கூறியிருந்தது. தாங்கள் தொடர்ந்தும் மறுத்தும் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை நிறுத்தும்படி கேட்டும் இந்தியன் எக்ஸ்பிரஸ் தொடர்ந்தும் தங்களைக் குற்றம் சாட்டி வருகிறது என்றும் இந்துஜா தெரிவித்திருக்கிறார்.

இந்த விடயத்தில் தங்கள் சுவிஸ் வங்கி கணக்குகளைப் பார்வையிட மற்றவர்களை அனுமதிக்கப் போவதாக இந்துஜாக்கள் கூறியிருந்தனர். இந்த விடயத்தில் மானநட்ட வழக்குக்கான அறிவித்தலை எக்ஸ்பிரஸ் அதிபர்கள் விவேக், சரோக் கோயங்கா, ஆசிரியர் பிரபு சாவ்லா, நிருபர் சித்திரா சுப்பிரமணியம் ஆகியோருக்கு அனுப்புவதற்கு லண்டன் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து
## செல்வன் கவின் கிஷாந் மகேந்திரன்
## (23.05.94)



கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட மகேந்திரன் தேவி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கவின் கிஷாந் தனது முதலாவது பிறந்த தினத்தை 'தொம்சன் மெமோரியல் பார்க்கில்' 23.06.94 அன்று வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார்.

இவரை கனடாவில் வசிக்கும் அப்பா, அம்மா, அம்மம்மா, ரகுமாமா, யோகேஷ் அத்தை, தனேஷ் அத்தை, கௌரி அத்தை, கௌதம் மச்சான், திருமலையில் உள்ள அப்பம்மா, ஞானம் மாமா, பரமேஸ் அத்தை, சுகந்தன் மச்சான், ராஜன் மச்சான், சுஜி மச்சாள், மோகன் மாமா, மங்களம் அத்தை, சரண் மச்சாள், தனு மச்சான், விச்சு மாமா, ராணி அத்தை, தச்சு மச்சான், சங்கரி மச்சாள், மட்டக்களப்பில் உள்ள சுந்தரம் மாமா, கோகிலா அத்தை, கலா மச்சாள், பிரேமா மச்சாள், கண்ணன் மச்சான், குருநாகலில் உள்ள சிறிதரன் மாமா மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் கவின் கிஷாந்தை பல்கலையும் கற்றுசீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

# ஐக்கிய தேசியக்கட்சியின் சொத்தி உபாலி

**1994 மே மாதம் 15ம் திகதி யுக்திய ஆசிரியர் தலையங்கம்**

**தமிழாக்கம் செ.லோகநாதன்**

**வெறுமனே காடைத்தனம் என்பது இலங்கைக்கு ஒரு புதிய பிரபஞ்சம் அல்ல. ஓசி கொரியா, சொப்ப ஐயா போன்றோரை இன்றைய தலை முறையினர் அறியாவிட்டாலும் எமது வயதுவந்த சந்ததியினர் அறிவர். ஆனால் அரசியல் காடையர்கள் என்னும் ஒரு விசேட பிரிவினர் தோன்றியது 1977 ம் ஆண்டுக்குப் பின்னர்தான் அது கோனவல சுனில், கிறிஸ்தோப்பர், கலு லக்கி ஆகியோர் பரம்பரையைச் சார்ந்ததாகும். இவர்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் மேல்மட்ட தலைவர்களது உதவியும் ஒத்துழைப்பும் தொடர்ந்தும் கிடைத்தன.**

இன்றைய நாடக மேடையின் கதாநாயகன் ஜனாதிபதி விஜேதுங்க ஆகும். உப நடிகன் பாத்திரத்தை காமினி திசாநாயக, வில்லன் அல்லது துரோகி பாத்திரத்தை வகிப்பது சொத்தி உபாலி அல்லது சிறிசேன குரே ஆகும். கடந்த கொடூர காலத்தில் இடம் பெற்ற தவறுகள் அனைத்தையும் ஒருவர் இருவர் தலையில் சுமத்தி ஏனையவர்களை பாதுகாக்கவே ஐக்கிய தேசியக் கட்சி தயாராகிக் கொண்டிருக்கிறது.

ஆனால் கடந்த கொடூர காலத்தின் ஐக்கிய தேசியக் கட்சி அரசியலின் தோசங்களை எல்லாம் தீர்ப்பதற்கு சொத்தி உபாலி எனப்படும் பலிக் கடாய் மட்டும் போதுமானதல்ல. தோசங்களைத் தீர்ப்பதற்கான உண்மையான அவசியம் விஜேதுங்க அவர்களுக்கோ காமினி திசாநாயக அவர்களுக்கோ இருக்குமாயின் அவர்கள் இதைவிட பெரியதோர் சாந்திச் சடங்குக்கு தயாராக வேண்டும். அது கடந்த பதினேழு வருடகால ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் மரபுகளையெல்லாம் துண்டித்து அவற்றிலிருந்து விடுபடுவதாக அமைய வேண்டும்.

வெறுமனே காடைத்தனம் என்பது இலங்கைக்கு ஒரு புதிய பிரபஞ்சம் அல்ல. ஓசி கொரியா, சொப்ப ஐயா போன்றோரை இன்றைய தலை முறையினர் அறியாவிட்டாலும் எமது வயதுவந்த சந்ததியினர் அறிவர். ஆனால் அரசியல் காடையர்கள் என்னும் ஒரு விசேட பிரிவினர் தோன்றியது 1977 ம் ஆண்டுக்குப் பின்னர்தான் அது கோனவல சுனில், கிறிஸ்தோப்பர், கலு லக்கி ஆகியோர் பரம்பரையைச் சார்ந்ததாகும். இவர்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் மேல்மட்ட தலைவர்களது உதவியும் ஒத்துழைப்பும் தொடர்ந்தும் கிடைத்தன. இது தவிர ஜாதிக சேவக சங்கம் எனப்படும் ஐக்கிய தேசியக் கட்சி தொழிற்சங்க அமைப்பு ஸ்தாபனமயப்பட்ட காடைத்தனத்தின் மத்திய ஸ்தாபனமாக தொடர்ந்தும் ஈடுபடுத்தப்பட்டது.

அரசாங்க கூட்டுத் தாபனங்களை மக்கள் மயப்படுத்தல் எனப்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேலைத் திட்டத்தாலும் ஜேவிபியினால் மேற்கொள்ளப்பட்ட ஆயுத நடவடிக்கைகளாலும் மேலே கூறப்பட்ட காடை ஸ்தாபனம் தகர்வுற்றது.

ஆனாலும் ஐக்கிய தேசியக்கட்சி தனது காடை அரசியலை நிறுத்தவில்லை. அதற்குப் பதிலாக அது மிகவும் பயங்கரமான மாபியா இயக்கமாக மாற்றப்பட்டது. பல அம்சங்களில் அது முன்பு இருந்ததைவிட பயங்கரமாக மாறியது.

அதற்கு முன்னர் ஐக்கிய தேசியக்கட்சியின் காடைத்தனம் பிரதானமாக அச்சுறுத்தல், பீதிக்குள்ளாக்குதல், தாக்குதல் ஆகிய நடவடிக்கைகளிலேயே ஈடுபடுத்தப் பட்டது. அவ்வப்போது ஒரு தடவை என்றவாறே கொலைகளைச் செய்தது. ஆனால் சொத்தி உபாலியின் யுகத்தில் ஐக்கிய தேசியக் கட்சி காடைத் தனத்தை ஆரம்பித்தது படுகொலை களுடனேயேயாகும். வெளிப் படையாகவும் மறைமுகமாகவும் தமது எதிராளிகளை படுகொலை செய்து முழு நாட்டையும் பீதிக்குள்ளாக்கும் யுகம் அத்துடன் ஆரம்பமாகியது. இவ் வேலைகளுக்காக அரசாங்கத்தின் பாதுகாப்பு எவ்வித குறையுமின்றி வழங்கப்பட்டது.

இவ் யுகத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் காடைத்தனத்தின் மற்றைய பிரதான இலட்சணம் என்னவென்றால் தமது கட்சிக்குள் இருந்த மாற்று கருத்தைக் கொண்டவர்களுக்கு எதிராகவும் அது கட்டவிழ்த்து விடப்பட்டதாகும். கட்சி ஆதரவா ளர்கள் தீவிர ஈடுபாடு கொண்டவர்கள் மட்டுமன்றி பிரபல்யமான அமைச்சர் கள் கூட பயத்தால் மௌனம் சாதித்தனர். இதற்கு நல்ல உதாரணம் றிச்சட் டி சொய்சா, லக்ஷ்மன் பெரேரா போன்ற தமது நம்பிக்கைக்குரிய நெருக்கமானவர்களை கொல்லப்படும் போது லலித் அத்துலத் முதலி எனப்படும் பெரும் இராட்சதனுக்கே மௌனமாக இருக்க நேரிட்டதாகும். மற்றது இத்தடவை காடைத்தனம் வெறுமனே குண்டர் கோஷ்டியின் பலம் மட்டுமல்ல இதற்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய நிறுவனங்களுடனும் முக்கிய தொடர்புகள் இருந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களில் அனேகருக்கும் பாதாள உலகத்துக்குமிடையே பலவேறு விதமான தொடர்புகள் உண்டென்பது இரகசியமான ஒன்றல்ல. சில தலைவர்கள் சொத்தி உபாலியுடன் தொடர்பு கொண்டிருந்ததைப் போன்று இன்னும் சில தலைவர்கள் வேறு பகுதியினருடன் தொடர்பாயிருந்தனர். ஆதலால் அத் தொடர்புகளை துண்டிக்கவோ அல்லது பாதாள உலகத்துக்கு எதிராக தீர்க்கமான நடவடிக்கை எடுக்கவோ ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைக்கு முடியாது.

பாதாள உலகத்தில் இன்னும் பல கைவரிசைக்காரர்கள் இருக்கி றார்கள் என்பதும் அவர்கள் மீதான பொலீஸ் நடவடிக்கைக்கு முட்டுக் கட்டையாக மேலிடமே செயல்படு கிறது என்பதை உறுதிப்படுத்தக்கூடிய சாட்சியங்களும் உள்ளன.

உதாரணத்துக்கு கூறுவ

11 ம் பக்கம் பார்க்க..

# புலிக்கு Money கட்டுவது யார்?

## முனியின் பதில்கள்

✪ பாரிசில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சபாலிங்கம் தமிழருக்கு செய்த துரோகம் என்ன முனிவரே?
தேவராஜ், ரொறன்ரோ

ஈழம் விடுதலை பெறவேண்டும் என நினைத்தது தவறு. அதற்காக தனது வாலிப வயதிலேயே பாடுபட ஆரம்பித்தது தவறு. அதன் பிரதிபலிப்பாக பாரிஸிலும் இயங்கியது தவறு. மேலும் நல்ல தமிழ் நூல்களை பதிப்பித்தது தவறு. இலக்கிய ஆர்வம் கொண்டிருந்தது தவறு. ஆக இத்தவறுகளின் மொத்த உருவம்தான் அவர் செய்த துரோகம்.

✪ தமிழீழத் துரோகிகளால் சமீபத்தில் பாரீஸில் வைத்து கொலை செய்யப்பட்ட சபாலிங்கம் அவர்கள் பற்றி ரொரன்ரோவிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்று சபாலிங்கம் இலக்கிய சந்திப்பு என்ற பெயரில் புலியெதிர்ப்பு நடாத்துபவர், சர்ச்சைக்குரிய நூல்களை வெளியிடுபவர் என்று கொச்சையாக செய்தி வெளியிடப்பட்டிருக்கிறதே! இந்தப் பத்திரிகை செய்தி பற்றி விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.
சி.செல்வகுமார், ஸ்காபரோ

விளக்குமாறுக்கு 'பட்டுக்குஞ்சம்' என்று சொல்லப்படுகிறது.. பெயர் தானைய்யா ஈழநாடு...

✪ புலிகள் செய்வதை சரியென்று வாதிடுபவர்களுக்கும் பிழையென்று எதிர்ப்பவர்களுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு யாது?
தியாகராஜா மங்களராஜ், ரொறன்ரோ

அடிப்படை வேறுபாடு வேறு எது என்று பார்த்தால் அவர்கள் 'இனம்' என்ற அடிப்படையில் அவர்கள் வாதிடுகிறார்கள்.. நாங்கள் 'சனம்' என்ற அடிப்படையில் எதிர்க்கிறோம். . எமது இன சனத்திற்காகத்தான் எல்லாமே நடக்கிறது.

✪ சபாலிங்கம் கொலையினால் வெளிநாட்டில்வாழும் ஈழத்தமிழருக்கு அல்லது புலி ஆதரவாளர்களுக்கு பிரச்சனைகள் ஏற்படாதா?
குமார் ராஜகுலசிங்கம், ரொறன்ரோ

நிட்சயமாக... அகதியாக வந்த இடங்களில் இத்தகைய கொலைகள் செய்யப்படுமேயானால் அது அகதிநிலையை ஒத்துக்கொள்ளும் அரசாங்கங்களுக்கு சங்கடத்தை உருவாக்கி அதன் மூலம் ஈழத் தமிழர்களுக்குப் பாதகமான நிலை உருவாகும். புலி எதிர்ப்பாளர்கள் கொலை செய்யப்படும்போது புலி எதிர்ப்பாளர்களில் பிறிதொரு பகுதி திருப்பி பழி வாங்க கொலை செய்ய ஆரம்பித்து விடுமேயானால் அதுவே புலி ஆதரவாளர்களுக்கு பாதகமாகி விடும்! எனவே இவை தொடருமானால் ஈழத்தமிழருக்கு மட்டுமல்ல, விடுதலைப் புலிகளுக்கே அவப்பெயர்தான் மிஞ்சும்.

✪ சமீபத்தில் ஈழத்திலிருந்து வந்த ஒருவர் யாழ்ப்பாணத்தில் கல்யாணமாகாத பெண்கள் தொகை அதிகரித்து வருவதாயும் சொன்னார் வெளிநாட்டு தனி ஆண்கள் திரும்பிப்போய் கல்யாணம் செய்வதன்மூலம் ஏஜன்சி இன்னல்கள் இல்லாமல் அவர்களை நல்ல வாழ்க்கைக்கு அழைத்து வரலாம் தானே முனிவரே இதுபற்றி உமது அபிப்பிராயம் என்ன?
குமார், ரொரன்ரோ

ம்...ம்.. நல்ல யோசனைதான் ஆனால் புலிக்கு Money கட்டுவது யார்?

✪ ஈழவிடுதலை முன்னோடிகளில் ஒருவரான சபாலிங்கமே புலிகளை விமர்சிக்கிறார். காரணம் என்ன?
சாருகேசி, ரொறன்ரோ

பிரபாகரனோடு பழகியவர் சபாலிங்கம்!

✪ நக்கீரன் பிரசுரிப்பதையும் கோபாலசாமி எழுதுவதையும் வரிந்து கட்டிக் கொண்டு மறுபிரசுரம் செய்யும் எமது பத்திரிகைகள் சாதிக்க நினைத்திருப்பது யாது முனிவரே?
க.மரியதாஸ், டவுன்ஸ்வியூ

பக்க(ா)த் திருடர்களால் எதையாவது சாதிக்க முடியுமா என்ன? வேஸ்ட் (பேப்பர்) ஐயா

✪ தமிழர்களுக்கு அடிக்கடி விருது வழங்கும் வைபவங்கள் நடைபெறுகின்றனவே... இதைப்பற்றி உமது அபிப்பிராயம்?
இளங்குமரன், ரொரன்ரோ

மிகவும் வேடிக்கையான நிகழ்வுகள் இவை! தமிழருக்கு 'சேவை' செய்பவர்களைக் கௌரவிக்கவும் 'ஊக்குவிக்கவும்' விருதுகள் வழங்கப்படுகின்றன என காரணம் வேறு சொல்லப்படுகின்றது. இங்கே விருது வாங்க மட்டுமல்ல வழங்குபவருக்கும் தகுதி வேண்டும் என்பதை பலர் மறந்து விடுகிறார்கள். 'சேவை மனப்பான்மை' கொண்டவர்களுக்கு விருது வழங்குவது என்பது எந்த வகையில் அவர்களை ஊக்குவிக்கும் என்பதுதான் புரியவில்லை. விருதுகள் சாதனைகளின் பின்னரே வழங்கப்பட வேண்டும். ஆனால் தங்களைப் பெரிய மனிதராக்கிக் கொள்ள சிலர் செய்து வருவதே இந்த விருது விளையாட்டுக்கள்! (போதாதென்று வெள்ளைக்காரர் கையால் விருது என்ற புதிய கலாச்சாரத்தையும் டம்ளர் டக்வல் போன்றோர் நடாத்துகிறார்கள்.. எங்கே போய் முட்ட..)

✪ தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா ஜனாதிபதி ஆகியதுபோல வட இலங்கைக்கு பிரபாகரன் ஜனாதிபதி ஆவாரா?
எஸ்.சாந்தினி, ஸ்காபரோ

தென் திசையைப் பார்க்கின்றேன், என் சொல்வேன் என்றன் சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிக்கிறதடா என பாரதிதாசன் பாடியது மண்டேலாவுக்காகத் தான் இருக்க வேண்டும். ஆனால் நம்ம வட திசைக்காரர் has a long way to go. (இலங்கைக்கு ஆயுதம் கொடுக்க வேண்டாம் என்று மண்டேலாவை புலிகள் கேட்டிருக்கிறார்கள். கொடுத்தால் மண்டையில் போடுவார்களோ...?)

✪ கனடாவில் யதார்த்தமாக எழுதி வரும் மூன்று எழுத்தாளர்களின் பெயர்களைத் தருக?
அருள், ஸ்காபரோ

1. கேஸ் எழுதுபர்
2.கேஸ் எழுதுபவர்
3. கேஸ் எழுதுபவர்

✪ 'அன்னக்கிளி' இளையராஜாவுக்கும் மாஸ்ட்ரோ இளையராஜாவுக்கும் என்ன வித்தியாசம்?
அருள், ஸ்காபரோ

அன்னக்கிளி ராசா ஹிந்திப்பாடல்களின் படையெடுப்பை தடுத்து முற்றுகை போட்டார் மாஸ்ட்ரோ ராஜா ஹிந்திப்பாடல்கள் வரை போய் தனது கொடியை நாட்டிவிட்டு திரும்பியிருக்கிறார். இன்று இளையராஜாவின் பல பாடல்களை ஹிந்திப்பாடல்களாக பல வட இந்திய இசையமைப்பாளர்கள் கொப்பியடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

✪ கண்ணதாசனின் திரைப்படப பாடல்களுக்கும் வைரமுத்துவின் திரைப்பட பாடல்களுக்கும் என்ன வித்தியாசம்?
கந்தையா சிவநேசன், மார்க்கம் ரோட்
கண்ணதாசன் பாடல்களில் கதை தெரியும். வைரமுத்து பாடல்களில் கவிதை தெரியும்.(ஐயாவின் கவிதைகள் இளமைத் துடிப்பாயிருக்கும்)

✪ உமது பதில்களில் தமிழ்ப்படங்களைப் பற்றி எந்த அடிப்படையில் தரம் பிரிக்கிறீர்?
கந்தையா சிவநேசன், மார்க்கம் ரோட்
தரம் என்பது ஒரு relative term. தரமானபடங்கள் என்று சொல்லப்படுபவை பற்றிய அளவுகோல் மொழிக்கு மொழி சினிமாவில் வேறுபடுகின்றன. உலகப் பொது சினிமாவுக்குள்ளேயே பல தரங்களிருக்கின்றன. மட்டமான ரசனையுடன் பெரும்பான்மையாக வெளிவரும் தமிழ்ப்படவுலகின் போக்கை மாற்றத்தக்க புத்திசாலித் தனமான படங்கள்தான் இன்றைய நிலையில் தரமான தமிழ்படங்கள் என்பதே எனது அபிப்பிராயம்.

✪ முன்பு அமலாவை புழுகிய முனிவா இப்போது கமலஹாசனை புழுகுகிறாய்? காரணம் என்ன?
இந்திரன், ரொரன்ரோ
KAMALA ஹாசனுள் AMALA அடக்கமன்றோ!

✪ இங்குள்ள நடன ஆசிரியைகள், நடன ஆசிரியர்கள் கொடுக்கும் நடன வகுப்புகள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?
ப.சந்திரிகா, ஸ்காபரோ
சிலர் தான் 'டான்ஸ்' சொல்லிக் கொடுக்கிறார்கள். பலர் 'உடான்ஸ்' விடுகிறார்கள் முழுவதிலுமே பரத நாட்டியத்தை முறையோடு சொல்லிக் கொடுக்கும் நடன ஆசிரியர்களை ஒரு கைவிரல்களுக்குள் எண்ணிவிடலாம்.

✪ முனி அவர்களிடம் ஒரு சிறு கேள்வி சமீபத்தில் இங்குள்ள அமைப்பு ஒன்று ஒரு பிரசுரம் வெளியிட்டிருந்தார்கள் அதில் அவர்கள் கணக்கியல் துறையில் ஒரு வகுப்பு ஆரம்பிப்பதாக அறிவித்திருந்தார்கள். வெல்பெயரில் இருப்பவர்களுக்கு non partici-pant என்றதிலுள்ள பணத்தை திரும்பப் பெற்றுக்கொள்ள இவ்வகுப்புக்களில் சேரலாம் என்பதை 'மகிழ்ச்சியுடன்' அறிவித்துக் கொள்கிறார்களாம். இதுபற்றி முனி அவர்களின் கருத்தை இந்த வாரம் தாயகம் இதழில் கட்டாயமாக எதிர்பார்க்கின்றேன் .
தாயகப்பித்தன், மொன்றியால்
'சங்கம்' என்றாலும் 'கணக்கு' என்றாலும் எப்போதும் தாயகத்தின் ஞாபகம் வருகிறதோ? பண்டைத்தமிழ் 'சங்க' நூல்களை பார்த்தால் அவை மது அருந்துவதையோ பரத்தையரோடு இன்புற்று இருப்பதையோ கண்டிக்கவில்லை. இந்த வழக்கங்களை இயல்பாகவே அவை எடுத்துக் கொள்கின்றன ஆனால் அதன் பின்னால் வந்த பதினெண் 'கணக்கு' நூல்கள் இப்பழக்க வழக்கங்களை மிக வன்மையாக கண்டிக்கின்றன ஆகவே மக்களது பழக்கவழக்கங்கள் மாறுபட்ட நிலையிலேயே நூல்களும் பிரசுரங்களும் தோன்றியிருக்க வேண்டும். இன்றைய தமிழர்களுக்கு ஏற்ற வகையில் இந்தப் பதினெண் 'கணக்கும்' எழுதப்பட்டிருக்கலாம். அது 'சங்க' நூல் அல்ல

✪ விடுதலைக்காக பாடுபடுகிறோம் என்று சொன்ன முன்னாள் தீவிர உலகத்தமிழர்கள் அதைவிட்டு இப்போ விலகிக் கொண்டிருக்கிறார்களாமே.. உண்மையா?
தாயகப்பித்தன் மொன்றியால்
"வருது வருது விலகு விலகு வேங்கை வெளியே வருது விலகு" என்றும் பாடலாம் அல்லது "வறுகு வறுகு விலகு விலகு... வெறுங்கை வெளியே வறுகு" என்றும் பாடலாம்.

✪ எமது அமைப்புக்களிடையே கோஷ்டி மோதல்கள் ஏற்படக் காரணங்கள் என்ன முனிவரே
தாயகப்பித்தன், மொன்றியால்
நாங்கள் தமிழ்ச்சாதி அல்லவா...! கவிஞர் ஆனந்த் பிரசாத்துடன் பேசிக்கொண்டிருந்தேன்.. அவர் சொன்னார்: "குழுக்களாய் கூடிக் கூடி புழுக்களாய்ப் போன சாதி...!

# தலையாட்டி



துரோகியைப் பிடித்துவிடுவதென இயக்கம் முடிவெடுத்துவிட்டது. தலையாட்டி இல்லாமல் ஒரு கண்டுபிடிப்பா? எனவே, தலையாட்டி ஒருவரைப் பிடிக்கும் முயற்சியில் சுறுசுறுப்பாகியது. எப்படியோ ஒருவனைப் பிடித்து, நீ தான் தலையாட்டி என்று சொல்லியபின் வரிசையில் நிறுத்தப்பட்டவர்கள் முன்னிலையிலே கொண்டுபோய் நிற்பாட்டியது. தலையாட்டி, முகமூடிக்குள் இருந்தபடி, மாறிமாறி எல்லோரையும் பார்த்தார். ஒரு முகமும் பிடிபடவில்லை. தலையை ஆட்டாது விட்டால் தனது உயிருக்கு ஆபத்து எனப்பயந்து, ஒரு இளம் முகத்தின் முன் தலையை ஆட்டினார். இளம் முகமோ பயப்படவில்லை. தானும் பதிலுக்குத் தலையை தலையாட்டியைக் காட்டிலும் சிறப்பாகவே ஆட்டியது. இயக்கப்பொறுப்பாளரின் தலை வெடித்தது. இளம் முகமோ, மீண்டும் மீண்டும் தலையாட்டியின் முன் தலையை ஆட்டிக் கொண்டிருந்தது. 'உண்மையான தலையாட்டி நீர் தான்.' என்று இளம் முகத்துக்குச் சொல்லிவிட்டு, தலையாட்டியாகக் கொண்டு வந்தவரை பார்த்து 'நீர் தான் உண்மையான துரோகி' என முடிவெடுத்து இயக்கம் இழுத்துச் சென்றது.
(எமது தேசம் போகும் போக்கில் இப்படி நடந்தால் கூட நாம் ஆச்சரியப்படதேவையில்லை)

**ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்**

# புதுக்கவிதைத்தவைகள்

## நன்றி

எனக்கு
வசதியாக
மற்றவர்கள்
நடந்துகொள்ளும்போது.

## பாட்டு

அழகுபடுத்தப்பட்ட
பேச்சு
மெருகூட்டப்பட்ட
மொழி
ஒரு சமூகத்தின்
கோபம்
தனி மனிதனின்
மௌனம்.

## வழக்கை


யோசனை
அதிகரிப்பதால்
உதிர்வது
தீவிரமடைந்தபின் –
உதிர்வது
அதிகரிப்பதால்
யோசிப்பது
தீவிரமடைவது.

## மாநாடு

தெரிந்த
விஷயங்களைப்பற்றி
தெரிந்தவர்கள்
தெரிந்தவர்களுக்கு
தெரிவிப்பது.

## அனுபவம்

கசப்பான
உண்மைக்கஷாயம்
விரும்பியோ
விரும்பாமலோ
விழுங்கித்தானாகவேண்டும்
வந்த
நோய்களிலிருந்து
வந்த மருந்து
வரப்போகும் நோய்களுக்காக
அருந்து.



## (சாக்) கடைச் சங்கம்

மத்திய அரசு கொட்டும்
        மாநியத் தொகையை நாடிப்
புத்தியை அடகு வைத்துப்
        புற்றினின் றிழிந்த ஈசற்
கொத்தெனச் சங்கம் ஆங்கே
        கொள்கையோ குறியோ இல்லை
வித்தைபம் மாத்துச் சேர்ந்த
        விழவெலாம் விற்றுப் போகும்.

## வாழ்க்கை

அவ்வப்போதில்
வானவில்லானாலும் கூட
எப்போதுமே
ஜனகன் வில்தான்.

## ஆண்டவன் கணக்கு

வரலாறு காணாத
குளிர்
முப்பத்திரண்டு
வா நிலையாளன்
கணக்கு

குளிக்கலாமென்று

தொட்டிக்குள்ளிறங்கி
குழாயைத் திறந்து
தண்ணீரையும்
வெது வெதுப்பாய்
கலந்தது
நான் போட்ட
கணக்கு

திடீரென
குளிர் நீர்
திடுக்கென்று
கொதி நீர்–இது
அவன் போட்ட
கணக்கு

நமக்கும் மேலே
ஒருவன்
குளிக்கிறானப்பா!

**ஆனந்த் பிரசாத்**

## மயக்கங்கள்

வேலைத் தளத்தில் என்னுடன் இணைந்து வேலை செய்பவர் ஒரு வெள்ளையர், வயது ஐம்பது அண்மையில் அவரது தந்தையார் இறந்து விட்டதாக அவர் நாட்டில் இருந்து 'தொலை நகல்' வந்திருந்தது. அவர் அதிர்ந்து போனார். பல வருடங்கள் இவர்கள் வேறு வேறு கண்டங்களில் வாழ்ந்தாலும் தந்தை நிரந்தரமாய் பிரிந்து விட்டார் என்ற செய்தி இவருக்கு அதிர்ச்சி கொடுத்தது. ஏனென்றால் ஒரு தந்தையின் இழப்பு.

தகவல் அறிந்து பலரும் வருந்துவதாய்ச் சொன்னார்கள்– நா வரைக்குமான ஆழத்தில் இருந்து தகப்பனுக்கு வயது என்ன என்று கேட்கவும் எவரும் தவறவில்லை– ஏனென்றால் வயதை வைத்துத்தானே அனுதாபத்தின் பெறுமானம்!

என் பத்தேழு வயது என கூறப்பட்டபோது இது வரை இருந்ததே தாராளம் எனப் பொருள் பட ஆறுதல் (?) சொன்னார்கள்.

ஆறுதல் யாருக்கு? போய்ச் சேர்ந்த தந்தைக்கா? தந்தையை இழந்திட்ட தனயனுக்கா?

இவற்றுக்கெல்லாம் மௌனம் கடைப்பிடித்துக் கொண்டிருந்த அந்த சினேகருக்கு நான் சொன்னேன்.

'எண்பத்தேழு வயதென்ன? ஆயிரம் வயதில் தான் போய்சேர்ந்தாலும்தந்தை தந்தைதான் அந்த இழப்பு மகனுக்கு மகத்தானது தான்'

இதைச் சொன்னவுடன் அச் சினேகர் என் கைகளைப் பற்றிக் கொண்டவுடன் விக்கித்து அழுதார்.

அந்த அழுகைக்கு அதி உயர் பெறுமானம் இருந்தது. நான் உணர்ந்தேன் அவருக்கு வயது ஐம்பது. ஐம்பதாயிருந்தால் என்ன! அவர் அழக்கூடாதா என்ன? அந்த அழுகையில் உயிர் இருந்தது. எனினும் அந்த அழுகைக்கு அர்த்தம் இருந்தது.

ஏனென்றால் வயது பார்த்து இறுகிக் கொள்வதோ இளகிக்கொள்வதோ இல்லை உறவு.

அனுபவத்தில் இதன் நெகிழா இறுக்கத்தை உணர்ந்து கொள்ள சந்தர்ப்பம் வந்த போதும் மற்றவர்க்கு எனும் போது அது அவர்க்கும் இருக்கும் என உணர முடியாமல் இருக்கிறது. மதிக்கத் தெரியாமல் இருக்கிறது.

இது ஏன்?

★ ★ ★

# பிரிவும் துயரும்

## அருணன்

என் நண்பரின் மாமனார் (மனைவியின் தகப்பனார்) காலமாகியதாக அறிந்து அவர்கள் வீட்டுக்குச் சென்றேன்.

அங்கு அந்தச் சகோதரி தன் தந்தையின் ஒவ்வொரு செய்கையையும் சொல்லி அழுது கொண்டிருந்தார்.

பலர் கூடி இருக்கிறார்களே என அச்சகோதரி இவற்றைச் சொல்வதற்கோ, அழுதவற்கோ வெட்கப்படவில்லை –ஏனென்றால் மாபெரும் இழப்பின் பெறுமானத்தின் முன் இவ் வெட்கம் கூச்சம் எல்லாம் எம்மாத்திரம்?

அச் சகோதரி ஒவ்வொன்றாய் சொன்னபோது என் மனதும் கலங்கிப்போனது. இதுபோல் தான் அங்கு வந்திருந்த சகலருக்கும் இருந்திருக்கும்.

"அருணண்ண, என்ரை அப்பாவை மண்ணுக்கை தாட்டுப் போட்டாங்கள்" ஓலத்தில் எவ்வளவு சோகம் உறைந்திருக்கும்!

"எங்களுக்கு எவ்வளவோ செய்த அப்பாவுக்கு நாங்கள் ஒன்றும் செய்யமுடியாமல் போச்சுதே"

ஒவ்வொரு மனதையும் தட்டிக் கேட்டது.

"அப்பாவுக்கு பூசை வைக்க கேக்கிறுங்கள் நான் விடமாட்டேன்"

"அப்பாவின்ரை படத்துக்கு மாலை போட்டுவைக்க நான் சம்மதிக்கமாட்டேன்" என்றும் அச் சகோதரி கதறியது இன்னும் என் மனதில் அதிர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இழப்பு சத்தியமானது தான். அது என்று எனத் தெரியாமல் தான் அது அளவில்லா வலிமை பெறுகிறது.

மரணிப்பவரை விட இருப்பவர்க்கே மரணத்தின் தாக்கம் அதிகம்.

இம் மரணவீட்டுக்கு என்னுடன் கூடச்சென்ற என் நண்பர் இச் சம்பவம் தனது பெற்றோரைப்பற்றி நினைக்க வைத்ததுடன் தன் பெற்றோரை எண்ணி கண்ணீர் வருகிறதென்றும் எப்படியாவது அவர்களை விரைவில் போய் சந்திக்க வழிவராதா என்றும் சொன்னார்.

முன்பு 'செத்த வீடுகளில்' உறவில்லாதவரும் மாரடித்து ஒப்பாரி வைப்பதையிட்டு முதலைக் கண்ணீருடன் ஒப்பிட்டுள்ளேன். என்போல் பலரும்.

ஆனால் முதலைக் கண்ணீருக்கும் அர்த்தம் மறைந்திருப்பது புரிகிறது. மற்றவர் இழப்பு தனது இழப்பின் ஊமை வடுக்களை வலிக்கப் பண்ணுவது உணரப்பட்டபோது தான் உறைக்குமா?

★ ★ ★

மரணத்தால் இருப்பவர்க்கு (உறவுகட்கு) எத்துணை வலிய தாக்கம் இருப்பது எவ்வாறு நிசமோ அதை உணராமல் எம் சம்பிரதாயங்கள் சடங்குகள் சில சமயம் அர்த்தமில்லாமல் அநாவசிய பின்பற்றல்களாய் இருப்பது சீரணிக்க முடிவதில்லை.

மரணம் நடந்த வீட்டார்க்கு இழப்பு எவ்வளவு வலிமையானது என உணராதது போல் பிறர் சேர்ந்து சடங்கு எனச் சொல்லிக் கொண்டு ஒருவகையில் கண்மூடித்தனமான வற்புறுத்தலில் கோழி, ஆடு வெட்ட படையல் செய்வதும் அந்தியேட்டி எனச் சொல்லிக் கொண்டு கொண்டாட்டம் செய்வதும் அபத்தம்.

இச்சடங்குகளால் அவர்களின் கவலைகளை மாற்றலாம் எனும் நியாயப்படுத்துதல் என்னைப் பொறுத்தவரை நியாயமாய்ப் படவில்லை.

இழப்பையே எண்ணிக் கொண்டிருந்தால் இருப்போருக்கு ஏதும் சௌக்கியம் வரப்போவதில்லைத்தான். இருந்தும் இந்தச் சாப்பாடு படையல்கள் விருந்துகளால் ஒரு இழப்பு அதிர்ச்சியை சீர்படுத்த முடியும் என்பது எவ்வகையில் அனுபவமான உண்மை?

அனுபவப் பட்டவர்க்கு

11 ம் பக்கம் பார்க்க..

# கம்பியூட்டர் காலத்தில் தமிழ் வளர்கிறதா?

## சிவப்பிரகாசம்

(கடந்த வாரம் நியாயப்படுத்த முடியாதவைகள்? என்ற தலைப்பில் எழுதிய கலாச்சாரம் பற்றிய ஆக்கத்தில் தவறு நேர்ந்துவிட்டது. சில பந்திகளும் வசனங்களும் முன்பின் மாறியும் விடுபட்டும் வந்தமையால் ஒரு சில கருத்துச் சிதைவுகள் ஏற்பட்டமைக்கு வருந்துகிறேன். இது தாயகத்தின் தவறு அல்ல. என்னுடைய கம்பியூட்டர் cut and paste தவறுதான். எனினும் இப்படிச்சொல்வதால் அத்தவற்றை நான் நியாயப்படுத்த முடியாது! பொறுத்தருள்க )

சங்க காலத்தில் இருந்த தமிழ் படிப்படியாக மாற்றம் அடைந்து இன்றைய நடைமுறையில் புதிய வடிவம் பெற்றுள்ளது. இதை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை என உருவகமாக எழுதினால் அது உருவகம் என்பதைக்கூட உணராமல் தமிழைக் கழுதை என்று எழுதிவிட்டான் என என்னைத் தேய்த்து எடுத்துவிடுவார்கள் தமிழ் அ(வ)றிஞர்கள். அப்படியான நிலையிலா தமிழ் இருக்கிறது? இல்லை. அந்த உருவகம் சரியல்ல. நாற்றாக இருந்தது இன்று விருட்சமாகிப் பூத்துக் குலுங்குகிறது எனச் சொன்னால் என்ன? தமிழ் இன்று தாழ்ந்து விட்டது என்று சொல்லிக் கொள்வதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

விஞ்ஞான நாகரீக மாற்றத்துக்கமைய வேற்று மொழிச்சொற்கள் தமிழில் கோர்வைப் படுத்தப்படாத குறை இன்னும் நிவர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது. விஞ்ஞானச் சொற்களைத் தமிழ்படுத்தும் போது மூன்று வகையான முறைகள் பயன்படுத்தப்படுகிறது. முதலாவது , வேற்றுமொழிச் சொற்களை அப்படியே பயன்படுத்துவது. இரண்டாவது, அந்தச் சொல்லின் அர்த்தப்படும் தமிழ் சொல்லை உபயோகிப்பது.
மூன்றாவது வேற்றுமொழிச் சொல்லுடன் கிட்டத்தட்ட ஒரே சத்தமுள்ள தமிழ்சொல் ஒன்றுக்கு வேற்றுமொழிக்கருத்தை புதிதாகப் பிரதியிடுவது. ஏற்கெனவே மொழி பெயர்க்கப்பட்டு உபயோகிக்கப்படும் சில சொற்கள் மேலே கூறிய ஏதாவது ஒரு முறையைக் கடைப்பிடித்ததாய் உள்ளது. இம்முறைகள் ஒவ்வொன்றிலும் சில நன்மைகளும் அதேநேரம் சில தீமைகளும் உள்ளன. எனவே இந்த சொல் ஆக்கம் புரியும் பணி துரிதமாக ஆரம்பிக்கப்பட்டு மற்ற மொழிகளுடன் தமிழும் ஒரே காலத்தில் சமசெறிவாய் இருக்க ஆவன செய்யவேண்டும். தற்சமயம் ஒரே சொல்லுக்கு பலர் பலவிதமாக தமிழ்படுத்தி எழுதுகின்றனர்.

தமிழ் அகராதி , தமிழ்க் கலைச்சொற் களஞ்சியம் போன்றவை புதிய சொற்களுடன் தொகுக்கப்பட வேண்டும். Encyclopedia Britanica போன்று தமிழில் சகல விஷயங்களும் தொகுக்கப்பட்ட நூல் உருவாக்கப் படவேண்டும். அதுமட்டுமன்றி அந்தக் களஞ்சியம் சர்வதேச மொழியான ஆங்கிலத்திலும மொழி பெயர்க்கப்பட வேண்டும். இப்போது ஆங்கில அகராதிகள், கலைச்சொல் களஞ்சியங்கள் எல்லாம் கம்பியூட்டரில் DISC ஆக வந்துவிட்டன. ஏன் தமிழிலும் அதைச் செய்ய முடியாது?. அதைச் செய்வது இலாபமூட்டும் ஒரு தொழில் அல்ல என்பது உண்மை. ஆனால் இலாப நோக்கமற்ற மொழி வளர்ச்சி ஸ்தாபனங்கள் அம் முயற்சியில் ஈடுபடுவதில் என்ன தடை?. இப்போது பல தமிழ் மாணவர்கள் Computer program துறையில் பட்டம் பெற்றுள்ளனர். படித்துக் கொண்டிருக்கின்றனர். தமிழுக்காக தமது ஓய்வு நேரத்தில் ஏற்கெனவே உள்ள தமிழ் அகராதியையாவது CD-ROM க்குரிய Program ஆக ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியாகவேனும் ஏன் எழுத முயற்சிக்க வில்லை? அது முடியாத காரியமும் அல்ல. கஸ்டமான காரியமும் அல்ல. சேவை நோக்கத்தில் எவரும் ஈடுபட விரும்புவதில்லை என்பதே உண்மை. படங்கள் , சத்தங்கள் , விதம்விதமான எழுத்துக்களும் அமைய Multi media Program இலகுவாக எழுதுவதற்கு பல soft-ware கள் இப்போது வெளிவந்திருப்பது பலரும் அறிந்தது.

ஆனால் நான் அறிந்தவரையில் தமிழுடன் சம்பந்தப்பட்டு கனடாவில் வெளிவந்ததில் அதிகமானவை FONTS (எழுத்துருவங்கள்) மட்டுமே. பத்திரிகை வளர்ச்சியிலும் பல நூல்களை இலகுவாக வெளியிடுவதிலும் இவை மிக உதவியாக இருப்பது உண்மை. தமிழ் சிறுவர்களுக்காக தமிழ் உச்சரிப்புகளுடன் APPLE கம்பியூட்டருக்குரிய Program ஒன்று எழுதப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.. அது பற்றிய மேலதிக விபரங்கள் பலருக்கும் தெரியவில்லை. அதை எழுதியவர் அதுபற்றிய விபரங்களை அளித்தால் பல பெற்றோர்கள் பயன்பட்டுக் கொள்ளலாம். கடைக்கணக்குகளை எழுதிக்கொள்ளவும் வீடியோ வாடகைப் பிரதிகளைச் சரியாக நிர்வகித்துக்கொள்ளவும் IBM க்குரிய database Program தமிழில் வெளிவந்திருப்பதாக விளம்பரம் ஒன்றில் காணப்பட்டது.
Dos , Windows க்கான Word processer கூட தமிழில் வெளிவந்துவிட்டது. இவை இன்னும் வளர்ச்சியின் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. இன்னும் பல கம்பியூட்டர் உத்திகள் தமிழில வர வேண்டும். அதற்கான கல்வி அறிவுகளைப் பெறுவதுமட்டுமன்றி அதைத் தமிழுக்காக உபயோகிக்கும் மனப்பாங்கு எமக்கு அமைய வேண்டும். தமிழ் எழுத்தாளர்கள் பற்றிப் பட்டியல் தயாரிக்குமுன் தமிழிலே தமிழனுக்கு என்ன கிடைக்கிறது - அவை எந்த நாடாயினும்" என்ற விபரக் கொத்தைத் தாருங்களேன்

சிறுவர்களுக்கான காட்டூன் படங்கள் தமிழ் இலக்கியத்துடன் தொடர்புடையதாக எடுக்கப் படவேண்டும். அப்போதுதான் பிறமொழிச் சூழலில் வாழும் எம் குழந்தைகள் சில அடிப்படைத்

தமிழ் அறிவுகளை சிறுபராயத்திலேயே பெற்றுக்கொள்வர். எமது மொழி வளரவேண்டுமானால் விஞ்ஞான முன்னேற்றங்களை அவ்வப்போது மொழியிலும் பயன்படுத்த வேண்டும். தொலைக்காட்சிக்காக கனடாவில் எடுக்கப்பட்ட சில தமிழ் நிகழ்ச்சிகளைப் பார்த்த போது Title எழுத்துகளைச் சுழட்டுவதற்கு எடுத்த அக்கறை நிகழ்ச்சித் தரத்தில் (கலைகளைப் பிரதிபலிக்கும் கமரா அசைவு போன்றவை ) அமையாமைக் கண்டிருப்பீர்கள். இவைகூட மொழியைப் பாதிக்கும் விஷயம்தான். மொழி என்னும போது அதில் உள்ள கலைகளும் அடக்கம். தமிழைத் தமக்காகப் பயன்படுத்தும் இவ்வுலகில் தமிழுக்காகத தம்மைப் பயன்படுத்தும் ஒருசிலராவது உருவாக வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவம். மாலை நேரங்களில் எனது வீட்டுக்கு முன் அமைந்த மணற்கும்பியில் சில தமிழ் பாண்டித்தியம்பெற்றவர்கள் அமர்ந்து உரையாடும் போது அதைச் செவிமடுக்க சந்தர்ப்பங்கள் கிடைத்தது. அவ்வழியாக வாக்கிங் போகும் தாவீது அடிகளும் (Rev. David) சிலசமயம் கலந்து கொள்வார். அவர் நூறுக்கும் மேற்பட்ட மொழிகளைப் படித்தபினனர் அவற்றுடன் தமிழை ஒப்பிட்டு ஒப்பியல் நூல் ஒன்றை எழுதியிருந்தார். பல மொழியில் உள்ள சொற்கள் தமிழைத் தழுவியிருப்பதுடன் அவற்றின் மூலம் தமிழாக இருக்க வேண்டும் என்பதே அவர் கருத்து. பல உதாரணங்களை அந்த நூலில் குறிப்பிட்டிருந்தார். அப்போது வயதுவித்தியாசத்தையும் பொருட் படுத்தாது ஒரு கேள்வியை அவரிடம் கேட்டுவிட்டேன்.

நீங்கள் எழுதியுள்ள உதாரணங்களை வைத்துக் கொண்டு தமிழ் மொழிதான் மற்ற மொழிகளின் பின்தோன்றி அந்தச்சொற்களை தனக்காக்கிக் கொண்டதென ஏன் வாதிடமுடியாது என்ற என் கேள்விக்கு பதிலை அவரிடம் இருந்து பெறமுன்னரே மரியாதைக்குறைவாக நடந்தமைக்காக அவ்விடத்தில் இருந்து விரட்டப்பட்டேன்.

இச் சம்பவத்தை காரணத்துடனேயே குறிப்பிட்டேன். பிற மொழிச் சொற்களை தமிழ் மொழிக்கு மாற்றும் போது அது பிற மொழியைத் தழுவிய சுத்ததமிழ் சொல்லாக இருப்பின் இன்னும்சில நூற்றாண்டுகளின் பின் தமிழ் மொழிதான் மூலம் என்று தப்பான ஆய்வுகளுக்கு இடம் அளிக்கலாம். உதாரணமாக ....... CHIP என்பதற்கு சீப்பு என்று மொழிபெயர்த்து வைத்துவிட்டு பல காலத்தின் பின்னர் சீப்பு என்ற சுத்த தமிழ்ச் சொல்லில் இருந்துதான் CHIP வந்தது என ஆய்வுசெய்யக்கூடாது.

சீப்பு என்றால் பல சிறிய மூலங்களின் இணைவால் ஆன தனித் தொகுதி எனப் பொருள் படுவதால் CHIP ஐகண்டுபிடித்ததேதமிழன் என தவறாக உரிமைகோரி சந்தோசக்கனவுகளை அனுபவித்துக் கொள்ளுவதில் என்ன இருக்கிறது. எனவே பிறமொழிச் சொற்களைத் தமிழ் ஆக்கும்போது அந்தக காரியத்தில் ஈடுபடப்போகும் ஸ்தாபனங்கள் பலதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

அது தமிழக அரசாயினும் சரி-ஈழத்தில் அமையப்போகும் மொழிவளர் அமைப்புகளாயினும்சரி-அல்லது புலம்பெயர் களத்தில் இழுபறியற்ற (நடக்குமா?) மொழிஉணர்வுத் தமிழர்கள் முயற்சியில் ஆயினும் சரி-தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ளாமல் மொழியைப் பற்றிய அக்கறையுடன் நடந்து கொள்வார்களாகுக!

## மயக்கங்கள்..

இழப்பின் வலிமை புரியும் யார்தான் அனுபவப்படவில்லை? (புத்தர் சொன்னபடி)

★ ★ ★

எவரும்உயிருடன்உள்ளபோதுதான் பரஸ்பரம் எதையும் பகிர்ந்து கொள்ளலாம்.

இது பல சமயங்களில் பலராலும் உணரப் படுவதில்லை.

யாழ்ப்பாணத்தில் உயிருடன் இருப்பதென்பது எவ்வளவு நிசம் என்பது தெரிந்ததே!

இந் நிலையில் கிளாலி, சூனிய வெளி என்பன தாண்டி கொழும்பு வந்த பெற்றோர் சகோதரர்களுடன் தொலைபேசியில் கூட கதைக்க ஆறுதல் இங்குள்ள பலருக்கு இல்லாமல் இருப்பது மனவருத்தம் தருகிறது.

இங்கிருந்து அனுப்பப்படும் பணம் அங்குள்ளவர்க்கு எவ்வளவு அவலங்களை மறைக்க உதவும். இது இங்கு வந்து சேர்ந்த பலருக்கு உணரமுடியாமல் போய் விட்டது.

கொழும்பு வந்து பணம் கேட்டால் எரிந்து விழுவதும் திட்டுவதும் அவர்கள் உயிர்கள் இல்லாது போனபின் அதைச் செய்திருக்கலாம், இதையாவது செய்திருக்கலாம் என வருந்துவதிலும் உயர்வானதா?

பணம் வரலாம், அவர்களுடலுள் உயிர் மீள வருமா?

## சொத்தி உபாலி..

தாயின் அண்மையில் இடம் பெற்ற பிரசித்தமான படுகொலைக்குப் பின்னால் இருப்பதாகக் கூறப்படும் கொள்ளுப்பிட்டி பாதாள உலகத்தின் பெரும்புள்ளி இன்னும் எவ்வித தொல்லையும் இன்றி உலாவுகின்றான். இவனுக்கு பாதுகாப்பு அளிப்பது பாதாள உலகத்துக்கு எதிராக போர் தொடுத்துள்ளதாக தன்னைக் காட்டிக் கொள்ளும் ஆக உயர்ந்தமட்ட தலைவனே எனக் கூறப்படுகிறது.

இதனிடையே தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள பாதாள உலக காடையர்களை விடுதலை செய்விப்பதற்காக ஐக்கிய தேசியக்கட்சியின் சில பெரும்புள்ளிகளே தமது செல்வாக்கைப் பாவிக்கின்றனர் என பொலீஸ் வட்டாரத்தின் ஊடாக அறியமுடிகிறது.

இவ்வாறான நிலமைகளின் கீழ் காடை அரசியலை முடிவுக்கு கொண்டு வர விஜேதுங்க ஜனாதிபதியால் முடியுமா? அதற்கு அவர் தயாரா என்பது கூட பாரதூரமான பிரச்சனையாகும்.

நாம் ஏற்கனவே கூறியவாறு பாதாள உலக அரசியலை முடிவுக்கு கொண்டு வரவேண்டுமாயின் இதைவிட பெரியதொரு சாந்தி சடங்கு செய்யவேண்டும். முதலாவதாகச் செய்யவேண்டியது பாதாள உலகத்துக்கும் தமக்கும் இடையேயான சகல தொடர்புகளையும் தகர்த்தெறிய வேண்டும். இன்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர்களில் எத்தனைபேருக்கு அவ்வாறு செய்ய முடியும்?

அவ்வாறு செய்யும் வரை அரசாங்கம் பாதாள உலகத்துக்கு எதிராக செய்வதாக காட்டப்படும் போர் பொய்யும் ஏமாற்றும் என்றே எம்மால் கருதநேரிடும்.



# அசை

தமிழருவி பத்திரிகை தனது இறுதிப்பதிப்பை இலவசமாக வெளியிட்டிருக்கின்றது. சில வருடங்களாக ரொறன்ரோவிலிருந்து வெளிவந்த மாதமிருமுறை பத்திரிகை இது. இதையிட்டு எனக்கு கொஞ்சம் வருத்தம்.

பத்திரிகை நடாத்துவது என்பது மிகச் சிரமமான காரியம். அதுவும் புலம் பெயர்ந்த நாடுகளில் தனியே அதையே தொழிலாக செய்வதென்பது துன்பத்துள் துன்பம். பத்திரிகை விற்பனையை விடவும் விளம்பர தாரர்களின் பிச்சையை எதிர்பார்த்து வாழவேண்டிய நிலைமை சில பத்திரிகைகாரர்களுக்கு உண்டு. இந்த பிச்சையும் கிடைப்பதில்லை. பத்து வெள்ளிக்கு போய் பதினைந்து தடவைகள் கையேந்தி நிற்க வேண்டும். சிலவேளைகளில் உடன் எலும்பு இறைச்சியும், இரத்தம் சொட்டும் உருளைக்கிழங்கும் இந்த பிச்சைக்குள் அடங்கும். அப்படி யிருந்தும் வட்டிக்கு பணமெடுத்து பல பத்திரிகைகள் வெளிவந்தன. பல சேடம் இழுத்துக்கொண்டு பரலோகம் போயின.

தொடங்கும்போது சிகரசப்பர விழாக்களுடன் ஆரம்பித்து அந்த விழா கடன் முடியும் முன்பே கதையை முடித்துக்கொண்ட பதிப்புகள் பல.

விளம்பரதாரர்களை நம்பாது வாசகர்களை நம்பி நடக்கின்ற பத்திரிகைகளுக்கு இந்த தொல்லைகள் குறைவு. தமிழுக்கான சேவை, தமிழன்னையின் ஆபரணம் என்றெல்லாம் புருடா விடுகின்ற ரகத்தில் பத்திரிகைகள் இருக்கக கூடாது. பரஸ்பரம் பலன் பெறுவதே பத்திரிகையின் நோக்கமாக இருக்கவேண்டும்.

வாசகர்களும் பயன்பெறவேண்டும், பத்திரிகைக்காரரும் பயன் பெறவேண்டும், விளம்பரதாரரும் பலன்பெறவேண்டும். பத்திரிகை முழுவதும் விளம்பரங்களால் நிரப்பிக்கொண்டு வாசகர்களது பலத்திற்கு ஏற்ற விசய தானங்கள் கொடுக்கப்படாத போது பத்திரிகை விற்காது. அதனால் விளம்பரதாரர்கள் தங்கள் விளம்பரங்களை குறைத்துக கொள்வார்கள்.

சமநிலையில் தான் எல்லாமே ஒழுங்காக நடக்கும்.

கொள்கை கோட்பாடு ஒரு பத்திரிகைக்கு இருப்பது நல்லதாயினும் அவசியமானதென்று சொல்லமுடியாது. உண்மையாய், நேர்மையாய் செய்திகளை பெரிதுபடுத்தாமல் விசயதானங்களை தந்தாலே போதும்.

## விளம்பரம் பெருக வியாபாரம் செய்யுங்கள்

புலிகளை ஆதரித்து வெளிவரும் பத்திரிகைகள் அதிகம் விற்பனையாவது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. உண்மையான ஆதரவினலோ, சுயலாபம் கருதியோ அல்லது பயத்தின் காரணமாகவோ சில பத்திரிகைகளை புலிகளை ஆதரிக்கலாம். சில நடுநிலையை பேணலாம். சிலது புலிகளை விமர்சித்துக் கொண்டேயிருக்கலாம். அது அவரவர்கள் விருப்பு கொள்கை எதுவாயினும் அதில் உறுதியாயிருப்பவர்களுக்கு என்றுமே மதிப்பும் மரியாதையும் உண்டு. பத்திரிகைகளுக்கும் இது பொருந்தும். சுயலாபங்களுக்காக ததிங்கிணதோம் போடும் பத்திரிகைகளின் நிலைமை இறுதியில் மாஸ்டர் ரவி பாஷையில் "ததிங்கிணதோம்" தான்.

பத்திரிகைகாரர்கள் தங்கள் சொந்த பணத்தை போட்டு பத்திரிகைகளை வெளியிடும்படி வாசகர்கள் கேட்டுக் கொள்ள மாட்டார்கள். ஓரளவு வாணிப நோக்கம் பத்திரிகைகளுக்கு இருக்கவேண்டும் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். வாகனம் எதுவாயினும் பயணம் சொகுசாய் அமைந்தால் சரி. அதற்காக இலவச வாகன சேவைகளில் எல்லோரும் உட்கார்ந்து விடவும் மாட்டார்கள். இலவசம் என்றால் சன நெருக்கடி. சொகுசு இங்கே தாரை வார்க்கப்படும்.

உலகத்தமிழர் பத்திரிகை இலவசமாக வெளிவிடப்படுகிறது— அதன் நோக்கம் வேறு. தனியார் பத்திரிகைகள் இலவசமாக வெளியிடுவதனால் விளம்பரம் நிறைய கிடைக்கலாம். ஆனால் தேவையான வாசகர்களை சென்றடையும் என்பதை சொல்வதற்கில்லை. ஆத்துல போற வெள்ளம் அண்ணை குடி தம்பி குடி என்ற கதைதான். இந்த இலவச பத்திரிகைகள் பத்திரிகை விநியோகத்தினால் தாயக விற்பனையில் எதுவித பாதிப்பும் இருக்கவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது. விஷயம் இருந்தால் சரக்கு விற்கும். 75 சதத்திற்கு பத்திரிகை வாங்குவதால் வாசகர்கள் பிச்சைக் காரர்களாகி விட மாட்டார்கள். இலவச பத்திரி கைகள் இருபதினாயிரம் என்ன நாற்பதினாயிரம் போனாலும் வாசகர்களை திருப்திபடுத்துகின்றனவா என்பதற்கு உண்மையான அத்தாட்சி எதுவும் கிடைத்து விடமுடியாது. ஏனைய பத்திரிகை களின் விற்பனையை முறியடிக்கும் நோக்கம் ஒன்றைத் தவிர வேறு எந்த நோக்கமும் இந்த இலவச பத்திரிகைகளுக்கு இருக்கமுடியும் என்று எதிர்பார்க்க இயலாது.

நான் முன்பொரு முறை சொன்னதுபோல் பத்திரிகைகளும் இயக்கங்களை போலவேதான். இலவசம் என்ற ஆயுதத்தைக் கையாள்வதை விடவும் விஷயதானம் என்ற மேடையைக் கையாண்டால் எல்லாப் பத்திரிகைகளுக்கும் பலப்பரீட்சைக்கான சமநிலம் கொடுப்பதாய் அமையும்.

தமிழருவியை ஒரு ததிங்கினதோம் பத்திரிகையாய் பார்க்க முடியவில்லை. அதனால்தானோ என்னவோ இந்த வியாபார சூழ்நிலையில் பல நாள் வாழ்வை தொடர முடியாமல் போயிருக்கலாம். இலவச ஆதிக்கத்தின் விளைவுதான் இப்பத்திரிகை நின்றுபோனதுக்கு காரணமாக அமையுமாயின் கொள்கை கோட்பாடுகளை குழிதோண்டி புதைத்துவிட்டு எல்லோரும் இலவச சேவையில் இறங்கிவிட வேண்டியதுதான்.

அப்போது வியாபாரிகளின் சுலோகம் மாற்றப்பட்டு ' விளம்பரம் பெருகவியாபாரம்செய்யுங்கள்' என்ற நிலைமைதான் இருக்கும் போலிருக்கின்றது.

வாழ்க பத்திரிகா தர்மம்.

**சிவதாசன்**

# Scarborough Dental Office

- Cosmetic Dentistry
- Crown & Bridges
- Gum Treatment
- Root canals
- Bleaching
- Dentures
- Surgery

★ அவசர சிகிச்சைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி சிகிச்சை வழங்கப்படும்
★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்
★ காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படும்




## Dr.Athi K.Somasundaram
## டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,
கனடா தேசிய பல்வைத்திய சபை

**Tel:(416) 750 9969**
**Fax:(416) 750-9967**

**2155 Lawrence Ave East, Suite 10**
**(At Birchmount), Scarborough**
**•Wheel Chair Access**
**•Free Parking**

*திங்கள் முதல் சனி வரை*
*காலை 9 மணி - மாலை 9 மணி வரை*
*ஞாயிறு தினங்களில்*
*நண்பகல் 12 - மாலை 5 மணி வரை*
*(ஞாயிறு தினங்களில் சேவையைப் பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல் செய்து கொள்ளுங்கள்)*
*★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை*

**Monday-Saturday**
**9 AM-9 PM**
**Sundays**
**12 Noon-5 PM**
**Sunday by appointment only**
**24 Hrs Emergency Service**

# ஈழ வரலாற்றிற்கான ஏக உரிமை சபாலிங்கத்தின் மரணம்

**ஈழ இயக்கத்தின் இறுதி வெற்றி வீரனை தன்னைக் கருதிக் கொள்ளும் பிரபாகரனுக்கு வரலாறு அவருக்கு மட்டுமே சொந்தமானது. அது எத்தனை உயிர்களைப் பலி கொண்டாலும் பரவாயில்லை. இதுதான் அவரது இருப்பின் மையமே.**

## தராகி

**ஐலண்ட் பத்திரிகையில் கடந்த வாரம் தராக்கி எழுதிய கட்டுரையிலிருந்து சில முக்கிய பகுதிகள் இங்கே பிரசுரமாகின்றன.**

1991 இல் நான் ஐலண்ட் ஞாயிற்றுப் பதிப்புக்காக எழுதிய கட்டுரைகளின் தொகுப்பை அழகாக வெளியிட்டிருந்தார். அதிலிருந்து ஈழ இயக்கங்களின் ஆரம்பம், வளர்ச்சி பற்றி நன்கு ஆய்வு செய்யப்பட்டதும் ஆவணப்படுத்தப்பட்டதுமான நூல் ஒன்றை எழுதும்படி பல தடவைகள் என்னை வற்புறுத்தியிருந்தார். தமிழ் அரசியல், ஈழப் போர் போன்றவற்றினால் ஏற்பட்ட வாராந்த தடங்கலினால் அந்த வேண்டுகோளுக்கு உடன்பட முடியவில்லை. பின்னர் அவர் தானாகவே அதைச் செய்ய முன்வந்ததாக கேள்விப்பட்டேன். ஈழ இயக்கத்தின் ஆரம்ப வரலாற்றின் பயங்கரமான பகுதிகள் பற்றிய அவரது விசாரணைகளே அவரது உயிருக்கு உலையாய் அமைந்ததை அறியக் கூடியதாக உள்ளது. தமிழ் அரசியல் தங்கள் ஏகபோக சொத்து என்று கருதும் புலிகளுக்கு தமிழ் இயக்க வரலாறும் அவர்களுக்கே உரியது. பிரபாகரன் காலத்தைச் சேர்ந்த ஒருவர் முதன் முதலாக பேனாவைத் தூக்கினார் என்றால் அது சபாலிங்கம் தான். இப்போது அவர் இறந்து விட்டார்.

லண்டனில் செல்வாக்கு மிக்க குழு ஒன்று இந்தக் கொலைக்கு புலிகளே காரணம் என்று ஐரோப்பிய அரசுகளிடம் புலிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுத்திருப்பதாக அறிகிறேன். இதற்கு காரணம், ஐரோப்பா, இந்தியா, இலங்கை, வட அமெரிக்காவைச் சேர்ந்த எழுத்தாளர்கள், அறிவுஜீவிகள், சமூக சேவையாளர், பத்திரிகையாளர் போன்றோருடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தவர்களில் சபாலிங்கமும் ஒருவர். அவர்களின் பார்வையில் சபாலிங்கம் ஒரு நேர்மையான மனிதர், தனது செயற்பாடுகளுக்காக தன்னை கடனில் அமிழ்த்திக் கொண்டவர்.

பிரான்சில் உள்ள அவரது சகபாடிகள் அவரது மரணத்திற்கு காரணமாக பின்வருவதைக் கூறுகின்றனர். 'தாயகத்திற்கு' எழுதிய கட்டுரை ஒன்றில் ஈழ இயக்கத்தின் ஆரம்ப காலங்களில் பிரபாகரன் சம்பந்தப்பட்ட இரண்டு விடயங்களை கேள்விக்குள்ளாக்குகிறார். ஒன்று குட்டிமணி, தங்கத்துரை கைது, மற்றது நீர்வேலி வங்கிக் கொள்ளை.

இந்த விடயங்கள் பற்றி தற்போது கூறப்படுகின்ற விடயங்களை கேள்விக்குள்ளாக்கி தான் விரைவில் உண்மையை வெளிக் கொணர்வதாகக் கூறியிருக்கிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் மேற்படி இரு சம்பவங்களிலும் பிரபாகரன் துரோகம் செய்ததாக அவர் குற்றம் சாட்டுகிறார்.

குட்டிமணி தமிழ் நாடு செல்ல படகுக்கு காத்து நின்ற போது கைது செய்யப்பட்டார். அவர் தப்பிச் செல்வது பற்றிய விபரங்களை யாரோ தகவல் கொடுத்ததாகவே பரவலாக நம்பப்பட்டது. குட்டிமணி மீது கோபம் கொண்ட படகுக்காரர் தகவல் கொடுத்ததாக ஒரு தகவல். மற்றது குட்டிமணியைத் தொலைத்துக்கட்ட பிரபாகரனே செய்தி கொடுத்ததாக தகவல். டெலோ இயக்கம் இதையே வலியுறுத்தி வந்தது. ஆனால் 86இல் படகுக்காரர் இரக்கமின்றி புலிகளால் படுகொலை செய்யப்பட்டார். யாரும் இது பற்றி சரியாக கூறமுடியாது. அத்துடன் குட்டிமணியும் வெலிக்கடையில் ஏற்கனவே கொல்லப்பட்டிருந்தார்.

நீர்வேலி வங்கிக் கொள்ளை பற்றி சபாலிங்கம் எழுப்பிய கேள்வியும் அதன் விளக்கமும் ஆச்சரியமானவை. 79 இல் புலிகள் இயக்கம் பிரிந்த போது பிரபாகரன் எந்த வளங்களும் இன்றி நண்பர்களுடன் குட்டிமணி, தங்கத்துரை தலைமையிலான டெலோவில் சேர்ந்து அவர்களுக்காக கொஞ்சக் காலம் வேலை செய்தார். அந்த நேரத்தில் அவர் நீர்வேலி வங்கிக் கொள்ளையில் பங்கு கொண்டார். டெலா இயக்கம் தொடங்கிய ஒபரோய்தேவனும் இதில் பங்கு கொண்டார். தாயகத்தில் வெளிவந்த கட்டுரையில் இந்த கொள்ளையில் சம்பந்தப்பட்ட அனைவரும் இறந்து விட்டார்கள் என்பதை சபாலிங்கம் சுட்டிக் காட்டினார். ஒன்றில் அரச படைகளாலோ, அல்லது புலிகளாலோ அவர்கள் கொல்லப்பட்டனர். எனவே இதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் இந்த உலகில் இருந்து அழிக்கப்படுவதில் பிரபாகரனுக்கு பயன் இருந்தது என்பதை சபாலிங்கம் கருத்துக் கூற முயன்றிருக்கிறார்.

நீர்வேலி வங்கிக் கொள்ளை பிரபாகரனின் வாழ்வில் ஒரு கறையாகும். புலிகளின் இயக்க விதிப்படி வேறியக்கங்களில் சேர்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தனது சமகாலத்தைச் சேர்ந்தவர்கள் பலரை அந்தக் காரணத்துக்காகவே பிரபாகரன் கொன்றிருக்கிறார். இங்கே சபாலிங்கம் அவ்வாறான விடயங்களுக்கு சான்று சேர்த்து புத்தகம் எழுத முயல்வதைக் காண்கிறோம்.

அதற்கு முன்னர் தாயகம் பற்றி... இரண்டு ஈழ யுத்த காலங்களிலும் வெளிவந்த கடுமையான புலிகள் இயக்க எதிர்ப்பு வெளியீடு இதுவாகும். தாயகம் புலிகள் மீது செய்த விமர்சனங்கள் ஏற்படுத்திய தரத்துடன் ஒப்பிடுகையில்

இராணுவத்தின் 'உளவியல் நடவடிக்கை' சூரர்கள் பாலர் பாடசாலைப் பிள்ளைகள் போன்றே தோன்றுவர். இரண்டு வருடங்கள் பத்திரிகையாக வெளிவந்த பின்னர் 92 இல் புலிகள் தாயகம் விற்கும் கடைகளை மிரட்டி, போட்டிப் பத்திரிகையான செந்தாமரைக்கு சார்பாக அதன் விற்பனையை குலைத்த போது அது சஞ்சிகையாக மாற நிர்ப்பந்திக்கப்பட்டது. தற்போது ரொறன்ரோவில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம்எழுத்தாளரான ஜோர்ஜ் குருஷ்சேவினால் வெளியிடப்படுகிறது.

> **79 இல் புலிகள் இயக்கம் பிரிந்த போது பிரபாகரன் எந்த வளங்களும் இன்றி நண்பர்களுடன் குட்டிமணி, தங்கத்துரை தலைமையிலான டெலோவில் சேர்ந்து அவர்களுக்காக கொஞ்சக் காலம் வேலை செய்தார். அந்த நேரத்தில் அவர் நீர்வேலி வங்கிக் கொள்ளையில் பங்கு கொண்டார்...... நீர்வேலி வங்கிக் கொள்ளை பிரபாகரனின் வாழ்வில் ஒரு கறையாகும். புலிகளின் இயக்க விதிப்படி வேறியக்கங்களில் சேர்பவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தனது சமகாலத்தைச் சேர்ந்தவர்கள் பலரை அந்தக் காரணத்துக்காகவே பிரபாகரன் கொன்றிருக்கிறார்.**

புலிகளை கடுமையாக விமர்சிக்கும் குருஷ்சேவ் போன்றவர்கள் தொடர்ந்தும் ஆரோககியமாகவும் உறுதியாகவும் இருக்கும் போது ஏன் சபாலிங்கத்தைக் கொல்வதற்கு யாரும் இவ்வளவு கஷ்டங்களை எதிர்கொண்டிருக்க வேண்டும் என்பது பலருக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஆர்வமுள்ள புலிகள் பற்றிய விமர்சகர்கள் போலன்றி, ஈழ இயக்கத்தின் ஆரம்பமுன்னோடிகளில் தற்போது எஞ்சியிருப்பவர்களில் ஒருவரான சபாலிங்கத்தால் இந்த விடயங்கள் கூறப்படுவது அவரைக் கொன்றவர்களுக்கு மிகவும் முக்கியமான ஒன்றாக இருந்திருக்க வேண்டும். இந்த ஈழ இயக்கத்திலிருந்து தான் பிரபாகரன் என்ற சிறுவன் ஒரு கெரில்லாவாக உருவாக்கப்பட்டான்.

71இல் ஜே.வி.பி ஒடுக்கப்பட்ட பின்னர் தமிழ் மாணவர் பேரவையை ஆரம்பித்த சத்தியசீலனுக்கு சபாலிங்கம் சகபாடியாவர். இந்த அமைப்பு சு.க காலத்தில் தரப்படுத்தலை எதிர்த்து தொடங்கப்பட்டதாகும். இந்த அமைப்பு ஆயுதப் போராட்டத்தை வலியுறுத்தியது.

1972இல் பிரபாகரன் சத்தியசீலனின் இரகசிய அமைப்பில் சேர்ந்து கொண்டார். கட்டுபெத்தையில் மாணவராக இருந்த சபாலிங்கம், சத்தியசீலன், பூபதி மற்றும் பலர் மார்ச் 73ல் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். இயக்கம் இந்த நிலையில் சிதைக்கப்பட்ட போதிலும் பிரபாகரன் தப்பித்துக் கொண்டார். அநுரதபுரம் புதிய சிறையில் சபாலிங்கம் சிறை வைக்கப்பட்டிருந்த போது, பிரபாகரனுடன் புதிய தமிழ் புலிகள் அமைப்பை ஆரம்பித்த செட்டி தனபாலசிங்கம், கண்ணாடி பத்தன், ரத்தினகுமார் ஆகியோர் சிறையுடைத்து தப்பிச் சென்றனர். இதன் பின்னர் சபாலிங்கமும் மற்றவர்களும் போகம்பரை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஒருநாள் இரண்டாம் மாடியிலிருந்து தவறி விழுந்தார். இந்த விபத்தில் இவரது இடக்கை நிரந்தரமாக பாதிக்கப்பட்டது.

75 மாசி மாதம் விடுவிக்கப்பட்ட சபாலிங்கம் பரந்தன் உப்பளத்தில் வேலை செய்தார். வரதராஜப்பெருமாள் முக்கிய மானவராக இருந்த ஈழவிடுதலை இயக்கத்துடன் இருந்த தொடர்புகள் தவிர மற்றவர்கள் போல் இவரும் மெதுவாக ஒதுங்கத் தொடங்கினார். ஈழவிடுதலை இயக்கத்தில் இருந்த இன்னொரு உறுப்பினர் புஷ்பராஜா. இவரும் பெருமாள் போல ஈ.பி.ஆர்.எல்.எஃபில் சேர்ந்து கொண்டார்.

சபாலிங்கத்தின் சமீபத்திய வேலைகளில் புஷ்பராஜா நெருக்கமான தொடர்பு கொண்டிருந்ததால் அவரையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஐச் சேர்ந்தவர் என்று பலர் அவசரப்பட்டு கூறினர்.

ஒருநாள் இரவு அவர் உப்பளத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது அவரது கதவை யாரோ தட்டினர். அது சத்தியசீலனின் குழுவில் இருந்த சிறுவன். அவர் அங்கே அடைக்கலம் தேடினார். தனது வதிவிடத்தில் பல வாரங்கள் பாதுகாப்பான சூழ்நிலை வரும்வரை சபாலிங்கம் மறைத்து வைத்திருந்தார்.

புலிகள் தான் இந்தக் கொலையைச் செய்தார்கள் என்றால் எழுபதுகளில் தொடங்கிய ஈழ இயக்கத்துடன் நெருக்கமான தொடர்புகள் கொண்டிருந்து தற்போது மேற்கு நாடுகளில் வசிப்பவர்களுக்கு அது தரும் செய்தி இதுதான். வரலாறு வெற்றிவீரன் பிரபாகரன் சொல்வதன்படி தான் எழுதப்படும்.

சத்தியசீலன், இணுவிலில் வைத்து பிரபாகரன் கைது செய்யப்படுவதிலிருந்து காப்பாற்றிய சோட்பாலா இருவரும் ஜேர்மனியில் வாழ்கிறார்கள். ஐயர் என்ற யாழ்ப்பாண பிராமணர் புலிகளின் ஆரம்பகால பொருளாளராக இருந்தவர் தற்போது ஐரோப்பாவில் வாழ்கிறார். 85ல் பிரபாகரனுடன் மோதல் ஏற்படும்வரை பிரபாகரனுக்கு சமமாக இருந்த ராகவன் தற்போது லண்டனில் வசிக்கிறார். ஆனால் எல்லோரும் இன்றுவரை மௌனமாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் சந்திக்க சபாலிங்கம் திட்டமிட்டிருந்தார். அதன் மூலம் இன்னொரு வரலாற்றைச் சொல்ல அவர் முயன்றார்.

ஈழ இயக்கத்தின் இறுதி வெற்றி வீரனாக தன்னைக் கருதிக் கொள்ளும் பிரபாகரனுக்கு வரலாறு அவருக்கு மட்டுமே சொந்தமானது. அது எத்தனை உயிர்களைப் பலி கொண்டாலும் பரவாயில்லை. இதுதான் அவரது இருப்பின் மையமே.

# திறனாய்வு

**சுபைர் இளங்கீரன்**

**ஈழத்தின் சிருஷ்டி இலக்கியம் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்ற ஆரம்பித்த தென்றாலும் ஈழகேசரியின் காலகட்டத்தில்தான்– அதாவது 1930க்குப் பிறகுதான் புதிய உருவமும், மலர்ச்சியும் வளர்ச்சியும் பெற ஆரம்பித்தது என்று கூறலாம்.**

**பத்திரிகைகளைக் கூட நாவலர் விட்டுவைக்கவில்லை. ஈழத்தின் முதல் தமிழ்ப் பத்திரிகையான 'உதயதாரகை'யை பின்வருமாறு விமர்சித்தார்.**

**''உதயதாரகையே' நீ சனங்களின் பணத்தினுலேதானே இவ்வளவு காலம் நிலைபெற்றிருந்தாய்! பத்திரிகையின் கடமை அறிந்தாயா? சனங்களுக்குப் பொது நன்மை செய்வது பத்திரிகையின் கடன். நீ என்ன செய்கிறுய்?...சனங்களின் பணங்கொண்டு நடாத்தப்படுகிற உதயதாரகை இதிலே தன் கடமையைச் செய்கிறதா? இல்லை... பொது சனங்களுக்கு மாருக பொய் பேசுகிறது... வெகுசனத்துரோகியாகிய உதயதாரகையை இப்போதும் சனங்கள் வாங்குகிறுர்களா?"**

"இவ்வாண்டில் மகத்தான சம்பவம் சைவ பரிகாரம் என்ற தமிழ் நூல். அது அசாதாரண இலக்கியம். கிறிஸ்து மதத்தை எதிர்த்து ஆணித்தரமாகசைவக்கோட்பாடுகளை நிலைநிறுத்தும் நூல். அது முற்றிலும் புதிய தந்திரங்களைக் கையாண்டு நமது சமயத்தைத் தாக்குகிறது. அது கிறிஸ்தவ சமயம் முறையற்றது. பயனற்றது என்று சொல்லவில்லை. இரண்டிற்கும் நடுவே இரு சமயங்களையும் எதிரெதிரே வைத்து கிறிஸ்துவ ஆகமத்திற்கு சரியான சைவாகமங்களைக் காட்டி அதற்கு இது குறைவொன்றுமில்லையே? சைவத்தை விடக் கிறிஸ்துவ மதத்தில் என்ன விசேஷம் இருக்கிறது? என்பதை எடுத்து அலசுகிறது. முழுக்கு, தீர்த்தம் பிரார்த்தனை, விரதம், யாத்திரை, லிங்காராதனை எல்லாம் நம்மிடம் உண்டு என்று பைபிள் ஆதாரத்துடன் காட்டுகிறது. இருபது விஷயங்களை அது அலசுகிறது. முதல்தரமான மூளைதான் இதை எழுதியிருக்க வேண்டும் இந்நூல் நமக்குப் பெருங்கெடுதல் செய்கிறது"

அடுத்தது இலக்கியம்.

இதிகாச புராணங்கள், இலக்கணம், மொழி ஆகியவற்றிலும் அவருடைய கண்ணோட்டம் சென்றது. அவர், அக்காலத்தில் பிரசுரிக்கப்பட்ட காப்பியங்களைத் திறனாய்ந்து மறுப்பு எழுதினுர். உதாரணமாக வில்லிபுரத் தூராழ்வாரின் பாரதம் என்னும் காப்பியத்தை வைணவர்கள் சேர்ந்து சிவபெருமானைப் புகழ்ந்து ஆங்காங்கு செய்யப்பட்டுள்ள அருஞ்செய்யுட்களையெல்லாம் நீக்கி பிரசுரித்த காலத்தில் அக்குறையை வெளிப்படுத்தி உள்ளவாறே பதிப்பித்தார் என்று வித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது. கூழங்கைத்தம்பிரான் நன்னூலுக்கு எழுதிய உரையை விமர்சித்து அதைப் பல மாற்றங்களோடும் புதிய திருத்தங்களோடும் வெளியிட்டார். தமிழ் மொழியைப்பற்றி கட்டுரைகளும், உரை நூல்களும் வகுத்தார். அவர்வெளியிட்ட சூடாமணி நிகண்டு கூட விமர்சனத்தின்பாற்பட்டதுதான்.

மூன்றுவது சமூக வாழ்க்கை, அரசியல் துறைகளையும் நாவலர் விமர்சித்தார். இவற்றில் புகுந்திருந்த ஊழல்களையும் குறைபாடுகளையும் காரசாரமாக விமர்சித்தார். ஒருசமயம் கவர்னருக்கு சமர்ப்பித்த விண்ணப்பத்தில் அவர் செய்துள்ள விமர்சனத்தின் ஒரு பகுதியை உதாரணமாகக் காட்டுகிறேம்.

வேலை தரும் விசயத்தில் சலுகையுடன் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. தக்காருக்கு இடமேயில்லை. வேலைக்காரரை ஏஜெண்டு தன் கைப்பாவையாக ஆட்டி வைக்கிறுர். ஜன சம்மதத்தை மதிப்பதில்லை. குலாமிகளின் உறவினர்களுக்கெல்லாம் வேட்டைதான். சில இடங்களில் உறவினரே நொத்தேருமாகி அட்டூழியம் செய்கிறுர்கள். பத்திரப்பதிவுகளில் படுமோசம் நடக்கிறது....."

பத்திரிகைகளைக்கூட நாவலர் விட்டுவைக்கவில்லை. ஈழத்தின் முதல் தமிழ்ப் பத்திரிகையான 'உதய தாரகை'யை பின்வருமாறு விமர்சித்தார்.

"உதயதாரகையே' நீ சனங்களின் பணத்தினுலேதானே இவ்வளவு காலம் நிலைபெற்றிருந்தாய்! பத்திரிகையின் கடமை அறிந்தாயா? சனங்களுக்குப் பொது நன்மை செய்வது பத்திரிகையின் கடன். நீ என்ன செய்கிறுய்?... சனங்களின் பணங் கொண்டு நடாத்தப்படுகிற உதயதாரகை இதிலே தன் கடமையைச் செய்கிறதா? இல்லை... பொது சனங்களுக்கு மாருக பொய் பேசுகிறது... வெகுசனத் துரோகியாகிய உதயதாரகையை இப்போதும் சனங்கள் வாங்குகிறுர்களா?"

நாவலரின் விமர்சனங்கள் துணிச்சல் மிகுந்தவை. காரசாரமானவை. அதனுல் அவை 'கண்டன நூல்கள்' என்ற பெயரையும் பெற்றிருக்கின்றன. அக்காலத் சூழ்நிலையையும், நாவலரின் சரித்திரரீதியாக பாத்திரத்தின் சமூகத்தன்மையையும் ஆராய்ந்து பார்த்தால் அவருடைய திறனாய்வுகளில் 'கண்டனத் தொனி' மிகைத்திருப்பதில்வியப்பில்லை, இந்த அம்சங்கள்தான் நாவலரின் விமர்சனங்களிலுள்ள சிறப்பியல்புகளையும், குறைபாடுகளையும் எடுத்துக்காட்டக் கூடியனவாயிருக்கின்றன.

சிறப்பியல்புகளாவன, ஆழ்ந்த பொறுப்புணர்ச்சி, நேர்மை, வியக்கத்தக்க துணிச்சல், விஷய அழுத்தம், தெளிவு, தர்க்கரீதி, புலமை முதலியன. குறைகளாவன: கண்டனப் பண்பு, தன் மதச் சார்புவாதம், அப்போதைய

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் கோட்பாடுகளில் உள்ள இறுக்கமான பிடிப்பு, புதுமை எதிர்ப்பு, கருத்து முதல்வாதக் கண்ணோட்டம் முதலியன.

நாவலருக்குப் பிறகு அவர் விட்டுச் சென்ற வழியில் நின்று இதிகாச புராண, சமய, மொழி, இலக்கண நிகண்டு, அகராதி முதலியவற்றை இயற்றுவதிலும் ஈடுபட்டுத் தமிழ்த் தொண்டு செய்த அறிஞர்பெருமக்கள் பலர். இவர்களில் நாவலரின் மருகரான வித்துவ சிரோண்மணி பொன்னம்பலம்பிள்ளை, மட்டுவில் வேற்பிள்ளை, மகாவித்துவ சிரோன்மணி கணேசய்யர் ஆகியோர் விமர்சனத்திறன் படைத்த உரையாசிரியர்கள். குறிப்பாக கணேசய்யர் உரைநூல்கள் எழுதியதோடு நின்றுவிடவில்லை. 'கவியின்பம்' என்னும் தலைப்பில் அரகேசரியார் இயற்றிய 'இரகுவம்சம்' என்னும் காவியத்தையும், ஒரு செய்யுள் பொருளாராய்ச்சி எனும் தலைப்பில் சிறு பாணாற்றுப் படையில் ஒரு பகுதிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையையும், கம்பர் காவியத்தையும் விமர்சித்து காத்திரம் மிகுந்த கட்டுரைகள் எழுதியுள்ளார். 'செந்தமிழ்' என்னும் பத்திரிகையில் இலக்கண–இலக்கிய விஷயமாகவும் பல விமர்சனக் கட்டுரைகள் வரைந்துள்ளார்.

இவர்களைவிட கறேல் விசுவநாதம்பிள்ளை (சுப்பிரதீபம்) முத்துக்குமாரகவிராயர் (ஞானக்குமமி, பேசுமதபரிகாரம்) தாமோதரம பிள்ளை (சைவ மகத்துவம், சைவ மகத்துவதிக்கார மகத்துவம்) குமார சாமிப் புலவர் (சைவ கண்டன பரிகாரம்) சங்கரப் பண்டிதர் (சைவ மகத்துவ பானு, சைவ மகத்துவ திக்கார நிக்கரதும்) சிலம்புநாதப் பிள்ளை (அஞ்ஞானக்கும்மி மறுப்பு) சபாபதி நாவலர் (யேசுமத சங்கற்ப நிராகரணம்) த.கைலாசபிள்ளை (யேகோவா, கிறிஸ்துவர் ஆகவேண்டிய தில்லை) குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

இவர்கள் எழுதி வெளியிட்ட இந்நூல்கள் கிறிஸ்துவ சமயத்தையும், சைவ சமயத்தையும் ஒப்பு நோக்கியும், மறுத்தும், கண்டித்தும் விமர்சித்திருக்கின்றன. இந்நூல்களின் விமர்சன வடிவம் கண்டன ரூபத்திலிருப்பதால் இவை கண்டன நூல்கள் என்று கருதப்படுகின்றன. அக்காலச் சூழ்நிலை இவ்வகையான விமர்சனத்திற்குத் தான் இடம் தந்தது.

மேலே குறிப்பிட்ட ஆசிரியர்களையும் நூல்களையும் பரிசீலனை செய்கின்றபோது இரண்டு விஷயங்கள் புலப்படுகின்றன. ஒன்று நாவலர் காலத்திலும், அவருக்குப் பிறகும் அதாவது 19ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து கடைசி வரையிலுள்ள காலகட்டத்தில் நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள் போன்ற நவீன இலக்கியங்கள் தமிழில் தோன்றவில்லை. (ஒன்றிரண்டைத் தவிர) எனவே அக்கால தமிழறிஞர்களின் விமர்சனப் பார்வை பழைய இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் விழுந்து உரை நூல்களாகவும் நயவிளக்க நூல்களாகவும், இலக்கண ஆராய்ச்சி ஏடுகளாகவும் மலரச் செய்தன. இரண்டாவது புதிதாக நுழைந்த கிறிஸ்துவ சமயம் சைவ சமயத்தையும் பாரிக்கச் செய்தது. எனவே சமய விமர்சனத்தையும் இவர்கள் செய்ய வேண்டியிருந்தது. இவ்விரண்டும் சரித்திரத்தின் அன்றையத் தேவையாகவும் இருந்தன. ஆதலால், விமர்சன இலக்கியத்தில் இந்நூல்களுக்கு முக்கியத்துவம் உண்டு.

இருபதாம் நூற்றாண்டு தோன்றியதும் புதிய மாறுதலுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப இலக்கிய முயற்சிகளும் திசைதிரும்பத் தொடங்கின. எனவே, நாவலரைப் பின்தொடர்ந்து வந்த இந்தப் பரம்பரையினரின் சரித்திர ரீதியான கடமையும் முடிவுற்றது. அந்தப் பரம்பரை இருபதாம் நூற்றாண்டில் வளர்ந்து பெருகாமல் விட்டதற்கு இதுதான் காரணம்.

இன்று இப்பரம்பரையின் வாரிசாக இருப்பவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள்தான். தமிழ்ப் புலமை மிக்க பண்டிதமணி அவர்கள் தேர்ந்த இலக்கிய ரசிகர். சிறந்த திறனாய்வாளர். பண்டிதமணி நாவலர் பரம்பரையின் வாரிசாக இருந்தபோதிலும் அவருடைய விமர்சன நோக்கு இன்றைய மாறுதலையொட்டி பிற சமயக் கண்டனங்களிலிருந்து ஒதுங்கி முழுக்க முழுக்க இலக்கியரீதியாகவும் தன் சமயச்சார்பாகவும் அமைந்திருக்கிறது. அவர் இலக்கியங்களை எந்த வழி நின்று எந்தக் கண்ணோட்டத்தில் நின்று கற்றாரோ அவ்வழி நின்று இலக்கியங்களை ஆராய்கிறார். விமர்சிக்கிறார் அவருடைய விமர்சனம் ரசமானது. நாம் அதுவரை படிக்காத ஒரு காவியத்தை பண்டிதமணி விமர்சித்தாரென்றால் அவருடைய விமர்சனம் நம்மை முற்றாக மயக்கி அவர் விமர்சித்த காவியத்தை உடனே படிக்க நம்மைத்தூண்டும். அவருடைய விமர்சனத் திறனுக்கு 'பாரத நவமணிகள்' தக்கதோர் சான்று.

பண்டிதமணி பழைய இலக்கியங்களில் மட்டுமல்ல தற்கால இலக்கியங்களிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். இவற்றையும் விமர்சிக்கிறவர். சுருங்கச் சொன்னால் இன்று வாழும் ஈழத்து விமர்சகர்களில் பண்டிதமணி குறிப்பிடத்தக்கவர்.

மற்றொரு வரிசையை எடுத்துக் கொண்டால் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, கலாநிதி வித்தியானந்தன், விரிவுரையாளர் செல்வநாயகம் ஆகியோரைக் குறிப்பிடலாம். இம்மூவரும் இலக்கியத் தேர்ச்சி மிக்கவர்கள், விமர்சனத் திறன் உடையவர்கள். ஆயினும் இவர்கள் இதற்கு முன்னிருந்து வழிவந்த மரபை ஒட்டித்தான் இலக்கிய விமர்சனம் செய்கிறார்கள், எனவே இவர்களின் திறனாய்வுகள் இன்றைய இலக்கிய வளர்ச்சிக்கும், விமர்சனப் பார்வைக்கும் ஈடுகொடுக்கக் கூடியதாயில்லை. இம்மூவரும் இலங்கை பல்கலைக்கழகத்தில் பணியாற்றுவதால் இத்துறையில் இன்னும் காத்திரமாக ஈடுபடுவதற்கு வெளியில் இருப்பவர்களைவிட வாய்ப்பும் வசதியும் அதிகம் பெற்றிருக்கிறார்கள். இவற்றைத் துணைக்கொண்டும், தமது புலமை திறமை ஆகியவற்றைப் பயன்படுத்தியும் பல சிறந்த இலக்கிய விமர்சனங்களைச் செய்ய முடியும். இதுவரை அவர்கள் செய்திருக்கும் திறனாய்வுகள் அவர்களுடைய தகுதிக்கும் தரத்திற்கும் திறனுக்கும் போதா. இனிமேலாவது இம்முயற்சியில் வேகமாக ஈடுபட்டு ஈழத்தின் தமிழ் விமர்சன இலக்கியத்தை வளர்க்க வேண்டும் என்று இலக்கிய ஆர்வமுள்ளவர்கள் விரும்புகிறார்கள்.

ஈழத்தின் சிருஷ்டி இலக்கியம் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்ற ஆரம்பித்ததென்றாலும் ஈழகேசரியின் காலகட்டத்தில்தான்– அதாவது 1930க்குப் பிறகுதான் புதிய உருவமும், மலர்ச்சியும் வளர்ச்சியும் பெற ஆரம்பித்தது என்று கூறலாம்.

# இழப்புகள் இன்னுமா?



சிதம்பரம் ஞா.வடிவேலனார்

நேரம்சரியா நாலுமணிதான் என்பதை பிள்ளையார் கோவில் கண்டாமணி ஓசையும் வழமைபோல சாயற்பனைக்கு மேலே தெரியும் அந்த விடிவெள்ளியும் தம்பையாக் கிழவனுக்குச் சொல்லி நின்றது. சுறுட்டைப் பற்ற வைத்த தம்பையாக்கிழவன் அடிவளவுக்குள் சென்று காலைக்கடன் முடித்துக் கொண்டு சிந்தனையில் ஆளத்துவங்கினார்.

" கத்தரிக்காய இண்டைக்குப் புடுங்காட்டி முத்திப்போடும், மிளகாய் கண்டுக்கு மருந்தடிக்கவேணும், கீரைக்குத் தண்ணிவிடவேணும், எல்லாம் நான் ஒருத்தன் தான் செய்யவேணும் எத்தனை மட்டும் தான் இப்படிக் கிடந்து தனிய அலவாய் படுறதோ தெரியாது. மாடா அடிச்சு ஓடாத் தேஞ்சாலும் ஒரு விடிவுமில்ல, இவள் என்ர பெட்டைக்கு வாற ஆடிவந்தா முப்பத்தாறு வயதாகப்போகுது, ஒரு கலியாணமும் இன்னும் வந்தபாடாயில்ல குமர் முத்தி குரங்கானது என்று சொல்லிறவை, அதுக்காக வேண்டி என்ர பிள்ளையை குரங்கென்று என்னெண்டு எனக்குச் சொல்ல மனம் வரும், எதுக்கும் கொடுத்துவைத்துப் பிறக்கவேண்டும், இவளோட படிச்சதெருவுச்சின்னயற்ற பெட்ட போன சித்திரை தன்ர மூத்த பெட்டைக்கே சாமத்திய வீடு செய்து போட்டாள். இவளுக்கென்னெண்டா இன்னுமே ஒன்றும் சரிப்பட்டுவருதில்ல. இந்த முறையென்றாலும் என்ர சன்னதியானே இந்தச்சம்பந்தத்தைப் பொருத்தியிற்றயெண்டா வாற தேருக்கு உன்ர இடத்தில செதில் குத்தி காவடி யெடுப்பன்ரா! ஐயா நீதான் இந்தமுறை யெண்டாலும் கண் முழிக்கவேணும். கடவுள் என்ன மாதிரி மூத்ததா ஆம்பிளப்பிள்ளையாய் பார்த்துத் தந்து அடுத்ததா இவளைத் தந்து இவளுக்குத் துணையா என்றொரு பெடியனையும் தந்து ஐயோ அப்ப பட்டேனே சந்தோசம். அதற்கும் மேலான துன்பத்தை இப்ப தந்து ஏன்தானோ தெரியா இந்த அறுந்த கடவுள் இப்படி என்ன சோதிக்கிறதோ தெரியா. என்ன கொண்டு போய் சேர். எனக்கு அதையும் செய்யிறாய் இல்ல. என்ர சன்னிதியானே ஏன்னையா அந்த இரண்டு ஆண்குஞ்சுகளையும் தந்துபோட்டு பறிச்சனி. அதுகள் இருந்திருந்தா கனடா, சுவிஸ் எண்டு ஓடி ஒருமாதிரியெண்டாலும் இந்தப் பெட்டையை கரை சேர்த்திருக்குங்கள். எனக்கு அளந்தது அவ்வளவுதான். ஆரச்சொல்லிக் கலங்கிறது. நான் மண்ணக் கிண்டிக் கிளறிப்படிப்பிக்க அதுகள் மண் மண் எண்டு ஓடி என்னத்தைக் கண்டதுகள். செத்துத் தொலைந்தது தான் மிச்சம். அதுகள் செத்தும் தெய்வமாய்ப் போச்சுதுகள். கதைக்கப்படாது ஆனா முருகன் ஏன் இப்படி என்னப் போட்டுச் சோதிக்கிறானோ தெரியாமக் கிடக்கு. தலைஎழுத்து அப்படி நடந்து போச்சென்று என்னெண்டு ஆறுதல் கொள்ள என்ர மனது ஓம்படும். அண்டெழுதினதை அழிச்செழுத முடியாதெண்டு தலை யெழுத்தின்ர வலிமையை சொல்லிறவையள் ஆனா இவன்கள் என்ர பிள்ளையளின்ர தலையில எழுதிறதிற்கு எண்டா வந்தவங்கள். இன்று வந்து இன்றெழுதி அழிச்சிட்டான்களே! போனதை நினைச்சு என்ன செய்யிறது எதுக்கும் ஒரு கொடுப்பினை வேணும்.

"கீச், மியா, மியா.....

"அட அறுந்த இந்த பூனை குறுக்காலும் நெடுக்காலும் போகுது. என்ன இழவு நடக்கப்போகுதோ தெரியாது. பூனை குறுக்கால போய்தான் என்ன? யானை குறுக்கால போய்த்தான் என்ன? எல்லாம் உள்ளபடிதான் நடக்கும். இந்தப்பட்டையை இதுகள் இப்படி உடைச்சிருக்குதுகள், தண்ணியைக் கிளுவமெண்டா அரைக் கிணத்துக்கு கிடட் இழுக்கையே முழுக்க ஒழுகிக் போகுது. பத்திரமா பட்டையை பாவிக்க இதுகளுக்கு எங்க விளங்கப்போகுது. சின்னாச்சியிற்ற சொல்லவேணும் ஒரு சார்வோலை எடுத்து நனையப் போடச் சொல்லி. தோட்டத்தால வந்து ஒரு பட்டை இழைச்சுப்போடவேணும்."

"இந்த அறுந்த மனிசன்ர தலைவாயலுக்கு வந்த காலத்தில இருந்து இந்த பட்டையால தண்ணி ஒழுகிற சத்தத்திலதான் எழும்ப வேண்டிக் கிடக்கு. எத்தன மட்டும் தான் இப்படிக் கிடந்து இந்த மனுசனும் பாடுபடுறதோ தெரியா? என்ர முருகா எங்கள சோதிச்சது காணும். கெதியில கொண்டுபோய் சேரையா! இந்த சவிரிர கள்ள நாய் இண்டைக்கும் வந்து இந்த அடுப்படியை விறாண்டியிருக்கு.

இனியும் பாவம் பாக்ககூடாது. இண்டைக்கு சவிரி தந்த கருவாட்டிலேயே கொஞ்சம் பொலுடோல் ஊத்தி வைக்கவேணும். தேத்தண்ணி ஊத்துவம் எண்டு வந்தா ஒவ்வொரு நாளும் அடுப்ப இதுக்கெண இப்படிக் கிண்டி கிளறி வைச்சு என்ர பிராணன வாங்குது நாளையோட இந்த தொந்தரவும் ஒருமாதிரி முடியப்போகுது."

" தங்கச்சி யோகம், எடிபிள்ள யோகம்"

" என்னணயப்பு"

"எழும்பண, ஆச்சிக்கெல்லா செங்காரிப்பசு காலால வெட்டினது. எழும்பி பாலக் கறவன் மோன காலக்கட்டிற்று கற. மனிசி கறந்துபோடும். அதுக்கு கை சரியா வீங்கிக்கிடக்குது. மற்ற தாச்சி மோரையும் கரைச்சுப்போடு மத்தியானம் ஆச்சி தோட்டத்துக்கு வரேக்க மோரை கொஞ்சம் கூட கொடுத்தனுப்பு என்ன எடி பெட்ட இந்த விபூதிச் சங்குக்க எங்க விபூதி போடேலயா? கொஞ்சம் எடுத்துப் போட்டுவிடு. ஐயோ முருகா எல்லாத்துக்கும் இஞ்ச பஞ்சிதான்"

" இஞ்சேரண தேத்தண்ணி போட்டிருக்கு, கெதியெணவான ஆறப் போகுது"

"எணை, சங்கத்தில நேற்றும் சீனி வரேல்லையா?"

" இல்லயெண கிடக்கிறதுக்க தான் சமாளிக்கவேணும். மற்றது இண்டைக் கெல்லா புரோக்கர் செல்லையர் வாறதெண்டவர். கடவுளே என்று இது ஒரு மாதிரி ஒப்பேறிச்செண்டா நாம நிம்மதியாக் கண்ண மூடலாம். காட்டுப் புலத்தானுக்குத்தான் வெளிச்சம்"

"ஓம் எண நீ அந்த இடையடிக்காட்டையும் தாறதெண்டு சொல்லு. அது பரியாரி கந்தரிட்ட ஈட்டிலதான் கிடக்கு. இந்தமுறை முளகாய் ஏமாத்தாட்டி ஒரு மாதிரி மீண்டு போடலாம். மற்றது இருக்கிறதைத்தான் கொடுக்க வேணும். எங்கட வைப்புச்சொப்பு செல்லையருக்குத் தெரியும்தானே. எத்தனை கலியாணத்தைக் கொண்டு வந்தவர். செல்லையர் வந்தா ஒருக்கா தோட்டத்தக்கு ஆள் அனுப்பிறையா? நானும் கூடமாடக் கதைச்சாத்தான் எனக்கும் ஒரு திருப்தியாய் இருக்கும்."

"ஆள் அனுப்பு எண்டா கையுக்கையும் காலுக்கையும் ஆக்களா கிடக்கினம். நான்தான் வரவேணும் இல்லாட்டி செல்லையர் வந்தகையுடன் தோட்டக்கைக்கு அனுப்பி வைக்கிறன்"

" சரியெண அப்படிச் செய். நான் கதைத்தாதான் எனக்கும் நிம்மதி"

"ஆச்சி நேத்துக் கண்டக் கட்டேலயா?"

"எந்தக் கண்ட யோகம்"

"செங்காரிப் பசுவின்ர கண்டத்தான்"

"அந்த அறுந்த கண்ட கட்டிஞன்தான் அது தலையால அவிட்டு களவாய் பாலைக் குடிச்சிட்டுது"

"இஞ்சேரண ஆச்சி, இண்டைக்கு தோட்டக் கைப்பக்கத்தால கெலியும் பொம்பரும் சுத்திது. கரைக்கடப் பக்கத்தால இராத்திரி பெடியன்கள் வந்திருக்கிறுன்கள்போல"

"ஓம்பிள்ள! அப்பு தோட்டத்துக்க நிற்பார். இந்தஅடியறுந்திடுவார் தோட்டத்துக்க நட்ட வெருளியை கண்டே அடிக்கிறவங்கள் என்னேதோ தெரியாது. இராத்திரியும் கூடாத கனவு கண்டனுன்"

"டக் டக்டக் டக் டும் டும் டிமீல் டடடக் டடட்ட"

"என்ரையேஅடிக்கிறுன்கள் தோட்டக் கையாலதான் அடிக்கிறுன்கள்"

"ஐயோ அப்புக்கு என்னவோ ஐயோ சன்னிதியானே! என்ர சன்னிதியானே!"

"பனையில போய்ப்பாரண, தோட்டப்பக்கத்தால ஆரையும் ஓடிவாறயுமா எண்டு"

" ஓம்மடி சவிரி ஓடி வருது. இராத்திரி அடிவலைக்குப் போயிருக்கவேணும் அதுகளையும் இந்த அறுவான்கள் பிழைக்க விடுறுன்கள் இல்ல"

"சின்ஞச்சிக்கா! சின்ஞச்சியக்கா!! தோட்டத்துக்க செல் விழுந்து தம்பையா அண்ணரெல்லா செத்திற்றூர்."

"ஐயோ! ஐயோ"

" என்ன ராசா! என்ர ராசா"

"ஐய்யோவ்"!

யாவும் கற்பனையே!


கிறிஸ்தவ திருமணங்களில்
மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை,
அலங்காரப் பொருட்கள்
குறைந்த விலையில்
வாடகைக்கு பெற்றுக் கொள்ள
மாஜி 796 2672
பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய
வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்
Net, Colorful Flower Bouquet, Flower Basket

தேமதுரம் வீடியோ சஞ்சிகை
வெளியீட்டு விழா

21.5.94 மாலை 7 மணிக்கு
புனித மரியகொரட்டி தேவாலய
மண்டபத்தில்
717 Kennedey Rd (at Eglinton East)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

தொடர்புகளுக்கு
தமிழ் கலாசார வலையாக்கம்
321 3225



## சுழலும் உலகம்

# செக், ஸ்லோவாக்கியா: பிரிவினையின் பின்.....

**தி.உமாகாந்தன்**

பிரிவினை கோரி இரத்தம் சிந்தும் போராட்டங்கள் பல உலகில் நடந்து கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் 15 மாதங்களுக்கு முன்னர் செக்கோஸ்லவாக்கியாவில் ஒரு அமைதியான பிரிவினை ஏற்பட்டது. செக் என்றும் ஸ்லோவாக்கியா என்றும் இரு தேசங்கள் புரிந்துணர்வுடன் பிரிந்து கொண்டன. கடந்த 15 மாதங்களில் இரு நாடுகளிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இநத் மாற்றங்களைப் பொறுத்தவரையில் செக் மக்கள் திருப்தியடைந்தவர்களாகவும் ஸ்லோவஜ் மக்கள் அதிருப்தியடைந்தவர்களாகவுமே உள்ளனர். செக் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் செல்லும் வேளையில் ஸ்லோவாக்கியாவில் பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ளது. 1993ம் ஆண்டைப் பொறுத்தவரையில் செக்கின் பொருளாதார வளர்ச்சி 1 வீதமாக இருந்தது. ஆனால் ஸ்லோவாக்கியாவிலோ இது 7.6 வீதமாக குறைந்தது. 1993ம் ஆண்டைப் பொறுத்தவரையில் செக் பிரஜைகளின் தலாவருமானம் 6,987 டொலர்களாக இருந்தது. ஆனால் ஸ்லோவாக் பிரஜைகளின் தலாவருமானமோ 4,804 டொலர்களேயாகும் 1994ம் ஆண்டைப் பொறுத்தவரையில் செக்கில் 6 வீதமான பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் ஸ்லோவாக்கியாவிலோ இந்த வளர்ச்சி 3.5 வீதமாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1993ம் ஆண்டு செக்கில வேலையில்லாதோரின் எண்ணிக்கை 3 வீதமாக இருந்தது. ஸ்லோவாக்கியாவிலோ இது 14 வீதமாகும். 1993ம் ஆண்டிலே செக்கில் பணவீக்கம் 20 வீதமாகும். 1993ம் ஆண்டில் செக்கில மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் பெறுமதி 2700 மில்லியன் டொலர்களாகும். ஆனால் ஸ்லோவாக்கியாவிலோ 350 மில்லியன் டொலர்கள் மாத்திரமே வெளிநாடுகளால் முதலீடு செய்யப்பட்டது. இந்தப் புள்ளி விபரங்களின் மூலம் பிரிவினையின் பின் இவ்விரு நாடுகளிடையேயும் ஏற்பட்டிருக்கும் ஏற்ற இறக்கங்களைப் புரிந்து கொள்ளமுடியும். புரிந்துணர்வுடன் பிரிந்து கொண்ட இந்த இரு நாடுகளிடையே இப்போது எதுவும் சமமாக இல்லை. செக் நாணயம் கூட ஸ்லோவக் நாணயத்தைவிட பெறுமதி அதிகமானதாகவே உள்ளது. பிரிவினை இரு நாடுகளையும் வெவ்வேறு திசைகளில் திருப்பியுள்ளது. பொருளாதார குழப்பமும், அரசியல் குழப்பமும் ஸ்லோவாக்கியாவை சூழ்ந்துள்ள அந்த வேளையில் செக் குடியரசோ 90 களின் தொடக்கத்தினுல் ஆரம்பித்த பொருளாதார வளர்ச்சியை ஒழுங்குபடுத்தி சுபீட்சத்தை நோக்கி நகர முனைகிறது. பொருளாதார வளர்ச்சியும், அதிகரிக்கும் வெளிநாட்டு முதலீடுகளும் செக் மக்களை திருப்தியடைய வைத்திருக்கின்றன அதேசமயம் வேலையில்லாப் பிரச்சனையும், பொருளாதார மந்தநிலையும், அரசியல் குழப்பங்களும் ஸ்லோவாக் மக்களை பழைய செக்கோஸலவாக்கியா நாட்களை எண்ணி அசை போடவைக்கிறது. நாடுகள் மாத்திரமல்ல இரு நாடுகளின் அதிபர்களும் கூட வெவ்வேறு திசைகளிலேயே உள்ளனர். செக் பிரதமமந்திரியான வக்லாவ் கிளோஸ் மேற்கு நாடுகளிடையே சுற்றுப் பயணம் செய்து நாட்டில் ஏற்பட்டு வரும் பொருளாதார மாற்றங்கள் பற்றி பிரச்சாரம் செய்து வெளிநாட்டு முதலீடுகளை ஊக்கப்படுத்திவருகிறுர்.

ஆனால் ஸ்லவாக்கியாவின் பிரிவினையை முன்னெடுத்த வல்டிமிர் மசியர் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். கடந்த மார்ச் மாதம் 17ம் திகதி கூடிய ஸ்லோவாக்கிய பாராளுமன்றம் எதிர்வரும் செப்ரெம்பர் மாத இறுதியில் தேர்தல் நடத்த முடிவு செய்துள்ளது. 150 பேர் கொண்ட பாராளுமன்றத்தில் மசியரின் ஆசனம் மட்டும் வெறுமையாக இருந்தது. தமது பதவிக்காலத்தின் இறுதிநாட்களில் மசியர் தமக்கெதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவர முயன்ற குழுவின்மீது பழிவாங்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதுமட்டுமல்ல அரசியல் குழப்பநிலையை ஏற்படுத்த மந்திரிசபையை பதவிவிலகும்படியும் வற்புறுத்திஞர்.

அதுமட்டுமல்ல இறுதி நேரத்தில் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை மிகக்குறைந்த விலையில் தமது நண்பர்களுக்கு விற்பதற்கான அங்கீகாரத்தையும் நிதியமைச்சருக்கு வழங்கிஞர். மசியரின் குளும்சங்களைப் பற்றி முன்ஞள் வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய ஸ்லோவக் ஜஞதிபதியின் ஆலோசகருமான பவெல் டிமெஸ் குறிப்பிடும்போது "அரசு என்பது நானே! என்னை மிரட்டுவது என்பது அரசை மிரட்டுவதாகும்" என்றவகையிலேயே அமைந்துள்ளது என்கிறுர். 1992 இன் நடுப்பகுதியில் செக்கோஸ லவாக்கியாவில் நடந்த தேர்தல்களில் கிளோசும், மசியரும் செக், ஸ்லோவாக்கிய தலைவர்களாக இருந்தனர். ஆறுமாதங்கள் பேச்சு வார்த்தை நடத்தி பிரிவினையை மேற்கொண்டனர். இதற்காக மக்களின் அனுமதி எதையும் இவர்கள் பெறவில்லை. மசியர் முன்வைத்த ஸ்லோவாக் தேசியவாதமே பிரிவினைக்கு வழி வகுத்தது. ஆனால் பின்தங்கிய ஸலோவாக்கியாவிற்கு மானியம் வழங்கிக் கொண்டிருக்க விரும்பாத கிளோசின் விருப்பம் பிரிவினையை விரைவாக்கியது. தன்னுடைய நிலையை கிளோஸ் உறுதிப்

படுத்தியுள்ளார். கிழக்கைரோப்பிய நாடுகளில் செக் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது சமநிலைப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் பொருளாதார மற்றும் உற்பத்தி வளர்ச்சி ஐரோப்பாவிலேயே குறைந்தளவு எண்ணிக்கையென வேலையில்லாமை பெருமளவிலான வெளிநாட்டு முதலீடுகள் இவை அனைத்தும் செக்கின் வளர்ச்சியம்சங்கள். ஆனால் ஸ்லோவாக்கியாவிலோ வெளிநாட்டு முதலீடுகள் இல்லை. தனியார் மயப்படுத்தல் இல்லை. முழு பொருளாதாரமுமே உறைநிலையில். OECD எனும் ஆய்வாளர்களின் கணிப்பீட்டின்படி ஸ்லோவாக்கியாவில் பொருளாதாரவளர்ச்சி ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் எதுவுமே இல்லை. இந்த நிலையில் விரக்தியடைந்த மக்களை தேசியவாதத்தின்பால் திருப்ப மசியர் போன்றவர்களை எடுக்கும் முயற்சிகள் வெற்றியடைய சாத்தியங்களும் உண்டு. இப்பிரிவினை ஆரம்பத்தில் வெல்வெட் புரட்சி என வர்ணிக்கப் பட்டது. ஆனால் இப்போதோ வெல்வெட் புரட்சி செக்குக்கு மட்டும்தான். ஸ்லோவாக்கியாவின் பாதையோ கரடுமுரடானது.

# சபாலிங்கத்தின் இறுதி அஞ்சலியில் பெருந்தொகை மக்கள்!

ஈழவிடுதலைப் போராட்ட முன்னோடிகளில் ஒருவரும், புகலிடத்தில் இலக்கியம் மற்றும் மனித உரிமைகள் குறித்த செயற்பாடுகளில் தீவிரமாக இயங்கிவரும் ஆசியா எனப்படும் ஈழம் கலைகள் சமுக விஞ்ஞானக் கழகத்தின் பொறுப்பாளருமாகிய திரு.சபாரத்தினம் சபாலிங்கம் அவர்கள் பிரான்ஸ் சார்சேலில் உள்ள தமது இல்லத்தில் தமது குடும்பத்தினர் முன்னிலையில் கடந்த மே மாதம் 1ம் திகதி துப்பாக்கி ஏந்திய இரு தமிழ் இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே.

திரு.சபாலிங்கம் அவர்களது இறுதிக்கிரியைகளும் அவருக்கான அஞ்சலிக் கூட்டமும் 11.05.94 அன்று வில்தெனஸ் எனும் இடத்தில் நடைபெற்றது. திரு. சபாலிங்கம் அவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையிலும் கொலைவெறியர்களால் நிகழ்த்தப்பட்ட அராஜகத்தை கண்டிக்கும் வகையிலும் பெருமளவு மக்கள் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

மாற்றுக் கருத்துக்களைக் கொண்டவர்களையும் மனித நேயம் மிக்கவர்களையும் வேட்டையாடுவதில் பிரபல்யம் வாய்ந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தினரே இந்தக் கொலைக்குக் காரணம் என்ற கருத்தே மக்களிடையே பரவலாக இருந்தது. தமது அராஜக நடவடிக்கைகளை திரு. சபாலிங்கம் துணிந்து எதிர்த்து நின்றதும் தமிழ்பேசும் மக்களது உண்மை வரலாறுகளை வெளிக் கொணரும் நூல்களை சபாலிங்கம் மீளப் பதிப்பித்துவெளியிட்டதும், திரு சபாலிங்கத்திடமிருந்த கனதியான ஆவணச் சேகரிப்பும் மாத்திரமல்ல புகலிடத்தில் புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக பெருமளவில் கிளர்ந்தெழும் எதிர்ப்பை அச்சுறுத்தவுமே இந்த நடவடிக்கையை புலிகள் இந்த மேற்கொண்டதாக கருதப்படுகிறது. புலிகளின் செய்திச் சேவைகள் கூட இம் மரணம் குறித்து மௌனம்சாதித்தது குறிப்பிடத்தக்கது.

பெருமளவு மக்கள் கலந்து கொண்ட திரு.சபாலிங்கத்தின் இறுதிநிகழ்வுகளில் அவரது சேவைகள் குறித்தும், நடைபெற்ற அராஜகத்தைக் கண்டித்தும் பல பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருந்தன. கனடா, லண்டன்,ஜேர்மனி போன்ற இடங்களிலும் பல பிரசுரங்கள் வெளியிடப்பட்டதுடன் அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெற்றன.

இறுதிச் சடங்குகளை அடுத்து நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தை திரு.சுகன் வழி நடத்தினார். ஜேர்மன் நண்பர்கள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் சார்பாக உமா, சுசீந்திரன், திருமதி மல்லிகா ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர். சுவிற்சலாந்து நண்பர்கள் சார்பில் சுதாகரனும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் உமாகாந்தனும், சபையோரின் சார்பில் அந்தோனிப்பிள்ளையும் உரையாற்றினர். அனைவரது உரைகளிலும் சபாலிங்கத்தை இழந்த துயரம் ஓங்கி நின்றது. அராஜகத்துக்கு எதிராக மௌனிக்கக்கூடாது, புகலிடத்தில் இதனை தொடர்கதையாக்கக்கூடாது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. இறுதியாக திரு சபாலிங்கத்தின் குடும்பத்தினரின் சார்பில் அவரது சகோதரர் கணக்காளர் சபாநந்தன் நன்றி கூறினார்.

இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட பெருமளவு மக்களின் இறுகிய முகங்களும் கலங்கிய கண்களும் குறிப்பாக பெண்களின் கொதித்த வார்த்தைகள் அராஜகவாதிகளுக்கு ஒரு அச்சுறுத்தலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.


**East york Tamil Students Association**
**Marc Garneau Tamil Cultural Association**
**பெருமையுடன் வழங்கும்**

## கலை விளக்கு

**நடனங்கள் வில்லிசை நாடகம் இன்னிசை நிகழ்ச்சி இன்னும் பல.**

**ஜுன் 4 1994 6.00 மணி**
**EAST YORK C.A AUDITORIUM**
**650 COSBURN AVE (COXWELL & COSBURN)**

**கட்டணம் 5 மட்டுமே**
**தொடர்புகளுக்கு: சிவா (416) 755 0785**

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

யூஎன்பி கடைப்பிடித்த கொள்கைகள் காரணமாக தேர்தல் தொடர்பாக இருந்த நம்பிக்கை தகர்ந்தது மட்டுமன்றி முழு அமைப்பு முறை குறித்தும் விசேடமாக இளம் சந்ததியினர் மத்தியில் விரக்தியும் கோபமும் வளர்ந்தது.

"கடந்த இரு தசாப்த காலமாக அடிப்படை ஜனநாயக உள்ளடக்கங்களுக்கு ஊறு விளைத்ததும் அவற்றை அழித்ததுமான நடவடிக்கைகளாக ஆணைக்குழு முன்னால் நெடுகவும் கூறப்பட்டவை, 1972ம் ஆண்டு பாராளுமன்ற அதிகாரத்தை பாவித்து அதன் காலத்தை நீடித்தது, மிகச்சிறிய அளவு பெரும்பான்மை வாக்குகளால் மேலும் ஆறுவருட காலத்துக்கு பாராளுமன்றத்தின் ஆயுள் காலத்தை நீடித்த 1982ன் பொதுசன அபிப்பிராய கணிப்பீட்டு வாக்கெடுப்பு, 1977 பாராளுமன்றத்தில் பெற்றுக்கொண்ட ஐந்தில் நான்கு பாராளுமன்ற பெரும்பான்மை பலம், தேர்தல் நடவடிக்கைகளின் சட்டபூர்வ தன்மைக்கு பிரச்சனைகளை ஏற்படுத்திய தேர்தல் மோசடிகள் பற்றிய குற்றச்சாட்டுகள் அதிகரித்தது. பாராளுமன்ற ஆளும் கட்சி அங்கத்தவர்களிடமிருந்து திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்கள் முன்னாள் ஆட்சித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டது. எதிர்க் கட்சிகளைப் பலவீனப் படுத்தியதோடு கட்சி மாறுவது தொடர்பாக கொண்டு வரப்பட்ட அரசியல்யாப்பு திருத்தம், தனிப்பட்ட அரசியல் வாதிகளின் பலத்தை தகர்த்து பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் நிகழ்ந்த பழிவாங்கலுடன் கூடிய அரசியல் கட்சிகள் மீதான தடை, பயங்கரமான முறையில் அடிப்படை உரிமைகளை மீறினார்கள் எனக் குற்றவாளிகளாக காணப்பட்ட அதிகாரிகளுக்கு பணிக்கொடை வழங்கி நீதிமன்றத்தை பற்றி சிரத்தை கொள்ளாதது, உயர் அதிகாரிகளையும் நீதியரசர்களையும் இழிவுபடுத்த இடமளித்தது மூலம் அப்பதவிகளுக்குரிய கௌரவத்துக்கும் உன்னத தன்மைக்கும் களங்கம் ஏற்படுத்தியது என்பவைகளாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் தொடர்பான கருத்துக்கள் இளம் சந்ததியினர் மத்தியில் நன்றாக வேரூன்றி இருந்தது என்பதையும் அது ஜனநாயக செயற்பாடுகள் ஜனநாயக நிறுவனங்களின் இருப்பு தொடர்பான நம்பிக்கை சிதைந்து போவதற்கு காரணமாக இருந்தது என்பதையும் ஆணைக் குழு விளங்கிக் கொண்டது" (இளைஞர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை 2ம் பக்கம்)

சமுதாய இயந்திரத்தின் சகல நிறுவனங்களும், அனைத்துமே ஒரு கட்சியின் தேவைகளுக்கேற்ப, அக் கட்சியைச் சார்ந்தோரது விருப்புக்கு ஏற்ப செயல்படும் நிலமைக்கு மாற்றப்பட்டிருந்தது. அதற்கு எதிரானவர்கள் எவரானாலும், எந் நிறுவனமானாலும் அந்தஸ்து எத்தகையது என்றாலும் அரசு அதிகாரத்தினதும் காடையர் பலத்தினதும் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்தனர்.

தமது தேவைகளுக்கு மாறாக செயல்படுகின்றனர் எனக்கருதப்பட்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் கூட வீட்டுக்கனுப்பப்பட்டனர், விவியன் குணவர்தன அவர்களை சட்டவிரோதமாக கைது செய்தது தொடர்பாக உயர்நீதிமன்றத்தால் குற்றவாளியாக காணப்பட்ட பொலீஸ் உத்தியோகத்தருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதோடு அபராத தொகையை அரசாங்கமே கட்டியது. அது மட்டுமன்றி தீர்ப்பு வழங்கிய நீதியரசர்களின் வீடுகளுக்கு காடையர்கள் ஊர்வலமாக அனுப்பி நீதியரசர்களையும் அச்சுறுத்தினர். ஊர்வலம் செல்லுதல், எதிர்ப்பு தெரிவித்தல் ஜனநாயக உரிமை என்றே இச்சம்பவம் தொடர்பாக நாட்டுத்தலைவன் கூறினான். ஒரு சந்தர்ப்பத்தில் உயர்நீதிமன்றத்திற்கு சீல் வைக்கப்பட்டது. உயர் நீதிமன்றத்துடன் நேரடியாக மோதினர்.

இந் நிலமை காரணமாக ஒடுக்கப்பட்ட கீழ்மட்ட வர்க்கத்தவர்கள் மட்டுமன்றி சமுதாயத்தின் மேல் மட்டத்தில் புகழுடன் வாழ்ந்த நீதியரசர்கள் போன்றோர் கூட அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து பாரிய விரக்திக்குள்ளாயினர். ஆனாலும் அரசாங்கம் தனது கொள்கைகளை கைவிடவில்லை. தரிப்பு ஏதும் இன்றி தாம் தேர்ந்தெடுத்த பாதையில் பயணம் செய்தது. ஜனநாயக ரீதியான அவகாசங்களைச் சுருகச் செய்தல் வேகமாக இடம் பெற்றது

1983 ஜூலை சம்பவங்களை பயன்படுத்தி கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜக் கட்சி, ஜேவிபி ஆகிய மூன்றுகட்சிகள் மீதும் தடை விதித்தது இப்பயணத்தின் இன்னுமொரு கட்டமாகும். கம்யூனிஸ்ட் கட்சி நவசமசமாஜக் கட்சி ஆகியவற்றின் மீதான தடைகள் நீக்கப்பட்டபோதிலும் ஜேவிபி மீதான தடை நீடித்தது. ஜேவிபி மீதான தடையினால் ஜேவிபியை நோக்கி அணிதிரள்வதற்கு உடனடியாக தடங்கல் ஏற்பட்ட போதிலும் நீண்ட கால ரீதியாக பார்க்கும் போது அணி திரள்வதற்கு இச்சம்பவம் சார்பாகவே அமைந்தது. நாட்டின் ஒரே ஒரு புரட்சிகரக் சக்தி ஜேவிபியே எனவும் அதனாலேயே தடைவிதிக்கப்பட்டது எனவும் அரசாங்கத்தின் தான்தோன்றித் தனமான நடவடிக்கைகளுக்கு எதிராக போராடும் ஆற்றலும் தகமையும் ஜேவிபிக்கே உள்ளது எனவும் ஜேவிபியினால் செய்யப்பட்ட பிரச்சாரத்துடன் கூடவே இளம் பகுதியினர் மத்தியில் குறிப்பிடத்தக்க அளவு கவர்ச்சியை ஏற்படுத்தியது.

ஜேவிபி தடை செய்யப்பட்டிருக்காவிடில் தொடர்ந்தும் அது பாராளுமன்ற வாதக் கட்சியாக நிலவுவதற்கு இடமிருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தவிர ஏனைய எதிர்கட்சிகளை நோக்கி அணி திரள்வதையும் விட ஜேவிபியை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னாண்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்; செ. லோகநாதன்

நோக்கி அணிதிரள்வதற்கான அவகாசம் இருந்தாலும் 87-89 காலகட்டத்தைப் போன்று பெரும் அழிவு நிலமைகள் ஏற்படாதிருக்கவும் இடமிருந்தது.

அரசியல் ரீதியாக எடுத்துப் பார்க்கும்போது இவை அனைத்தையும் விட ஜேவிபியின் வளர்ச்சிக்கு பின்னணி அமைத்துக் கொடுத்தது ஒருபுறம் இடது சாரி இயக்கத்தின் பலவீனமும் மறுபுறம் ஒட்டுமொத்தமாக பாராளுமன்ற எதிர்கட்சியின் பலவீனமுமேயாகும்.

நாட்டில் நிலவும் சமூக பொருளாதார நிலமைகளுக்கும் அதற்கு ஏற்பவிருத்தி பெறும் அரசியல் நிலமைக்கும் ஏற்ப தவறற்றதும் பலம் மிக்கதுமான செயல்முறைகள் இருந்திருக்குமாயின் ஜேவிபி போன்ற ஒன்று தோன்றக் கூடியதாக விருந்தாலும் அவ்வளவு தூரம் சக்தியுடன் வளர்வதற்கான வாய்ப்புக்கள் உருவாகியிருக்காது. தவறற்றதும் சக்திவாய்ந்ததுமான இடதுசாரி இயக்கம் இருந்திருந்தால் நிலவும் சமூக பொருளாதார அரசியல் முறைகளால் அல்லலுறும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் உட்பட ஏனைய ஒடுக்கப்பட்ட சக்திகளை தவறற்ற வேலைத்திட்டம் செயல் முறைகளால் வழி நடத்தவும் தவறானதும் அழிவை ஏற்படுத துவதுமான பாதையில் இழுபட்டுச் செல்வதை தடுக்கவும் இடம் இருந்திருக்கும், இடதுசாரி இயக்கத்தின் வீழ்ச்சி, இடது சாரி இயக்கத்துள் காணப்பட்ட தவறுகள் அத்தவறுகளைத் திருத்துவதற்கு அது காண்பித்த தயார் அற்ற நிலை ஆகியவையும் ஜேவிபியை நோக்கி தள்ளுப்படுவதற்கு பிரதான காரணங்களாகும்.

நிலவும் சமூக பொருளாதார அமைப்பு முறைக்குள் நாம் ஏற்கனவே காண்பித்த பிரச்சனைகள் தோன்றுவதும் வளர்ச்சி பெறுவதும் இயல்பானதே. அப்பிரச்சனைகள் சமூக பொருளாதார அமைப்பு முறையின் அத்திவாரத்தில் இருந்தே தோன்றுகின்றன. இப் பிரச்சனைகள் தோன்றும் போது சரியான தருணத்தில் சரியான வேலைத் திட்டமும் செயல்முறைகளையும் முன்வைக்கக்கூடிய தவறற்ற இயக்கம் இல்லாவிடில் விதிமுறையின் படி விசேடமாக இளம் சந்ததியினர் உடனடியாகவோ அல்லது தாமதித்தோ அழிவுப்பாதையை தேர்ந்தெடுப்பதற்கான அவகாசம் அதிகமாகும். 1965-71 கால கட்டத்திலும் 85-89 கால கட்டத்திலும் நிகழ்ந்தது இதுவேயாகும்.

இடதுசாரி இயக்கத்தின் வீழ்ச்சி தொழிலான வர்க்க இயக்கத்தின் வீழ்ச்சிக்கும் ஏனைய வெகுஜன இயக்கங்களின் செயற்பாடுகள் பலவீனம் அடைவதற்கும் இவை அனைத்தினதும் பெறுபேருக பிற்போக்குச் சக்திகள் பலம் பெற காரணமாகவிருந்தது.

நிலவுகின்ற இடதுசாரி இயக்கம் வீழ்ச்சியுறும் போது அவ் இடத்தை எடுப்பதற்கு தவறற்ற இடதுசாரி இயக்கம் உருவாகவில்லை. இருந்த இடதுசாரிகளது குறைபாடுகளையும் தவறுகளையும் அவ்வாறே ஜேவிபியின் தவறுகளையும் கண்ட, புரட்சிகர கருத்தியலை வேலைத் திட்டத்தைப் பற்றிப் பேசிய குழுக்கள் தோன்றிய போதிலும் அக்குழுக்களது பலவீனங்கள் குறைபாடுகள் காரணமாக பிரபல்யமான இயக்கமாக தோற்றம் பெற முடியவில்லை. இந் நிலமையின் கீழ் இடதுசாரி இயக்கத்தால் நிரப்பப்பட வேண்டியவை வெறுமையாக இருந்ததோடு பிற்போக்காளர்கள் பலம் பெற்று மக்களை ஒடுக்கி துன்புறுத்தி பெரும் காலடி எடுத்துவைத்து முன்னேக்கிச் சென்றனர். இதனால் நிரப்பப்பட வேண்டிய இடம் மேலும் அகன்றது.

ஆகக் குறைந்தது பாராளுமன்ற எதிர்க்கட்சியாவது இவ் இடத்தை நிரப்புவதற்காக மன உறுதியுடன் செயல்பட்டிருந்தால் ஜேவிபி போன்ற ஸ்தாபனத்தை நோக்கி மக்கள் பரந்த ரீதியில் இழுபட்டிருக்க மாட்டார்கள். பாராளுமன்ற எதிர்க்கட்சியும் பலவீனம் அடைந்தே இருந்தது. அது உட்பூசல்கள் பிளவுகள் காரணமாக இளைத்துப் போயிருந்ததோடு ஆட்சியாளர்களது தாக்குதல் களுக்குள் சிக்கியிருந்தது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக புலப்படக் கூடிய எதிர் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதற்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை தோற்கடிக்கக் கூடியவாறு மன உறுதியுடன் போராடுவதற்கும் எதிர்கட்சியால் முடியவில்லை. 1977ம் ஆண்டுக்குப் பின்னர் இருந்ததைப் போன்ற முட, பெலவீனம் கொண்ட, கோழைத்தனமான, செயல் திறமை அற்ற எதிர்கட்சி எக்காலத்திலும் இருக்கவில்லை என்றே கூறலாம். போராட்டங்கள் மூலமாக அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளைத் தோற்கடிப் பதற்குப் பதிலாக அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் வெறுப்புறும் மக்கள் தம்மை பதவியில் அமர்த்துவர் என்றே இவ் எதிர்க்கட்சி பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் அவ்வாறன அவகாசம் மூலமாக எதிர்க்கட்சி பதவிக்கு வருவதற்கு அரசாங்கம் என்றைக்குமே இடமளிக்கவில்லை. இதன் பெறுபேருக எதிர்க்கட்சி மேலும் பெலவீனப்பட்டது. எதிர்க்கட்சியைச் சார்ந்த ஒரு சிலர் அரசாங்கக் கட்சியுடன் இணைந்து கொண்டனர். ஒரு சிலர் ஜேவிபியைச் சென்றடைந்தனர்.

இவ்வாருக இடதுசாரி இயக்கமும் பாராளுமன்ற எதிர்க்கட்சியும் மிகவும் பெலவீனமுற்று இருந்தது ஜேவிபியின் வளர்ச்சிக்கு பெரும் துணையாகவிருந்தது. ஆதலால் ஜேவிபி போன்ற அழிவுத்தன்மை கொண்ட ஸ்தாபனம் ஒன்று வளர்ச்சி பெற்றதற்கு இடதுசாரி இயக்கமும் பாராளுமன்ற எதிர்க்கட்சியும் கணிசமான அளவு பொறுப்பாளிகள் ஆவர். இப் பாராளுமன்றவாத எதிர்க்கட்சி உட்பட எதிர்த்தரப்பு கட்சிகள் ஸ்தாபனங்கள் பலவும் தமது பலவீனத்தை மூடி மறைப்பதற்காக ஜேவிபிக்கு உதவி அளிப்பதன் மூலம் அதன் துணையால் பதவிக்கு வரலாம் எனக்கனவு கண்டு ஜேவிபிக்கு உதவி அளித்தனர். இதுவும் ஜேவிபியின் வளர்ச்சிக்கு பெரும் உதவியாக விருந்தது.

தொடரும்

**1977ம் ஆண்டுக்குப் பின்னர் இருந்ததைப் போன்ற முட, பெலவீனம் கொண்ட, கோழைத்தனமான, செயல் திறமை அற்ற எதிர்கட்சி எக்காலத்திலும் இருக்கவில்லை என்றே கூறலாம். போராட்டங்கள் மூலமாக அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளைத் தோற்கடிப் பதற்குப் பதிலாக அரசாங்கம் மேற்கொள்ளும்**

# ஈழம் ஒரு தொடர்கதை 2 (24)

இவ்வாரம் இத்தொடரை எழுத எள்ளளவும் என் மனம் இடம்கொடுக்கவில்லை. காரணம் புகலிடத்தில் அரசியல் படுகொலை என்ற செய்தி கேட்டு அதிர்ந்து போனேன். சாவுக்குப் பயந்தல்ல. இந்தச் சாவுகள் எதைச் சாதிக்கப்போகின்றன என்பதை நினைத்தபோதும், எதிர்காலம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இருள் கவ்வி வருகிறதே என நினைத்தபோதும் ஆழ்ந்த கவலை கொள்வதைத் தவிர வேறென்ன வரும்? அதனால் இவ்வாரம் இத்தொடரை எழுத எள்ளளவும் என்மனம் இடங்கொடுங்கவில்லை.

1940 ம் ஆண்டு ஆகஸ்ட் 21ம் திகதி லண்டன் தினசரியில் பின்வரும் செய்தி முக்கிய இடத்தைப் பிடித்தது.

**Stalin's Agents Assassinated Trotsky with ice pick in Mexico**

Aug 21, Leon Trotsky, the exiled bolshevik leader was assassinated today in mexico by an obscure individual posing as a supporter. The assassin, almost certainly acting on orders from Joseph Stalin and his secret police, smashed Trotsky's head with an ice pick. Trotsky who was working on an accusatory biography of Stalin had been sentenced to death by one of the moscow treason tribunal.

Before losing consciousness in the ambulance taking him to hospital Trotsky whispered "I am sure of victory of the fourth international, go forward". He is said to have told his guards not to kill his assassin, Ramon Mercader.

பாரிஸ் நகரில் சபாலிங்கம் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தியைக் கேள்வியுற்ற பின்னர் இங்குள்ள பத்திரிகைகள் வெளியிட்ட ஊகங்கள், தீர்வுகள், தொடர்புகள் இத்யாதிகளை வாசித்து முடிந்ததும் மேற்கூறிய ஆங்கில செய்தியையும் வாசித்து ஒப்பீடு செய்து பார்த்தேன். ஆங்கிலச் செய்தியில் obscure individual posing as a supporter என்ற வரிகளில் தான் சகல விடயங்களுக்குமான தீர்வு அடங்கியிருந்தது. அதாவது "ஆய்வாளர் எனக் காட்டிக்கொண்ட நிச்சயப்படுத்திச் சொல்லமுடியாத தனிநபர்" தான் கொலையாளி என்பதே அது.

சபாலிங்கம் கொலையில கொலையாளியும், அவருடன் இணைந்து சென்ற வாலிபரும், தொலைபேசியில் பேசிய பெண்மணியும் சரியாக இனங் காட்டப்பட்டுச் சட்டத்தின் கரங்களுக்குள் சிக்கும்வரை நாம் பலவித ஊகங்களை வெளியிட்டு உண்மையான விசாரணைகளைத் திசை திருப்பி விட ஏதுவாகக் கூடாது. எது எப்படியிருப்பினும் கொலையாளிகள் தமிழ் இளைஞர்கள் தான் என்பது உறுதி செய்யப்படுகிறது. ஆகவே குறிப்பாக இளைஞர்கள் கொலையைச் செய்திருப்பதனால் அமரர் சபாலிங்கம் பற்றிய அரசியல் தொடக்கம் தனிப்பட்ட வாழ்வு வரையிலான சகல விடயங்களும் திரட்டப்படும் போதுதான் கொலையின் உண்மையான பின்னணி தெரியவரும்.

தமிழ் மக்களுக்குள் பீடித்திருக்கும் சீட்டு, வட்டி, கடன் கொடுக்கல் வாங்கல், குடும்பத்தின் முறை கெட்ட உறவுகள் என்பன காரணமாகவும் ஏற்கனவே புகலிடத்தில் கொலைகள் நடைபெற்றிருப்பதனால் நாம் முதலில் அத்தகைய பிரச்சனைகள் இருந்தனவா என்பதில் விசாரணைகள் முடிக்கும் போதுதான் அவரின் அரசியல் பின்னணி பற்றியும் அதுதான் கொலைக்குக் காரணமாக இருக்கக்கூடிய ஒரே விடயம் என்பதிலும் முடிவுக்கு வரமுடியும்.

அத்தகைய ஒரு அரசியல் எழுச்சியை ஏற்படுத்திப் புலிகள் தலைமைக்குச் சவாலாகச் சபாலிங்கம் வந்து விடுவார் என்ற கணிசமான அச்சம் கொள்ளக் கூடிய நிலையில புலிகள் தலைமை இருந்ததா? அல்லது புலிகள் தலைமையில் சமகால (CONTEMPORARY) மனிதனுகவிருந்த சபாலிங்கம் பிரபாகரன் பற்றிய "தவறான" பக்கங்கள் பற்றி நூல் வெளியிட்டு அவரை மாசுபடுத்திக் கேள்விக்குறியாக்கி விடுவார் என்பதா? அல்லது தற்போது புலிகளுக்குள் தோன்றியிருப்பதாகக் கூறப்படும் பிரபாகரன் - மாத்தையா முரண்பாடுகளை வைத்து புலிகளையும் விடத் தீவிரமான வலதுசாரிச் சக்திகள் மக்களை அணிதிரட்டத் தொடங்கியுள்ளார்கள், இது மீண்டும் "போடு புள்ளடி உதய சூரியனுக்கு நேரே" கதையாக முடியலாமென்று புலிகள் அத்தகைய நிலைகளைத் தடுக்க முயற்சிக்கிறார்களா போன்ற அரசியல் பற்றிய பக்கங்களே இங்கு விடைகாண முடியாத பக்கங்களாக உள்ளன.

புலிகள் உட்படத் தமிழ் ஈழ விடுதலை இயக்ககங்கள் பலவும் அரசியற் படுகொலைகள், உட்கட்சிக் கொலைகள், பொதுமக்கள் கொலைகளில் பங்கு வகித்திருக்கின்றார்கள் என்ற பரவலான குற்றச்சாட்டு நிரம்பவே எங்கள் மக்கள் மத்தியில் உண்டு. கொலை எதுவும் செய்யாத புனிதமான இயக்கம் ஒன்றைத் தேர்வு செய்யுங்கள் என்றால் நாம் எந்த இயக்கத்தைத் தேர்வு செய்வது? கூட்டணி என்று சொல்லி விடலாமோ என்றால் அது துரையப்பாவின் கொலைக்குக் காரணமாக இருந்தது.

புதிய இயக்கம் ஒன்று தொடங்கினால் அதில் கொலைக் குற்றச்சாட்டு சுமத்த முடியாது. ஆனால் அதன் தலைவரை நோக்கி நான் ஒரு வினாவை எழுப்புவேன். அதாவது ஆயுதப் போராட்டத்தில் அரசியற் படுகொலைகள் அற்ற விதத்தில் எப்படிப் போராட்டத்தை நகர்த்திச் செய்வீர் என்பதை முதலிலே மக்களுக்குத் தெளிவாக்கவும் என. ஏனெனில் இன்று கண்டனக்குரல் எழுப்புபவர் நாளை தான் வளர்ந்து இயக்கமாகி அதையே செய்வராயின் இன்று எழுப்பும் கண்டனத்தில் உண்மைத் தன்மை இல்லாது போகும். ஆகவே மக்கள் மீண்டும் அதே பாடத்தைப் படிக்க நேரிடும். அடுத்து அதீத ஜனநாயகத்தில் தேர்தல் மூலம் தமிழ் ஈழத்தை அடைய முடியும் என்பதை யாராவது விளக்குவார்களா?

நாம் அதீத ஜனதாயகத்தை தெரிவு செய்வதிலும் ஆயுதப் போராட்டத்தினூடே "அரசியற் படுகொலை" களைச் செய்வதிலும் அதிக லாபமடையப் போவது சிங்களப் பேரினவாதிகளே என்பதை நாம் உணரவேண்டும். இனவாத ரீதியாகப் பிரச்சனையை எடுத்துக் கொண்ட தமிழ் அரசியற் தலைமைகள் தங்களுக்குள் ஒற்றுமை பேண முடியாவிடின் அந்த

**சின்னத்தம்பி வேலாயுதம்**

தத்துவத்தில் உள் கோளாறு பற்றித்தான் நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

மேற்குறிப்பிட்ட ஆங்கில செய்தியில் ஸ்ராலின் ட்ரொஸ்கியை கொலை செய்வித்தார் என ஊகம் தெரிவித்தது. இவ்விருவரும் மார்க்ஸிய தத்துவத்தினால் முரண்பட்டுக் கொண்டவர்கள் இன்று ஸ்ராலின் கட்டியெழுப்பிய சோவியத் யூனியன் எங்கே? இறக்கும் தருவாயில் ட்ரொஸ்கி கூறிய நான்காவது அகிலத்தின் வெற்றி எங்கே? சபாலிங்கம் மறையலாம் பிரபாகரனும் ஒரு நாள் மறையலாம். தமிழ் ஈழம் எங்கே? என்று இன்னும் பல வருடங்களின் பின் ஆய்வுகள் நடத்துவதால் வரலாற்றைதான் எழுதி வைக்கமுடியும். நடந்தவைகள் சரியென எழுத முடியுமா?

புலிகள் தம்முள் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் செயற்படுவார்களானால் தமது கொள்கையில் உறுதியுடன் இருக்கின்றார்கள் என்றால், தமிழ் மக்கள் அவர்களையே ஆதரிக்கின்றார்கள் என்றால் ஏன் அரசியற் படுகொலைகளில் அவர்கள் பெயர் மீண்டும் மீண்டும் அடிபட வேண்டும். ஒரு மறுப்பு அறிக்கையை விடுவதனால் மட்டும் மக்கள் புலிகள் தூய்மையானவர்கள் என்று கருதுவார்களா? புலிகள் நடைமுறையில், செய்கையில் காட்டி இத்தகைய அரசியற் படுகொலைகளுக்குத் தாங்கள் எதிரானவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும்.

புலிகள் தமது அரசியல் கருத்துக்கள், வரலாறுகள், இலக்கியங்களை வெளியிட எவ்வளவு உரிமை கொண்டுள்ளார்களோ அதேயளவு உரிமையை மாற்றுகருத்துக் கொண்டுள்ளவர்களும் கொண்டுள்ளார்கள். அந்த உரிமையை மறுத்தல் அல்லது மழுங்கடித்தல் என்பது புலிகளையல்ல தமிழ் இனத்தைப் பாதிக்கும் ஒரு விடயமாகும் என்பதைப் புலிகள் கவனத்திற் கொள்ள வேண்டும். புலிகள் சம்பந்தப்பட்ட விமர்சனங்களை சிங்கள ஆய்வாளர்கள் எழுதினால் அதற்கு என்ன செய்ய முடியும். அல்லது சபாலிங்கம் புலிகள் பற்றி வெளியிடவிருக்கும் நூலை ஒரு வெளிநாட்டு நிறுவனம் வெளியிட்டால் எப்படித் தடுத்துவிட முடியும். ஆகவே "மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் வீசும் என்ற அண்ணாத்துரை அவர்களின் பொன்மொழியை இந்த இளம் கொலையாளிகளைச் சென்றடையச் செய்ய வேண்டும்.

புலிகள் தலைமையின் நேரடிக் கட்டளையினால் தான் இச்சம்பவம் நடைபெற்றதென ஊகங்கள் பத்திரிகைகளில் மேற்கோள் காட்டப்பட்டிருந்தன. ஆனால் யாழ்ப்பாணத்தில் நடந்த மேதினத்துக்கு முதல் மட்ட இரண்டாம் மட்ட தலைவர்கள் எவருமே சமூகமளிக்கவில்லை என்ற செய்தியும் வந்தது. அவ்வளவு தூரம் உள்ளூர் நிலைமைகள் இருக்கும்போது இத்தகைய கட்டளைகள் பிறப்பிக்கபட்டிருக்குமா என்பது உறுதி செய்யப்படுவது மிகக் கஷ்டமானது.

அமரர் சபாலிங்கம் அவர்கள் எனது தொடரான "ஈழம் தொடர்கதை" அத்தியாயம் 65 சம்பந்தமாக "ஒரு சிறு உள்ளீடு" ஒன்றை அனுப்பி அது 19.2.93 தாயகத்தில் பிரசுரமானது இதிலிருந்து அவர் எனது தொடரின் வாசகனாக இருந்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியவந்தது.

"ஆசியா" பதிப்பகத்தை நிறுவி நூல்களை வெளியிட்டு "வரலாறு" மறக்கப்படக்கூடாது மறைக்கப்படவும் கூடாது என்பதில் உறுதியாயிருந்த பணியாற்றிய சபாலிங்கத்தின் மறைவு இதயத்தில் ஒரு நெருடலை ஏற்படுத்துகிறது. அவரின் ஆத்மா சாந்தியடைவதாக. அவரின் மனைவி, குழந்தை, குடும்பத்தினர் எல்லோருடைய துன்பங்களிலும் பங்கு கொள்வதுடன் உண்மையான கொலையாளிகள் சட்டத்தின் கரங்களில் ஒப்படைக்கப்படவும் புகலிடத் தமிழருக்கு களங்கமற்ற நற்பெயரை ஏற்படுத்தவும் முயற்சிப்போம்.

## ஒரு சிலை

அப்பனுக்கு, சமைக்கும் போது தன்னையறியாமலே வாய் விசிலடித்தது. றெஸ்ரோறண்டில் வேலை செய்யும் சம்பந்தன் தான் இரண்டு சீனப் பெண்களைக் கொண்டு வருவதாக இப்போது தான் போனில் சொல்லியிருந்தான். தனது சமையல் அந்த சீனப் பெண்களுக்கு பிடிக்குதோ தெரியாது என்ற பயம் கலந்த நிலையில் சமைத்துக் கொண்ட அப்பன் அடிக்கடி மணிக்கூட்டைத் திட்டிக் கொண்டிருந்தான். 'அறுந்த நேரம் போகுதில்லை' என்றபடி..

தன்னுடன் வேலை செய்கின்ற சீனப் பெண்களைப் பற்றி அடிக்கடி சம்பந்தன் சொல்லும்போது அப்பனுக்கு வாயூறும். . அதுவும் இன்றைக்கு சம்பந்தன் வீட்டுக்கு இரண்டு சீனப் பெண்களுடன் வருவதாகச் சொன்னதுமல்லாமல் 'மணியாய் சமை, மச்சான்' என்று வேறு சொல்லியிருந்தான். அப்பனின் பிளான் வேறு.. மெதுவாக தனது பெட்ரூமில் எல்லா குப்பைகளையும் உள்ளே தள்ளி விட்டு, கட்டிலை செட் பண்ணிக் கொண்டான். உடனடியாகக் குளித்து மணியாக உடுப்பு மாட்டிக் கொண்டு சென்ட் அடித்துக் கொண்டு ஜாலியாகடி.வியைப் போட்டுக்கொண்டு சம்பந்தனுக்காயும் வரப் போகும் இரண்டு காரைக்கால் அம்மையார்க்காகவும் அப்பன் தவம் கிடந்தான்.

சம்பந்தன் விசயம் தெரிந்தவன். சும்மா ஒரு சீனப் பெண்ணுடன் வந்தால் தன் ரூம் மேட் மனம் வருந்தக் கூடாது என்பதற்காக இரண்டாக வருகிறான் என்று அப்பன் சம்பந்தனின் பெருந்தன்மையை மனதில் புகழ்ந்து கொண்டிருந்த போது, கதவு திறக்கும் சத்தம் கேட்டது. ஆர்வம் பொங்க ஓடிச் சென்று அப்பன் கதவைத் திறக்க களைச்சு விழுந்து வந்த சம்பந்தன் மெதுவாய் சோபாவில் விழுந்தான்.

அப்பனுக்கோ கூச்சம். இந்த நேரத்தில் பெண்கள் பற்றிக் கேட்டால், தன்னை 'அலையிறான்' என்று நினைத்து விடக் கூடாது என்று மனதை பொறுமை காக்க வைத்தான். இருந்தாலும் மனம் கேளாமல் 'என்ன மச்சான், ஆரையோ கூட்டிக் கொண்டு வாறதெண்டாய், ஒருத்தரையும் காணேலை' என்று அப்பன் கேட்க.. 'என்னது ஆக்களைக் கூட்டிக் கொண்டு வாறதெண்டனானே?' என்று சம்பந்தன் ஆச்சரியப்பட..'இல்லை, இரண்டு சப்பட்டையோட வாறதெண்டாய்' 'அங்க பார், ஜக்கட்டுக்கை கிடக்கு, எடுத்து உடை' என்று சம்பந்தன் சொல்ல, அப்பன் தடாலென்று விழுந்தான்.

'ரெண்டு சப்பட்டையோட வாறன், அடிச்சுட்டுப் படுப்பம்' என்று சம்பந்தன் சொன்னதை அப்பன் வேற மாதிரி விளங்கிக் கொண்டதால் வந்த வினை இது.

**பென் சூரியன் குட்டிக்கதைகள்**

# வேலிகள்

கடல்புத்திரன்



வேலிகள்
எப்ப தொடங்கப்போறீர்கள்? கேட்டான்
''கொஞ்சம் தரைக் காய........ நாளைக்கு– நாளன்றைக்காய் இருக்கும்'' என்று பதிலளித்தான்.
நடைமுறை ஒரு ஆமை என்பது தெரிந்த விசயம்
''மண்ணுக்கு எங்கே போவீர்கள்?'' கேட்டான்.
''பாலத்தடிப்பக்கம் இருக்கிற...... உவர்ப்பு வெளிகளிலே சிப்பி தோண்டிய மண் குவியல்கள் இருக்கின்றனவே! தவிர, கிணறு தோண்டிய போது எடுத்த மக்கி மண்ணை, கல்லுகளை தருவதாக சொல்லியிருக்கிறார்கள்.

ட்ராக்டருக்கும் சொல்லி விட்டோம் டீசலோடு இரவிலே வருவதற்கு செல்லமுத்தண்ணை சம்மதித்திருக்கிறார்'' என்று விளக்கமாக சொன்னான். அவர் கிழக்கராலியைச் சேர்ந்தவர் குலனைப் பாதையையே அடிக்கடி பாவிப்பவர். சரியான முறையில் பலவற்றை இணைக்கிறதுக்கு யாரோ ஒரு ஆள் பின்னணியில் இருக்க வேண்டும்' என்று நினைத்தான்

பாபு புத்திசாலி தான் ஆனால், இந்தளவுக்கு செயல்படக் கூடியவனில்லை
''அப்ப பிரச்சனையில்லை.. என்கிறாய்'' என்றான் அவன்
''இருக்கிறது'' பாபு
''என்ன?'' கேட்டான்
'' கொமிட்டிப் பெரிசுகள் ஆதரவு தர மறுக்கினம். V.C ஐக் கொண்டு போடுவோம்...' என்று இந்த முறையும் அளக்கிறார்கள்' என்றான் பாபு.
'அப்ப காசுப் பிரச்சனை கொஞ்சம் இருக்கப் போகிறதே'' என்று கேட்டான்.

'பெடியள் மேசன் வேலைகளுக்கு பகுதியாக அல்லது முழு நேரமாக போய்வாரது தெரியும்தானே ஆளுக்கு 50 ருபாய் போட்டு தொடங்கப் போறோம்.'' என்றான்.

கொஞ்ச நேரம் இருந்து கதைத்து விட்டுப் போனான்.
ரேடியோவைத் திருப்பினான். 'இரவு ஏழு மணிக்கு பெடியளை வாசிகசாலையில் கூடும்படி இத்தால் அறிவித்தல் விடப்படுகிறது. டீ முதலான உதவிகளை செய்ய விரும்புகிறவர்கள் வீரப்பனிடம் கொடுக்கலாம்' என்று குலனைப் பெடியன் ஒருத்தன் பேசியதைக்கேட்க சந்தோசமாக இருந்தது.

அவனுக்கும் அவர்களோடு செயற்பட வேண்டும் போலிருந்தது. ஆனால் 'வீட்டிலே படிக்கிறதில்லை' என்ற அர்ச்சனைகள் ஆறு மணிக்கு முதல் வந்திடணும் என்ற கண்டிப்பு. சுயநல பழக்க வழக்கங்களையும் தேச வழமைகளையும் ஒட்டிய ஒழுக்க நெறிகளை பின்பற்ற போதிக்கிறார்கள். அவை மக்கள் மத்தியிலேயே வேலிகளை போட்டுக் கொண்டு வருவதை அறியாமல்...

ஆனால் பாபுவின் நடுத்தர வர்க்கத்தில் சிறிதளவு தளர்வுகள் இருந்தன. உத்தியோகத்திற்கு போன கொழும்பர்கள், கடலுக்குப் போன மூதாதையர், மற்றும் மேசன் தொட்டு நகர நகர வேலைகளில் கனகாலமாக ஈடுபடுவதாலும் ஏற்பட்ட மாற்றங்கள்.

இன்று அவர்கள் மத்தியிலிருக்கிற டொக்டர்களும் என்ஜினியர்களும் ஒரு காலத்திலே பகுதி நேரமாவது நகர வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்களே. அதனால் அவர்களுக்கு எவ்விதத்திலும் ஒரு வித வக்கிரத்தனம் காணப்படவில்லை.

'அங்கே நானும் பிறந்திருக்கக் கூடாதா' என்ற ஏக்கம் அவன் மனதை அரிப்பதுண்டு.
'வீட்டுக்கு தெரியாமல் போவோமா?' என்று நினைத்தான்.
அப்பர் நந்தி போல முன் விராந்தையிலிருந்து கதைப்புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தார்.' எதிர்காலத்தில் இந்த வேலிகளை எல்லாம் உடைத்ததாக வாழவேண்டும்' கறுவிக் கொண்டான்.

★ ★ ★

பாணுக்கு கடைக்கு போற போது குலனைப் பக்கம் சைக்கிளை விட்டான். பாபு வீட்ட அந்த காலமை போகமுடியாது. அவர்கள் வீட்டில்.. பெண்கள் பள்ளிக்கூடம் வெளிக்கிடுவதாகவிருப்பதால் சரியாகப்படாது. இரவில் போடப்பட்ட ரோட்டைப் பார்த்தான் '15 தூரம் உரம் போட்டு வளர்ந்திருந்தது உரம் போடுறதுக்கு அவர்களுக்கு சொல்லியா தரவேண்டும் அவ்வளவு தூரமும் சைக்கிள்... துள்ளாமல் ஓடியது 'பாணைக் காணாமல் திட்டு விழலாம்' என்பதால் திரும்ப ஓடி வாங்கிக் கொண்டு போனான்.

★ ★ ★

ஆசிரியரின் அறுவை அவர்களை வருத்தியது. திடீரென பரீட்சை' என்று... வைக்கப்பட்டிருந்தது மூளை, ஒரு தடவை திரும்பிப் பார்க்காட்டி சிதம்பரச் சக்கரமாகவே பார்க்கும் தலை விண் விண் என்று வலித்தது. சுரேஷ்க்கும் பாபுவுக்கும் அதே நிலைதான். அவர்கள் அவனை சீண்டி விடைகள் கேட்டார்கள்.

'டேய் எழுதிய விடை இது தான்! சரியா? என்று சொல்லேலாது' என்று சொன்னான்

நளினியின் வரிசையைப் பார்த்தான். வீட்டிலே அடைப்பட்டுக்

கிடப்பதால் இப்ப நல்லாய் படிக்கத் தொடங்கி விட்டினம் அவள் சிம்பிளாக எழுதிவிட்டு நெட்டி முறித்தாள்.

சுரேஷைப் பார்த்து சிரிப்பது தெரிந்தது.

'மச்சான் வென்றிட்டான் போல.....

'அவனுக்கும் பெண் சகோதரம் 3 பேர். நளினி வீட்டிலே 4 பேர் சீதனப்பிரச்சனையில் பந்தாடாமல் தப்பினல் போதும். ஆனல் நடைமுறை அப்படி ஒப்பேற்றி விடுமா?.. நீண்ட பெருமுச்சு விட்டான்.

ஆசிரியர் எல்லா விடைத்தாள்களையும் சேகரித்துக் கொண்டு போனார்.

"ராத்திரி ரோடு போட்டதில் படிக்கலேயடா" என்ருன் பாபு

"நாங்க மட்டும் கிழிச்சோமா? இந்த பரீட்சையை தெரிந்திருந்தால் தட்டிப் பார்த்திருப்பேன்" என்ருன் அவன்.

" T.V பார்த்ததில் நான் கோட்டை விட்டிட்டேன்." என்ற சுரேஷ், தொடர்ந்து!! உவரும் (ஆசிரியரும்) T.V பார்த்தவர்! அப்ப என்னைக் கண்டவர். அதனலே அறுத்து விட்டார்" சொன்னன்

"நாங்க படிக்கனும்' என்றதை மறுக்கிரேம்" சொல்லிச் சிரித்தான் பாபு.

"(சுரேஷ்) நீ நளினியை கொப்பியடிச்சிருக்கலாம். பாஸ்மார்க் வந்திருக்கும் என்னை நம்பினது பிழை" என்ருன் அவன்

" கண்டறியாத பரீட்சை! விடடா கடைசிப் பரீட்சைக்கு இது ஒன்றும் உதவாது" என்று சுரேஷ் சொன்னதில் உண்மை இருக்கவே செய்தது.

எல்லார் முளையும் சமன் நிலைக்கு வர பிரிந்தார்கள்....

கோவில் வளவு பக்கம் பந்தை தட்டிவிட்டு வந்தபோது ரேடியோவிலே பாபுவின் குரல் ஒலித்தது.

"படியாமல் இருந்துவிடாதீர்கள். T.V பார்ப்பதால் என்னென்ன தீமைகள் ஏற்படுகின்றன..." என்று கொஞ்ச நேரம் அறுத்தான்

"பெரியவர்கள் ஒத்துழைக்க முன்வராததுக்கு நன்றி" என்று சொன்னன் சேர்ந்துவிட்டார்கள் போல....

'விளையாட்டு மைதானத்தை ஊடறுத்துக் கொண்டு பாதை இருந்ததால் அதை ஒழுங்கமைக்க வேண்டிய தேவை பெடியளுக்கே இருந்தது அதனல் பெரியவர்கள் நாடகம் ஆடினர்களோ?...? தோன்றியது

'வேலை தொடங்குவதால் விடைபெற்றுக் கொள்கிறேன்" என்று முடித்துக் கொண்டான்

பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தவன் இடையில் ஒரு தடவை ரேடியோவை.. திருப்பினன்.

" மீண்டும் ஒரு நன்றி" என்று அறிவித்தல் வந்தது "சேவை நோக்கில் தோளோடு சேர்ந்து நிற்கும் செல்லமுத்தண்ணைக்கு நன்றிகள்" என்ருன் பிறகு..

பாதை வீடற்ற காணி வளவுவரையில் மைதானத்தை சுற்றிக் கொண்டு போயிருக்கிறது' என்ருன் அதுவே சரியான முறை.

விடை பெற்றுக் கொண்டான்

'வேலை முடிந்த பிறகும் அலட்டி விட்டே படுப்பான்' என்று தோன்றியது.

சுரேஷும் ரேடியோ கேட்டிருந்தான் இருவரும் பாபுவை பள்ளிக்கூடத்திலே பாராட்டினர்கள் இவர்கள் பேச்சை அரை குறையாய் கேட்ட தமிழ் வாத்தி- சுந்தரம் நவாலியிலிருந்து வாறவர் பேப்பரிலே கதை கட்டுரை என எழுதுற ஒரு இலக்கியவாதி "டேய் இங்க வாங்கடா தம்பி" என்று கூப்பிட்டு" என்ன விசயம்" என்று கேட்டார்.

அவர்களுக்கு பிடித்த வாத்தியார் அவர்! கல்லுண்டாய்க் கடலிலே கடல் அட்டை பிடித்தவர்களைப்பற்றி சிறுகதை ஒன்று பேப்பரிலே எழுதியவர். அதை சுரேஷ் வெட்டி பத்திரப்படுத்த வைத்திருக்கிறன். 'நல்லகதை' 'ஆனைக்கோட்டை மக்களின் நிசமான வாழ்க்கை' என்று சொல்லலாம். யாழ்ப்பாண பேச்சுத் தமிழில் விளாசியிருந்தார்.

ஓட்டைவாய்கள் என்றதைவிட அந்த வாத்திக்கு தெரிந்தால்' எந்தகால குலனை மக்களும் வாசிக்கக்கூடிய வரலாருக படைத்து விடுவார் என்பதால் ரோடு போட்டதை விளக்கமாக சொன்ஞர்கள்' பரீட்சை வேணும்' என்ற அறுவையைச் சொன்ன போது சிரித்தார் பாபு வெட்கத்துடன் நின்ருன்.

அவன் தோளிலே தட்டி, " ரேடியோ திருத்துற அறிவை நீ நல்லாய் வளர்த்துக்கொள் பகிடி வேணும். நீ நிலமையை பகிடியாய் சொல்லியிருக்கிருய். வெட்கப்படாதே துணிந்து மேலும் கூடியவிளக்கத்துடன் செய்யப் பார்." என்று பாராட்டினர்.

பின்னேரம், முத்தனின் கடையிலே மூவரும் இருந்தார்கள். சுரேஷும் விளையாடாமல் வந்திருந்தான்.

" நீ ரேடியோவை சொல்லலேயடா நானும் கேட்டிருப்பேனே" என்ருன் முத்தன்.

" இனிக் கேளன்" என்ருன் பாபு. சுந்தரம் வாத்தியோடு கதைத்ததையும் சொன்ஞர்கள்.

"ரோட்டு வேலை இண்டையோட முடிஞ்சுவிடும்" என்ருன் பாபு "பிறகு, சினிமாப்பாட்டுகள் தான் கேட்க முடியும்" சிரித்தான்.

4-5 பஞ்சர்கள் வந்தன மனதை கவ்வியபடி இரண்டொரு பெட்டைகள் சைக்கிளில் போனுர்கள் "உதுகளிற்கு பஞ்சர் வரதாதா" நேர்ந்தார்கள்.

சிறிது இருள அரிக்கன் லாந்தரை ஏற்றினன். "டேய் ஏண்டா கள்ளக் கறன்ட் எடுக்கவில்லை" என்று கேட்டார்கள்.

"செய்யணும் என்றிருக்கிறேன் ஓலைக் கொட்டில் என்பதால் கொஞ்சம் யோசனை" என்று பதிலளித்தான்.

யாழ்ப்பாணத்தில் வசதியற்ற மக்கள் சிவில் நிர்வாகம் குழப்பியதால் வீதிக் கறன்ட் வயரில் ஒரு வயரை கொளுவி 'வயறிங்' செய்து மற்ற வயறை பைப் ஒன்றில் சேர்த்து கிடங்கு கிண்டி உப்பைப் போட்டு சரியான ஏர்த் அமைப்பை ஏற்படுத்தி எரிய விட்டார்கள். சிறிது ஆபத்துதான்.

மழைச் சமயங்களில் வயறில் வோல்ட்டேஜ் கூட வரும் போது எரிந்து விடலாம் கிடுகு ஓலைகள் ஒரேயடியாய் எரிந்து விடும். வாழ்க்கையே போராட்டம் தான்.


'பழைய பெற்ரேல்மாக்ஸ் இருந்தாலும் நல்லம் தான் எங்கடப் பக்கம் விசாரித்துப் பார்க்கிறேன்" என்ருன் சுரேஷ்.

"ரோடு போடணும் நான் கழுவுறேன் என்று எழும்பினன் பாபு. அந்நேரம் ஊரே கலவரப்பட்டது போல செய்தி வந்தது. யாரோ சிலர் குணத்தானின் தோளிலே வெட்டிப் போட்டு ஓடி விட்டார்களாம்.

கடையை மூடி விட்டு பள்ளிக்கூடப் பக்கம் ஓடினர்கள். சில தகவல்களை அறிந்தபிறகே வெட்டியவர்கள் பற்றி சிறிது அனுமானிக்க முடிந்தது.

அடுத்த இதழில் நிறைவு பெறும்.

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

**ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது**

**பரீட்சித்துப் பாருங்கள்**

Try First

**பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்**

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

---

**சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!**

## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரெபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




### NERVOGEN NERVE FOOD

உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.


அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.

Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder *இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது.* Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix *போன்றனவும் கிடைக்கும்.*




### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரெபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

# ஏ. ஆர். கே மார்க்கட்

**31-35 St.Dennis Dr**
**(Don Mills/Eglinton)**

**(416) 421 3429**

இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
பால் பழங்கள், உடன் மரக்கறி
வகைகள், இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் ...

வருமான வரிப் பத்திரங்களை பூர்த்தி செய்து
கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்

தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின்
ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும்
விற்பனைக்கும் பெறலாம்
CD, Audio மலிவு விலையில்

# A.R. K MARKET

# அமரர் திரு.ராஜீவ் காந்தி அவர்களின் மூன்றும் ஆண்டு நினைவாஞ்சலி

## 22 மே 1994

வாழ்க நீ எம்மான் ஈழம்
வாழ்கின்ற தமிழர் வாழ்வில்
சூழ்கலி நீங்க எம்மை
சூழ்ந்திடு பகையும் ஏங்க
வாழ்வினை பணயம் இட்டு
வனப்புறு திட்டம் கண்டாய்
ஊழ்வினை எம்மைச் சூழ
உத்தமா உன்னைக் கொன்றார்




பாரதத்திடை அன்பு செலுத்துதல் பாவமோ? மனஸ்தாபமோ?
கூறும் எங்கள் மிடிமையை தீர்ப்பது குற்றமோ? இதில் சொற்றமோ?
ஒற்றுமை வழியொன்றே வழியென்பது ஓர்ந்திட்டோம்: நன்கு தேர்ந்திட்டோம்
மற்று நீங்கள் செய்யுங் கொடுமைக்கெல்லாம் மலைவுறோம் சித்தம் கலைவுறோம்

-மகாகவி பாரதியார்-

**கனடா வாழ் ஈழத்தமிழர்களின் கண்ணீர் அஞ்சலி**



# எட்டப்பர்களின் கொடும்பசிக்கு இரையான தன்மானத் தமிழன் சபாலிங்கம் சபாரத்தினம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி.

சிங்களப் பேரினவாதத்தின் கொடும்பிடியில் இருந்த இலங்கைத்தீவின் தன்மானத் தமிழினத்தை தலைநிமிர்ந்து வாழச்செய்ய மிகுந்த வீரத்துடனும் நேர்மையுடனும் உங்கள் அரும்பணியை அறிவார்ந்த ரீதியில் ஆற்றிக்கொண்டிந்த அதேவேளையில் இந்தப் போராட்டம் வெறும் பொய்களினுலும் கட்டுக்கதைகளினுலும் வளர்க்கப்பட்டதல்ல, மிகப் பெரிய தியாகிகளின் தன்னலமற்ற தியாகங்களினுலும் அவர்தம் இரத்தத்தினுலும் கட்டியெழுப்பப்பட்டது, இது ஒரு தனி மனித சாதனை அல்ல, கொடுமைகள் கண்டு கொதித்தெழுந்த நயவஞ்சகமற்ற தமது இனத்தின் மக்களைத் தமது சொந்தமக்களாக எண்ணி அவர்படும் துன்பங்களைத் தமது துன்பங்களாக ஏற்றுச் செயல்பட்ட உன்னத வீரர்கள் தமது இன்னுயிர்களை ஈந்து வளர்ந்த போராட்டம் இது, அந்த உண்மைகள் சாகாமல் இருக்கும் பொருட்டு அவற்றை நீங்கள் ஆதாரங்களுடன் தொகுப்பதைக் கண்டு பொறுக்கமுடியாத, மறுக்கமுடியாத தமிழினத்தின் கோடரிக் காம்புகளாகப் பிறந்துவிட்ட அருவருக்கத்தக்க அவமானச்சின்னங்களால் அந்த இனத்தில் பிறந்துவிட்டமைக்காக அத்தனை தமிழர்களும் வெட்கித்தலைகுனியும்படியாக கோழைகளின் தலைவனின் கோழைத் தனத்திற்கு கைகட்டிச் சேவகம் புரியும் அடிமட்டக் கோழைகள் நாங்கள் தமிழர்கள் உங்களிடம் உதவிகேட்டு வந்தோம் உதவுங்கள் என்று உள்ளே நுழைந்து,

உண்மையின் உறைவிடமும் வீரத்தின் விளை நிலமுமான அஞ்சா நெஞ்சம் படைத்ததமிழனை உங்களைத் தமது கோழைத்தனத்திற்கு இரையாக்கி மாருத சரித்திரப் பழியைப் பத்தோடு பதினென்ருக தமது சொந்தச் சரித்திரத்தில் சேர்த்துக்கொண்டுள்ளனர். தமிழும் தமிழினமும் உள்ளவரை உங்கள் பெயர் வாழும். சரித்திரத்தை மறைக்க நினைப்போரின் சரித்திரத்திற்கு நிச்சயம் இந்த மறத்தமிழர்கள் சாவுமணி அடித்தே தீருவார்கள் இது சத்தியம்.

தமிழீழ விடுதலைக்கு அந்த மண்ணின் மக்கள் தரும் ஆதரவை தமது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு கட்டுப்பட்டு தரும் மரியாதையாகவும், அதுவும் ஒரு தனி நபருக்கான மரியாதையாகவும் கருதி செயற்படும் இவர்கள் வெறுமனே தெருச்சண்டித்தனங்களுக்கு லாயக்காணவர்களே தவிர, உண்மையான விடுதலையை அந்த மக்களுக்கும் பெற்றுத்தரும் வலிமையோ திறமையோ இவர்களுக்குக் கிடையாது என்பதை தமது ஒவ்வொரு நடவடிக்கைகளின் மூலமும் தெட்டத் தெளிவாகப் புரியவைத்துக் கொண்டிருக்கிருர்கள்.

நீங்கள் நேசித்த தமிழும், தமிழீழப் போராட்ட வரலாறு பற்றிய உண்மைகளும் ஏங்கி ஒலிக்கும் இதை யாராலும் தடுக்க முடியாது என்று உறுதி கூறுகிறேம். இதுவே

நாம் செலுத்தும் ஆத்மசாந்தி அஞ்சலி

"வரலாறுகள் அழிவதுமில்லை

உண்மைகள் சாவதுமில்லை"

**நண்பர்கள்**

**கனடா**

# தொடர் நாடகம்

# றொறன்றோவில் யாழ்ப்பாணம்



## காட்சி 3

தொடர்ச்சி

கணவன்– என்ன வீடெல்லாம் குப்பையாய் கிடக்கு. ஒரு பெம்பிளை என்ற பொறுப்பில்லை உமக்கு

மனைவி– நானும் இப்பதான் வேலையாலை வந்தனான். உங்களுக்கு இருக்கிற களைப்பும் அலுப்பும் எனக்கும் இருக்கும் என்பதை மறக்காதேயுங்கோ

கணவன்–வாய் வர வர நீளுது– இப்ப உம்மடை நியாயம் என்னென்றால் உம்மை இருக்க விட்டு விட்டு நான் தான் எல்லாம் செய்ய வேணும் என்று.

...

மனைவி– அப்படி யாராப்பா சொன்னது– சேர்ந்து பகிர்ந்து செய்வோம் எண்டு...

கணவன்– என்ரை அம்மா தங்கச்சிமாருக்கு நான் வீட்டிலை இருக்கேக்கை ஒரு வாளி தண்ணீர் கூட அள்ளிக் கொடுத்திருக்க மாட்டேன். இங்க சில வேளை உமக்கு சமைச்சும் வைக்கிறேன்.

மனைவி– ஓம் ஓம் நானும் வேலைக்குப் போகாமல் இருந்தேன் என்றால் நீங்களும் உங்கடை வீட்டில் மாதிரி இருக்கலாம்

கணவன்: அப்பதான் நான் இன்னும் கடன் காறன் ஆகலாம். நீர்தான் மற்றவையைப் போலை வீடு வேணும் வீடு வேணும் என்று கேட்டு கடைசியிலை வீட்டுக்கு பணம் கட்ட முடியாமல் வீடும் போய் கடன்காறனாய் நிற்கிறேன்.

மனைவி– வீட்டுக்கு நான்தான் ஆசைப்பட்டனான்? நீங்கள் ஆசைப்படவேயில்லை

கணவன்– உன்ரை கரைச்சலாலை தான் வீடு வேண்டினனான்.

மனைவி– பொய் சொல்லாதேயுங்கோ நீங்கள் சொல்லேலேல்லையே, உங்கடை நண்பன் வீடு வேண்டி அதை வித்து 15 ஆயிரம் டொலர் ஒருவர் லாபம் எடுத்தவர் என்று. அந்தப் பிளானோடைதானே வீடு வேண்டினீங்கள் பிறகு, இங்கு நிலைமை தலைகீழாய் மாறினதிற்கு நான் என்ன செய்யிறது.

கணவன்– நீ என்ன செய்யிறது, கொப்பரும் கொண்ணைமாரும் பேசின காசை தரச்சொல்லு ஊரிலை தந்த சீதன வீடு எனக்கு வேண்டாம் அதற்கு பெறுமதியான காசை இங்கை தரச்சொல்லு.

மனைவி– எனக்கு ஒன்றும் தெரியாது. இது எல்லாம் எப்போ நடந்த கதைகள் உங்கடை வீட்டுக்காரர் சீதனம் பேசேக்கை என்னை வைச்சுக்கொண்டு பேசேலை. உங்களுக்கு விருப்பம் எண்டால நீங்கள் கேளுங்கோ

கணவன்– சுவிசிலை இரண்டு அண்ணைமார் உழைக்கிறாங்கள் இங்கை உன்ரை தம்பி ஒருத்தன் உழைக்கிறான். எனக்கு சொன்ன காசை வேண்டி தா அல்லாவிட்டால் வீணாய் பிரச்சனை படுவீர்கள்.

மனைவி– கல்யாணம் செய்ய நீங்கள் ஊருக்கு வந்த நேரம் இந்தப் பிரச்சனைகளை முடிச்சிருக்கவேணும் அண்ணன்கள் பாவம். அவர்களுக்கு இருக்கிற கரைச்சல் அவர்களோடை அவங்கள் இப்ப பணத்திற்கு எங்கை போவாங்கள் உங்களுக்கு விருப்பம் எண்டால் ஊருக்கு போய் வீட்டை விற்றுப் போட்டு வாங்கோ.

கணவன்– உங்கட வீடு பெரிய திறமான வீடு, போற ரிக்கற் காசுக்கு காணுமே?

மனைவி: அப்ப என்னை என்ன செய்யச் சொல்லிறியள்

கணவன்–எனக்கு எத்தனை இடத்திலை கல்யாணம் பேசிவந்தது. போயும் போயும் உங்கடை குடும்பத்திலை போய் மாட்டுப் பட்டேனே?

மனைவி– ஒரு குழந்தையும் பெத்துப் போட்டு ஏன் இப்படி பேசிறியள் நானும் உப்படி திருப்பி சொல்ல நேரம் ஆகாது.

கணவன்– ஊர் எண்டால் இப்ப உம்மை அடிச்சு கலைச்சுப் போடுவேன்.

மனைவி– ஓம் ஓம் ஊர் எண்டால் என் அப்பாவும் அண்ணைமாரும் உங்களுக்குத்தான் என்னை செய்து வைச்சிருப்பினம், ஏதோ கனடா எண்டு காணாததை கண்டு விட்டோம் என்று ஏமாந்து தான் என்னை உங்களுக்கு கட்டி வைச்சவை.

கணவன்– என்னடி கனடாவுக்கும் எனக்கும் என்னடி குறை? உனக்கு இங்க கொழுப்பு. வேலை செய்யிறேன் இங்கை ஒண்டும் செய்ய முடியாது என்ற திமிர்.

மனைவி – ஓம் எனக்கு திமிர்தான்

## காட்சி 4

முன்பிருந்த அதே நபர் தொடர்ந்து தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கின்றார். இடைக்கிடை பியர் குடித்துக்கொண்டே

ஓம் ஓம்– இப்படித்தான் தொடங்கி கடைசியிலை வெளிக்கிட்டு போயிட்டா....

....

என்ரை தவறுகளிலை அவள் சுடர் விடுகின்றாள்

..........

பாரும். ஒரு நாள் முடிஞ்சுப் போகும் இவ்வளவுக்கு அவள் ஒரு ரெலிபோன் எடுக்கேல்லை

....

எனக்கென்ன வெட்கமில்லையே நான் ரெலிபோன் எடுக்க...

....

நான் போய் பிள்ளையை கொண்டு வரப்போகிறேன்...

...

இது ஊர் இல்லாமல் போச்சு இவங்களும் இவங்கடை சட்டங்களும்!

....

நீர் வந்து என்னத்தை செய்யிறது

....

......சரி அப்ப நீர் வாரும்...

..நான் குடிக்கேல்லை எனக்கு இப்ப என்ரை மகளைப் பார்க்க வேணும்....

தொடரும்

செல்வம்

# சூரியனைக் கண்டு மறையும் Money

**அறுஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி**

சென்ற வாரம் கார் ரேஸிங் பற்றி எழுதியிருந்தேன். அதில் நடந்த விபத்துக்கள் பற்றி எழுதியிருந்தேன். அடுத்ததாக மூன்று பேர் விபத்துக்குள்ளாகியிருக்கிறார்கள். மொனக்கோ கிறே(ன்) பிறியில் கார்ல் வெண்ட்லிங்கர் என்ற ஆஸ்திரிய ட்ரைவர் சுவரோடு மோதிக் கொண்டு கோமாவில் இருக்கிறார். இன்டியானா ரேஸிலும் போல் ட்ரேசி, ஸ்கொட் குட்இயர் என்ற இரண்டு பேர் விபத்துக்குள்ளானார்கள். இவர்கள் இருவரும் கனடியர்கள். இப்போது இந்த கார் ரேஸ்களில் பாதுகாப்பு பற்றி அக்கறை எடுக்க வேண்டும் என்ற குரல் எழுந்திருக்கிறது.

கார் ரேஸ்கள் சம்பந்தப்பட்ட விதிகளை அமைக்கும் அமைப்பு International Automobile Federation. இது சங்கங்களுக்கு எல்லாம் தாய்ச் சங்கம். இதற்கு போட்டியாக முன்பு இன்னொரு சங்கம் திறக்கப்பட்டது. Formula One Constructors Association-FOCA இது அரசாங்க உதவிப் பணம் பெறுவதற்காக அமைக்கப்பட்டதோ என்னவோ. இது தாய்ச் சங்கத்தோடு முரண்டு கொண்ட பந்தய கார் தயாரிப்பாளர்கள் தொடங்கியது. இப்போது இதைக் காணோம். இந்த FIA தற்போது புதிய விதிமுறைகளை அமைத்து விபத்துக்களை தவிர்ப்பது பற்றி யோசிக்கிறது.

★ ★ ★

நேற்று இரவு மொனகோ கிறே பிறி பார்த்தேன், டீவியில்.. ஜேர்மன்காரரான மைக்கேல் ஷுமாக்கர் வெற்றி பெற்றார். இம்முறை சர்வதேச சாம்பியனாக இவர் தான் தெரிவு செய்யப்படலாம்.



> **'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'**

இவருக்கு போட்டியாக அடுத்து வருபவர் ஜெராட் பேர்கர்.

★ ★ ★

அடடே.. கியூறியஸ் ரேஸிங் கார் ஓடிய விசயத்தை சொல்ல மறந்து விட்டேனே... கொஞ்ச நாளைக்கு முன்னர் நானும் இந்த ரேஸிங் கார் ஓடினேன். பல தடவைகள் றோட்டை விட்டு விலகி, புல் தரைக்குள் ஏற்றியதுடன் சில தடவைகள் மற்ற கார்களுடன் மோதிக் கொள்ளவும் நேரிட்டது. நல்ல காலம் காயங்கள் இல்லாமல் தப்பித்துக் கொண்டேன். பயத்தினால் ஓடுவதை நிறுத்தவில்லை. காரணம் அந்த user friendly விசயம் தான்.

இதுதான் விசயம்.. ஐ.பி.எம் கம்பியூட்டர்களுக்கான புறோகிராம் ஒன்றுண்டு. கிறே பிறி ரேஸிங் என்ற பெயரில்... புறோகிராமை கம்பியூட்டரில் போட்டதும் நீங்கள் எந்த circuit இல் ஓடப்போகிறீர்கள் என்பதை தெரிவு செய்ய வேண்டும். பிரேசில், மொனகோ, மொன்றியல் என்று சகல இடங்களிலும் உள்ள மைதானங்களைத் தெரிவு செய்யலாம். பின்னர் என்ன கார் ஓடப் போகிறீர்கள் என்பதைத் தெரிவு செய்ய வேண்டும். பெராரி, மக்லாரன் ஹொண்டா என்று சகல வகைகளும் உண்டு. (இப்போது ஹொண்டா போட்டியில் ஈடுபடுவதில்லை. வருடாந்தம் ஐந்து கோடி டொலர்கள் செலவிட தன்னால் முடியாது என்று கைவிரித்து விட்டது) எந்தக் காரை ஓடப் போகிறீர்கள் என்பதை தெரிவு செய்ய வேண்டியது தான்.

பிறகென்ன.. தொடங்குவதற்கு சிக்னல் கிடைத்ததும் ஓட வேண்டியதுதான். கம்பியூட்டரின் மவுஸை கிளிக் பண்ணுவதன் மூலம் ஓட்டிக் கொள்ள வேண்டியதுதான். அப்போதுதான் புல்தரை ஏற்றியதும், மோதிக் கொண்டதும்..

ஐ.பி.எம் கம்பியூட்டர்கள் மீதான வெறுப்பு காரணமாக தொடர்ந்தும் ஓட முடியவில்லை. மக்கின்ரோஷ் கம்பியூட்டர்களுக்கு இந்த புறோகிராம் உண்டு. என்னிடம் இன்னமும் கிட்டவில்லை. அது கிடைத்ததும் என் ரேஸிங் தொடரும். அதன் பின்னர் எனக்கு இந்த உலக சாம்பியன் பட்டம் கிடைக்காமலா போகப் போகிறது?

★ ★ ★

மொன்றியலில் தமிழருக்கு ஒளிவீசி வழிகாட்டும் நிறுவனம் ஒன்று.. அரச உதவிப் பணத்தில் மக்களுக்கு சேவை செய்து கொண்டிருக்கிறது. இந்த நிறுவனம் தற்போது கணக்கியல் வகுப்புகளை ஆரம்பித்திருக்கிறது. இதில் சமூக உதவிப் பணம் பெறுவோரே கலந்து கொள்ள முடியுமாம். சரி, தமிழ் மக்களுக்கு சேவை செய்கிறோம், இதில் படித்தால் நீங்கள் நல்ல தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம், அறிவைப் பெருக்கலாம் என்று விளம்பரம் போடுவோம் என்றில்லை. 'இந்த வகுப்பில் சேர்ந்து கொண்டால், Non Participant என்று கியூபெக் மாநில அரசு இந்த வகுப்புகளுக்கு போகாதவர்களின் சமூக உதவிப் பணத்தில் வெட்டும் கழிவுப்பணத்தை எந்த வித வெட்டுமின்றி பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்' என்று விளம்பரம் செய்திருக்கிறார்களாம். மொத்தத்தில் இந்த வகுப்புக்கு நீங்கள் சும்மா வந்து போங்கோ, உங்களுக்கு கூட வெல்பெயர் காசு வரும் என்ற மாதிரி.

அரசாங்கம் வெல்பெயரில் இருப்பவர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக பணம் செலவிட்டு வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களைக் கூட்டுகிறது. இவர்கள்

**அறு(சு)வை**

என்னடாவென்றால், அரசாங்கத்தை கருவறுப்பதற்கு வழிகாட்டுகிறார்கள். என்ன உலகமைய்யா இது!

★ ★ ★

சென்ற வெள்ளிக்கிழமை 13ம் தேதியில் பிறந்தது. 13ம் தேதி வெள்ளியில் வந்தால் ஏதோ கூடாது என்ற பயம். 13ம் இலக்கம் பற்றிய பயத்துக்கு Triskaidekaphobia என்று பெயர். வாய்க்குள் நுழையாத சொல் இது. இங்கு கூட கட்டடங்களில் பதின்மூன்றும் மாடியில் இல்லாததற்கு இது தான் காரணம். விமானங்களில் பயண அட்டவணைகளில் பதின்மூன்றும் இலக்கம் இருக்காது. பாரிஸில் வீதிகளில் 13ம் இலக்கம் இருப்பதில்லையாம். Friday 13th என்று படங்களும் டி.வி தொடர்களும் வந்தது தெரிந்திருக்கலாம். இந்த வருடத்தில் வந்த ஒரே ஒரு 13ம் திகதி வெள்ளிக்கிழமை சென்ற வாரம் மட்டும் தான். வழமையில் வருடத்திற்கு இரண்டு தடவைகள் இது வரும். 1998 இல் மூன்று தடவைகள் வரும்.

வெள்ளிக்கிழமைகள் பலருக்கு புனிதமான நாள். விரதம் முதல் கொண்ட வழிபாடுகள் வரை.. வானொலிகள் கூட வெள்ளிகளில் பக்திப் பாடல் போடுமே. ஆதாம் ஏவாள் காலத்திலிருந்தே இந்த வெள்ளி துரதிட்ட சம்பவங்கள் நிறைந்த நாள். கடவுளின் சாபத்திற்கு ஆதாம் ஏவாள் ஆளானது வெள்ளியில் தான். யேசுவின் இரவுணவின் போது பதின்மூன்று பேர் மேசையில் இருந்தார்கள். பதின்மூன்றும் ஆள்தான் யூதாஸ். அவன் தற்கொலை செய்து இறந்தது வெள்ளியில்.

பைபிளில் அதிகமாக துரதிட்ட விடயங்கள் நடந்தது வெள்ளியில் தான். நோவாவின் காலத்தில் பெருவெள்ளம் தொடங்கியது வெள்ளியில். சாலமோனின் கோயில் இடிந்தது வெள்ளியில். யேசு சிலுவையில் அறையப்பட்டது வெள்ளியில்.

இருந்தாலும் இந்த பதின்மூன்றும் இலக்க பயத்தை வெல்ல முயல்பவர்களும் இருக்கிறார்கள். 13ம் கிளப் என்று ஒன்று நியூ யோர்க்கில் 1884இல் தொடங்கப்பட்டது. லண்டனில் 1890ல் உருவாக்கப்பட்டது. அமெரிக்காவின் தேசிய 13ம் சபை வருடத்தில் ஒரு தடவை 13ம் திகதி வெள்ளி கூடும். இவர்கள் கூடும் போது கண்ணாடிகளை உடைப்பதுடன் மேசையில் 13 பேர் உட்கார்ந்து சாப்பிடுவார்கள். சாப்பிடும் போது நேரம் 13 மணியைக் காட்டும்.

அதுசரி, நியுமரோலஜிபடியே பிள்ளைகளுக்கு பெயர் வைக்கும் நம் விண்ணர்கள் 13ம் திகதிகளில், அதுவும் வெள்ளியில் பிறந்த பிள்ளைகளுக்கு என்ன செய்வார்களோ? எதற்கும் இவ்வார வீரகேசரியைப் பார்த்தால் போகிறது. பதினைந்து நிமிடப் புகழில்..

★ ★ ★

குமுதம் ஆசிரியர் அண்ணாமலை காலமாகி விட்டார். பத்திரிகை நடத்திய நாற்பதாண்டுகளில் அவரது படம் எதிலும் வந்ததில்லை. தன்னை அடையாளம் காட்டியதில்லை. அவர் முகம் யாருக்குமே தெரியாது. இப்போது தான் அரசு என்பது கூட அவர் தான் என்கிறார்கள். உரசுவில் மறுபிரசுரமாகின்ற வைரமுத்துவின் 'இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்களில்' கூட வைரமுத்து அவர் பற்றி எழுதியிருக்கிறார்.

முன்பு இவரும் தமிழ்வாணனும் பத்திரிகை நடத்திய போது முதல் இதழ்களில் 2500 அடித்து 1500 விற்காமல் திரும்பி வந்த போது அவற்றைக் கட்டி கிணற்றில் போட்டு விட்டு தொடர்ந்தும் ஆவேசத்தோடு நடத்தியிருக்கிறார்கள். பின்பு தமிழ்வாணனின் கல்கண்டும், அண்ணாமலையின் குமுதமும் புகழ் பெற்றன.

அவருக்கான அஞ்சலியில் பாலு மகேந்திரா எழுதியிருக்கிறார். தமிழ் சஞ்சிகைகளை அட்டையை கழற்றி விட்டால் வித்தியாசம் தெரிவதில்லை. தமிழ் சஞ்சிகைகள் தமிழ் மக்களின் சிந்தனையை மழுங்கடித்துள்ளன என்று அண்ணாமலையிடம் கூறிய போது பொறுமையாக நடைமுறைச் சிக்கல்களைச் சொன்னாராம். இதிலிருந்து தான் தன்னால் 'முரண்பாடுகளுக்கு இடையிலும் உடன்பாடுகளைக் காணமுடியும்' என்ற தத்துவம் புலப்பட்டதாம் என்று பாலு மகேந்திரா எழுதியிருக்கிறார்.

எங்களுக்கு விபரம் தெரிந்த காலம் தொட்டு ஒரே வடிவமைப்பு, விடய தெரிவு இருந்து வெற்றி பெற்ற ஒரே சஞ்சிகை. காரணம் தனது வாசகர்கள் குறித்து சரியான எண்ணப்பாட்டை குமுதம் கொண்டிருந்தது தான். இளவட்டங்களுக்கான கவர்ச்சி— ஜொள் விவகாரங்கள், அந்தந்தக் காலங்களுக்குரிய விதத்தில் மாற்றங்களை உணர்ந்துகொண்டமை, லைட் ரீடிங் விடயங்கள், (வாசித்து முடிந்ததும் மனதில் நிற்பது நடிகைகளின் கிசுகிசுக்கள் தான்) அரசியல் சர்ச்சைக்குள் நுழைந்து கொள்ளாமை போன்ற விடயங்கள் வியாபார ரீதியாக வெற்றியைத் தேடிக் கொடுத்தன. இந்தியாவில் அதிகளவில் விற்பனையாகின்ற வார இதழ்களில் ஒன்று என்ற அளவில் சாதனை படைத்தது. முதலாவது விற்பனை மலையாள மனோரமா என்று நினைக்கிறேன்.

குமுதம் ஒருநாளும் 'மக்களுக்கு சேவை செய்வதற்காக பத்திரிகை நடத்துவதாக சொன்னதில்லை'. வைரமுத்துவின் வார்த்தைகளில் சொல்வதானால் 'ஆறு வார இடைவெளிகளுக்குள் ஒருவனுடைய பெயர் ஒருமுறையாவது குமுதத்தில உச்சரிக்கப்படா விட்டால் உங்கள் கணக்கில் அவன் இல்லாவிட்டால் நாட்டுக்கு ஒன்றும் நட்டமில்லை என்று அர்த்தம். அதாவது அவன் இருந்து கொண்டே இறந்து விட்டான் என்று அர்த்தம்'.

அப்படியென்றால்... இப்போ நீண்ட காலமாக குஷ்பு பற்றி ஒன்றையும் காணோமே.. முன்னைய வருடத்து ஏப்ரல் முட்டாள் தின குஷ்பு— பாலசந்தர் திருமண உடான்ஸ் கதையிலிருந்து குஷ்பு பற்றி இருட்டடிப்பு நடக்கிறதே.. பாவம் குஷ்பு. ரசிகர்களும் கைவிட்டு, குமுதமும் கைவிட்டு...

★ ★ ★

Battle of the Media தொடர்கிறது. உரசு பத்திரிகை இலவசமாக வெளிவரத் தொடங்கியிருக்கிறது. கியூறியஸ் தெரிவித்த ஹேஸ்யம் பலித்தது. இந்த தொடர்பு சாதன யுத்தத்திற்கு இடையில் தர்மம் பற்றிய பேச்சு நன்றாக அடிபடுகிறது. யுத்த தர்மம் போலவே பத்திரிகா தர்மம் என்று ஒன்று உண்டென்றும் தங்கள் பத்திரிகை வணிக நோக்கத்துடன் (இது சுந்தர ராமசாமியின் கூட்டத்திற்கு வந்ததன் பாதிப்பான வார்த்தைப் பிரயோகமாக இருக்கலாம்!) ஆரம்பிக்கப்படவில்லை என்றும் பத்திரிகா தர்மத்தை விட்டு விலகி, வியாபார நோக்கு ஒன்றுடன்

வெளிவருகின்ற ஒரு பத்திரிகையின் செயற்பாட்டால் தாங்களும் இலவசமாக வெளியிட வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும், இது பற்றி மற்றப் பத்திரிகைகள் தவறாக விளங்கிக் கொள்ள வேண்டாம் என்றும் (இது கியூறியஸிற்காக!) வந்திருக்கிறது.

எனக்கு இதில் பல லொஜிக்குகள் உதைக்கின்றன. வணிக நோக்கத்துடன் ஆரம்பிக்காத பத்திரிகை வணிக நோக்க பத்திரிகையின் வரவால் பாதிக்கப்பட்டது எவ்விதத்தில்? விளம்பர வருமானத்திலா? விற்பனையிலா? சரி, இப்போது இலவசமாக கொடுக்க முடியுமாயின் ஏன் முன்பு கொடுக்கப்படவில்லை. இப்போது இலவசமாக கொடுப்பது விளம்பர டொலர்களை அள்ளும் நோக்கில் அல்லாமல் வேறென்ன?

அதை விட உதைக்கின்ற இன்னொரு விசயம்.. பத்திரிகையின் பின்பக்கத்தில் இருக்கும் விளம்பரம்.. "எங்கள் பத்திரிகையில் விளம்பரம் செய்யுங்கள். உங்கள் வசதிக்கு தகுந்த விதத்தில் விளம்பரம் செய்யப்படும்." அதாவது விளம்பர ரேட் என்று எதுவும் கிடையாது. ஐந்து டொலர் கொடுத்தால் அதற்கும் விளம்பரம் செய்யப்படும்.

★ ★ ★

கியூறியஸின் பேரனுர் ஒரு சட்டத்தரணி கிழவர் ஒருவரை முன்பு காட்டி சொன்னுர்.. இவர் 25 சதத்திற்கு வழக்கு பேசுபவர் என்று. கொடுக்கின்ற பணத்திற்கு தகுந்தபடி பேசுவாராம். அப்படியென்ருல் தவணை எடுத்துக் கொடுப்பதாயிருக்கும்.

இதைப் போல, பணத்திற்காக எப்படி எல்லாம் இறங்கிப் போக வேண்டியிருக்கிறது. வெளியில் கியூறியஸிற்கு தன்னை எழுத்தாளன் என்ருே பத்திரிகையாளன் என்ருே சொல்ல வெட்கமாயிருக்கிறது. அவ்வளவுக்கு பத்திரிகைக்காரர்கள் இறங்கிப் போய் விட்டார்கள். பத்திரிகையாளர் என்ருல், பஸ் நிலையத்தில் இருந்து "25 சதம் பிளீஸ்" என்று கேட்கிற பைத்தியப பிச்சைக்காரன் மாதிரி வந்துவிட்டது. எழுத்தாளன் என்ருல் ஜோல்னுப் பைகளாய் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. போட்டி என்பதற்காக இப்படியா?

★ ★ ★

இந்த வாரம் அருவிப் பத்திரிகையும் இலவசம் என்றிருந்தது. என்னப்பா.. . சூரியனைக் கண்ட பனி போல மறைவது என்பார்கள். இங்கே சூரியனைக் கண்டதும் money (அதாவது பத்திரிகைகளின் விலை) மறைகிறதோ.. உள்ளே பார்த்தால் இறுதிப் பதிப்பு, இலவசம் என்று இருந்தது. கியூறியஸ் பத்திரிகைத் தொழிலில் இருப்பதாகக் கூறும் அதே காரணங்கள், சிக்கல்கள் காரணமாக பத்திரிகை நிற்கிறது. இருந்தாலும் நிறுத்துகின்ற துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது. அத்துடன் இறுதிப் பத்திரிகையில் சபாலிங்கத்தின் கொலைக்கு கண்டனம் கூட தெரிவிக்கப்பட்டிருந்தது.

கனடா தமிழ் பத்திரிகைகளில் எந்த விதமான சர்ச்சைக்குள்ளும் அகப்படாமல் தன் பணியைச் செய்த பத்திரிகை அருவி. அதிலும் நேர்த்தியான வடிவமைப்பு, பொருத்தமான விடயத் தேர்வு போன்ற விடயங்கள் இருந்தும் பத்திரிகையினுல் தாக்குப் பிடிக்க முடியாதது வருத்தத்திற்குரியது. இருப்பினும் அதற்கு என்று ஒரு விசேடமான வாசகர் கூட்டம் இருந்தது.

ஆசிரியர் சந்திரமோகன் எழுதிய 'நீங்களும் பேச்சாளராகலாம்' என்ற நூல் சிறுவயதில் கியூறியஸ் வாசித்தது. அமிர் உட்பட பல்வேறு பேச்சாளர்களைப் பேட்டி கண்டு எழுதியிருந்தார். யாழ். பஸ் நிலைய மின்சார நிலைய வீதியில் இருந்த பெட்டிக்கடை ஒன்றில் அந்த நூல் இருந்தது இப்போதும் என் கண்முன் நிற்கிறது.

பிரிவோம், சந்திப்போம், No hard feelings!

★ ★ ★

எனக்கு ஒரு சந்தேகம். தமிழர்களால் அதிகம் வாசிக்கப்படும் தமிழ் பத்திரிகை எது என்பது. புலிகள் தாங்கள் தான் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்றது மாதிரி, இப்படியான உரிமை கோரல் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. ஆனுல் வீட்டுக்கு வீடு கொண்டு போய் வினியோகித்து, போதாக்குறைக்கு இப்படி உரிமை கோருகின்ற பத்திரிகைகளை விட அதிகளவில் கடைகளிலும் வைத்து வினியோகிக்கப்படுகின்ற உலகத்தமிழர் பத்திரிகை மௌனமாக இருக்கிறது. அதுதானே அதிகளவில் அச்சிடப்படுகின்ற பத்திரிகை. ஒருவேளை தங்கள் பத்திரிகைகளை யாருமே வாசிப்பதில்லை, இதனுல் வாசகர் எண்ணிக்கை அதிகமாக இருக்காது என்று அவர்களுக்கே தெரியுமோ என்னவோ?

★ ★ ★

உலகத்தமிழரில் மீண்டும் வேதாளம் சங்கப்பலகையில் ஏறியிருக்கிறது. அரசியல் பலகை என்று வெண்பலகையில் ஏறிச் செல்லும் கணித வரைபுப் படத்துடன்.... உரசிலே கிடைத்த தோல்வியோ என்னவோ? "சரித்திரத்தை எழுதுபவர்கள் இருக்கிருர்கள். திரிப்பவர்களும் இருக்கிருர்கள். சிறிலங்காவின் சரித்திரம் அன்று தொட்டு இன்றுவரை திரிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதிலும் கடந்த நூறு ஆண்டுகளாக திரித்தல் படுவேகமாக நடைபெறுகிறது" என்று முழக்கியிருக்கிருர். அதுசரிங்க.. சரித்திரம் வழிகாட்டுகின்றது என்கிறீர்களே.. யாழ்ப்பாணக் கோட்டையை ஆக்கிரமிப்பின் சின்னம் என்று இடித்தல் எந்த ரகத்தில் அடக்கமாம்.. அது திரித்தல் இல்லையா? அடுத்த தலைமுறையின் நினைவில் இருந்து அழிக்கும் முயற்சி இல்லையா? தமிழ் ஆயுதப் போராட்டத்தில் மற்ற இயக்கங்கள், அமைப்புகளின் பங்களிப்புகள் இருட்டடிக்கப் படுகின்றனவே.. அது திரித்தல் இல்லையா? தற்போது சபாலிங்கத்தின் கொலை எதற்குள் அடக்கம்? சரித்திரத் திரிப்புக்கான முயற்சி இல்லையா?

சரித்திரம் என்பது நடுநிலையாளன் எழுதுவது.. வெற்றி பெற்றவன் எழுதுவது சுயபுராணம். அதற்கு பெயர் சரித்திரம் இல்லை. நூருண்டு என்ன, கண்ணுக்கு முன்னுலேயே புலிகள் சரித்திரத்தை திரிக்கிருர்கள். வரலாறின் வழி நடப்பவர்களே வரலாற்றை திரிக்கிருர்களே.. அப்போது உம் நெற்றிக் கண் எங்கே போனது? நக்கீரனின் நெற்றிக் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது யாரோ?

ஜலண்டின் தராக்கி எழுதிய கட்டுரையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது... ஆயுதங்களின் பலத்தினுல் வெல்பவர்களுக்கே வரலாறு சொந்தமானது, அவர்கள் சொல்வதன் படியே வரலாறும் எழுதப்படும்.

★ ★ ★

சென்ற வாரம் ஜலண்டில் தராகி எழுதிய கட்டுரை ஒன்று புயலைக்

கிளப்பி விட்டது. பாரிஸில் கடைகளில் இருந்த சகல ஜலண்டுகளையும் புலிகள் அள்ளிச் சென்று விட்டார்களாம். காரணம் மூன்று கட்டுரைகள். ஒன்று தராக்கியின் கட்டுரை.. மற்றது 'வட அமெரிக்காவில் எங்கோ இருந்து' எழுதும் ஒருவரின் கட்டுரை. இன்னொன்று லண்டனில் புலிகள் கிளையில் ஏற்பட்டிருக்கும் உட்கட்சி மோதல். சபாலிங்கத்தின் மரணத்துக்கும் புலிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் புலிகள் ஏன் இவ்வளவு தூரம் கஷ்டப்பட வேண்டும்? புலிகளின் முதலீடு உள்ளதாக கூறப்படும் வாரப் பத்திரிகையின் கனடியப் பதிப்பு சபாலிங்கம் பற்றி பொய்யான அவதூறு செய்தது. தலையாடாமல் வால் ஆடியதோ என்னவோ! போதாக் குறைக்கு ஜலண்ட் பறிப்பு. மொத்தத்தில் சபாலிங்கம் கொல்லப்படுவதிலும் அது புலிகளால் செய்யப்பட்டது என்ற செய்தி மக்களுக்கு போய் சேராததிலும் ஏதோ ஒருவகையில் புலிகளுக்கு நன்மை இருக்கிறது.

லண்டன் புலிகள் அலுவலகத்தில் சேகர், சாந்தன் என்ற இருவருக்கும் இடையில் மோதலாம். கிட்டு வெளியேற்றப்பட்ட பின்னர் அங்கு பொறுப்பாய் இருந்தவர் சாந்தன் என்ற என்ஜினியர். இவர் புதியவராக இருந்தாலும் நன்றாக செயற்படுபவர். சேகரோ பிரபாகரனுக்கு நெருக்கமானவர். கடந்த பத்து வருடங்களாக லண்டனில் இருப்பவர். இவர்களின் மோதல் பற்றி திலகர் இருவரையும் எச்சரித்திருக்கிறார், பிரச்சனைகளை தாங்களே தீர்க்கும்படி. சாந்தன் லண்டன் வாழ் புலி ஆதரவாளர்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கவர், சேகர் புலிகளின் தலைமைப்பீடத்துடன் செல்வாக்கு மிக்கவர். பிரபாகரனுடன் நேரடி நட்பு கொண்டவர். பாலசிங்கத்தின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர். சாந்தனுக்கு அவ்வாறான செல்வாக்கு இல்லை. இந்த மோதல் பற்றி ஜலண்ட் கட்டுரையில் 'நமது விசேட நிருபர்' எழுதியிருக்கிறார். புலிகள் பாரிசில் ஜலண்டை அள்ளிச் சென்றதற்கு இந்தக் கட்டுரையும் காரணமாயிருக்கலாம். பூனை பாலைக் குடிக்கும் போது கண்ணை மூடிக் கொள்ளுமாம். உலகம் இருண்டு விட்டது என்று நினைத்தபடி.. வரலாற்றை மறைப்பதற்கு பத்திரிகைகளைப் பறிக்கலாம் என்று கியூறியஸ்க்கு இப்போது தான் தெரிகிறது.

# உபாலியுடன் தொடர்பினால் கூரேயிற்கு சிக்கல்

பிரபல கேடியான சொத்தி உபாலியுடனான தனது தொடர்புகள் மிகைப்படுத்தப்பட்டிருப்பதாக சிறிசேன கூரே தெரிவித்திருக்கிறார். உபாலியை பிரேமதாசாவே கட்சிக்குள் சேர்த்துக் கொண்டதாகவும் இறுதி ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் நிறைவேற்றுக் குழுவுக்குள் பிரேமதாசா உபாலியைச் சேர்த்ததாகவும் கூரே தெரிவித்தார்.

79ல் தான் மேயராக இருந்த போது உபாலி தனது அலுவலகத்திற்கு வெளியே தனக்கு வரவேண்டிய பணம் தரப்படவில்லை என்று சத்தம் போட்டதிலிருந்தே அவரைத் தனக்குத் தெரியும் என்றும் 83இல் சுகதாச மைதானத்தைப் பராமரிக்கும் ஒப்பந்தத்தை அவருக்கு கொடுத்ததாகவும் தேர்தலின் போது உபாலியும் அவரது ஆட்களும் ஐ.தே.கட்சிக்காக வேலை செய்து மேடைகள், அலங்காரங்களை ஜே.வி.பியின் பயமுறுத்தல் மத்தியிலும் செய்ததாகவும் இதனால் கவரப்பட்ட பிரேமதாசா அவரைக் கட்சிக்குள் சேர்த்துக் கொண்டதாகவும் கம் உதாவ கொண்டாட்டங்களில் உணவு விற்பனையிலும் உபாலி ஈடுபட்டதாகவும் சமீபத்தில் விஜேதுங்க கலந்து கொண்ட விழாவிலும் உபாலி கலந்து கொண்டதாகவும் கூரே கூறினார். முன்பு பல டெண்டர்களில் உபாலிக்கு தான் உதவியதாக கூரே ஒத்துக் கொண்டார்.

கூரே செயலாளர் பதவியிலிருந்து விலகிக் கொண்டதிலிருந்து அவர் மீதான நெருக்கடிகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. சமீபத்தில் அவரது வீடு பொலிசாரால் சோதனையிடப்பட்டு அங்கிருந்த காவலர்களின் ஆயுதங்களும் பறிக்கப்பட்டன. அவரது ஆயுதங்களை திருப்பிக் கொடுக்கும்படி மற்ற அமைச்சர்கள் சிலர் கூறினர். தற்போது ஆயுதங்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளன.

*This newspaper is published by Georgicka communications.*
*A member of Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
**Georgicka communications**
**P.O.Box 1031, Station "F",**
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216 @Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றி உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்க என்பவற்றை வரவேற்கிறோம். உங்க கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்க உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரி முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண் பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாம மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபே இலக்கங்களையும் விலாசங்களையு குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்ப கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப் படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரிய கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்

## தாயகம் சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டு (தாயகத்தின் பெயருக்கு அல்

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்


★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

Sujan

SIVA'S TRADING CO LTD 321-2739

# ஸ்காபரோ நகரின்
# தன்னிகரற்ற
# தமிழ் வியாபார நிலையம்

**அனைத்துப் பொருட்களும் மலிவுவிலையில்**

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

## சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

**3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)**
**TEL:(416) 321 2739**

## P.S.T.T

**5210 FINCH AVE EAST #23**
**(FINCH/MIDDLEFIELD)**
**TEL:609-0141**

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

**VIDEO TRANSFER (ANY SYSTEM) $8.99**